# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 257 | ஆடி 25ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 10 ஒகஸ்ட் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


# அமைச்சரவையைச் சரிசெய்ய குரே. விக்கியிடம் வலியுறுத்து

## வடக்கு மாகாணசபையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 10

வடக்கு மாகாண சபையில் அரசமைப்புக்கு முரணாக ஆறு அமைச்சர்கள் இருக்கின்றனர். அந்த எண்ணிக்கையைச் சீர்செய்யவேண்டிய பொறுப்பு நியமன அதிகாரிகளுக்குரியது. வடக்கு மாகாண முதலமைச்சரும், வடக்கு மாகாண ஆளுநரும் அடுத்த அமர்வுக்கு முன்னதாக அதனைச் சரிசெய்யவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவைச் சிக்கல்கள் >> 25

தொடருந்து ஊழியர்களின்

# திடீர் போராட்டத்தால் மக்கள் கடும் அவதி

## மாற்று ஏற்பாடுகளில் அரசு தீவிரம்

கொழும்பு, ஒக.10

தொடருந்துச் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் நேற்று முன்தினம் திடீரென ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கையால் நேற்று தொடருந்துச் சேவைகள் முடங்கின. பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மாற்று ஏற்பாடுகள் மூலம் நிலமையைச் சீர் செய்வதற்கு >> 22

யாழ்ப்பாணத்துச் சட்டமீறல்கள் குறித்து

# ஆதாரங்கள் கொடுத்தும் நடவடிக்கை ஏதுமில்லை

## ஆளுநர் முன் பொலிஸார் மீது அதிகாரிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக.10

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சட்டமீறல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் பொலிஸார் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை என்று வடக்கு மாகாண ஆளு >> 23

# தன் அமைச்சு பதவியை கைவிட டெனீஸ் 2 நிபந்தனைகள் விதிப்பு





யாழ்ப்பாணம், ஒக. 10

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தான் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்பதற்கு அவரது தன்மு >> 25

டெனீஸ் விவகாரத்தால்

## கடிதத் தலைப்புகளை திருத்திய அமைச்சர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 10

பா.டெனீஸ்வரனின் அமைச்சுப் பொறுப்புக்களை தம்வசம் வைத்திருந்த அமைச்சர்கள், தமது கடிதத் தலைப் >> 25

# மீனவர் பிரச்சினை தீர்க்க மூன்று புதிய அதிகாரிகள்

## நீரியல் வளத் திணைக்களத்துக்கு நியமிப்பு



## கலைஞர் கருணாநிதிக்கு வடக்கில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக. 10

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு வடக்கு மாகாணசபையில் நேற்று இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கலைஞர் கருணாநிதி உடல்நலக் குறைவினால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தனது 95ஆவது வயதில் உயிரிழந்திருந்தார். அவரது உடல் நேற்றுமுன்தினம் மாலை சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள அறிஞர் அண்ணாவின் சமாதி அருகே புதைக்கப்பட் >> 25

# நல்லூர் திருவிழாவின் பின் திலீபனுக்கு நினைவுத் தூபி

## யாழ். மாநகர மேயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.10

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தைப் புனிதமாகப் பேணுவதற்குச் சுற்றுக் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. நல்லூர் >> 25

# ஞானசாரருக்குப் பொதுமன்னிப்பு அரச தலைவர் வழங்கவேண்டும்

## கொந்தளிக்கிறது பிக்குமார் குரல் அமைப்பு



கொழும்பு, ஒக.10

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது பிக்குமார் >> 22

# தேர்தல் முறைமைச் சிக்கலே தேர்தல் பின்னகரக் காரணம்

## தமக்கு அச்சமில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, ஒக.9

தோல்வி அடைவோம் என்று அறிந்தும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்தினோம். தேர்தல் ஆணைக்குழு விவகாரத்தில் நாம் தலையிடுவதோ, அழுத்தம் கொடுப்பதோ >> 22

# வித்தியா கொலையாளிகளின் மேன்முறையீடு ஏற்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஒக.10

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் முன்வைத்த மேன்முறையீட்டை பரிசீலனைக்குட்படுத்த கொழும்பு உயர் நீதிமன்று தீர்மானித்துள்ளது. இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா இல்லையா என்பது குறித்து நீதிமன்று நேற்றுப் பரிசீலித்தது. மனு மீதான >> 25

## ஏ-9 வீதியோரத்தில் இனிமேல் வாகனங்கள் நிறுத்தத் தடை

### தொடர் விபத்துக்களையடுத்து மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக. 10

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள் தரித்து நிற்பதை தடுத்து நிறுத்துவதற்கான தீவிரமான நடவடிக்கையைப் பொலிஸார் >> 25

# மாகாணத் தேர்தல் எவ்வாறு நடத்துவது என்பதில் இழுபறி

## எல்லை நிர்ணய அறிக்கையை விவாதத்துக்கு எடுக்க தீர்மானம்

கொழும்பு, ஒக.10

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்படாததை அடுத்து தற்போதுள்ள எல்லை நிர்ணய அறிக்கையை விவாதத்துக்கு எடுப்பது என்று நேற்று நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்த அறிக்கையை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அந்தப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் பழைய முறையின்கீழ் தேர்தலை நடத்தலாம் என்றும் தீர்மானிக்கப் பட் >> 22




# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஒக.10

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு பூராகவுமுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொண்டனர். கொழும்பில் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். இதனால் பத்தரமுல்ல, செத்சிறிபாயவுக்கு முன்பாக வீதியின் இரண்டு திசைகளும் தற்காலிகமாக மூடப்பட்டன.

பணிப்புறக்கணிப்புக் காரணமாகச் சமுர்த்தியாளர் வங்கி, வலய காரியாலயங்கள் மற்றும் பிரதேச சமுர்த்தி காரியாலயங்கள் என்பன நேற்று மூடப்பட்டுள்ளன.

அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை குறைக்காதிருத்தல், ஓய்வூதியத்தை உறுதிப்படுத்தல், நியமனக் கடிதங்களை வழங்கல், பதவி உயர்வு முறையைச் செயற்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்துப் இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

வழமையாகச் சமுர்த்தி வங்கிகளின் நாளாந்த செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் அதன் சாவிகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்படுகின்ற நிலையில் நேற்று அந்த சாவியைப் பெற்றுக் கொள்வதற்காக எந்த சமுர்த்தி அதிகாரிகளும் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)



## மோட்டார் சைக்கிள் அதிகாலை தீக்கிரை

யாழ்ப்பாணம், ஒக.10

யாழ்ப்பாணம் வாதரவத்தையில் உள்ள வீடொன்றில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுக்கு வெளியே வெளிச்சம் தெரிவதை வீட்டிலிருந்தவர்கள் அவதானித்துள்ளனர். வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தவாறு இருந்தது. வீதியில் மோட்டார் சைக்கிள்கள் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தீ ஒருவாறு அணைக்கப்பட்டபோதும், மோட்டார் சைக்கிளின் பெரும்பகுதி நாசமாகியது என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் பெற்றோல் போத்தலும், தீப்பெட்டியும் காணப்பட்டது என்றும், வேலி பிரிக்கப்பட்டிருந்தது என்றும் வீட்டிலிருந்தவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-105)

## அமைச்சரின் கவனத்துக்கு வந்தது நாவற்குழி விடயம்

### 107 குடும்பங்களை அகற்ற எடுக்கும் நடவடிக்கை குறித்துத் தெரியாது என அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.10

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட நிலத்தில் குடியமர்ந்துள்ள 107 குடும்பங்களை வெளியேற்றுமாறு தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள விடயம் இதுவரை தெரியாது என்று தெரிவித்துள்ளார் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச. இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து நல்ல பதில் தரப்படும் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று உறுதியளித்தார்.



நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட நிலத்தில் குடியமர்ந்துள்ள 107 குடும்பங்களை வெளியேற்றக் கோரி தேசிய வீடமைப்பு அதிகார சபை பிரதேச செயலாளர் ஊடாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அந்தக் குடும்பங்களை நடுவீதியில் விட்ட பின்பு யாருக்கு வீடமைப்பு மேற்கொள்ளவுள்ளீர்கள்? என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் சஜித் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

"இது தொடர்பில் இதுவரை எனக்குத் தெரியாது. அந்தப் பகுதியில் எத்தனை ஆண்டுகளாக, எத்தனை குடும்பங்கள் உள்ளன? மக்களை ஏன் அகற்ற முயற்சிக்கின்றனர்? அதன் பின்னர் அந்த நிலத்தில் என்ன திட்டம் மேற்கொள்ளவுள்ளனர் என்பவற்றை உடனடியாக அறிந்துகொள்கின்றேன். அந்தநிலத்தை அந்த மக்களுக்கே வழங்க முடியுமா என்று ஆராய்ந்து கூறுகின்றேன் என்று அமைச்சர் சஜித் தெரிவித்துள்ளார். (ந-105)

## வயோதிபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 10

பருத்தித்துறை பகுதியில் பாடசாலைச் சிறுமிகளை துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் 12,15,16 வயது மதிக்கத்தக்க பாடசாலைச் சிறுமிகளை சித்திரவதைக்கு உட்படுத்தினார், காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-8-26)

## திட்டமிட்டுத் தமிழரை நெருக்குகின்றது அரசு

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.10

அரசு திட்டமிட்டே தமிழ் மக்களை நெருக்கி வருகின்றது. அரசும், படைகளும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்துக் கூலிகளாக மாற்றுகின்றன என்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பான பிரேரணை, சேர் பெறுமதி வரி (திருத்த) சட்ட வரைபின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வடக்கு கடலில் தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை நிறுத்த வேண்டும். தென்பகுதி மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 ஆண்டுகாலப் போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்கள் இன்றுவரை தமது வாழ்வாதாரத்துக்குப் போராடிக் கொண்டுள்ளனர். மீன்பிடியை நம்பி அவர்கள் வாழ்கின்றனர். அதைக் கருத்தில் கொள்ளாது அரசும், கடற்படையும் நேரடியாக மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது பிரதேச பெண்களும் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். தமது சொந்த மாவட்டங்களில் மக்கள் சுயமாக தொழிலை முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். வடக்கில் எமது மக்களின் சுய தொழில் பறிக்கப்படுகின்றது. விவசாயம் செய்ய முயற்சித்தால் அதில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு உள்ளது. மீன்பிடிக்குச் சென்றால் அங்கும் சிங்கள மீனவர் ஆக்கிரமிப்பு உள்ளது. எமது மக்கள் வாழ்வாதார நிலைமைகளை முன்னெடுக்க முடியாது போராட வேண்டிய நிலைமை உள்ளது.

கடல்களில் எமது மக்கள் நெருக்கப்பட்டு அன்றாடம் போராடி வருகின்றனர். சுய தொழிலில் ஈடுபட முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவற்றை அரசின் திட்டமிட்ட செயல்களாகவே கருத வேண்டும். இராணுவத்தையும் கடற்படையையும் வைத்துகொண்டு எமது பிரதான தொழில் பறிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது மக்கள் எதிர்பார்க்கும் சாதாரண வாழ்க்கையை வாழ அரசாங்கம் இடமளிக்க வேண்டும் - என்றார். (ந-61)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி இறப்பு

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் நடந்த விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த குடும்பத் தலைவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் குருநகரை சேர்ந்த பிரான்சிஸ் ஜோசெப் (வயது 67) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் கடந்த 25 ஆம் திகதி குறித்த குடும்ப தலைவர் துவிச் சக்கர வண்டியில் பயணித்துள்ளார். அப்போது இரண்டாம் குறுக்குத் தெருவுக்கு அண்மையில் முச்சக்கர வண்டியும் துவிச் சக்கர வண்டியும் மோதி விபத்துக்குளாகியுள்ளன. இதில் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். இறப்பு தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (உ-8)

## ஆளுநரின் அனுமதியின்றி வெளிநாடு சென்ற அனந்தி

யாழ்ப்பாணம், ஒக. 10

வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் வெளிநாடு செல்வதற்கு விடுமுறைக்கு ஆளுநர் குரேயிடம் விண்ணப்பித்திருந்தார். அவருக்கு அனுமதி வழங்கப்படாத நிலையிலும், வெளிநாட்டுக்குச் சென்று திரும்பியுள்ளார்.

வடக்கு மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு ஆளுநரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வெளிநாடு செல்வதற்கு அனுமதி கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு அவைத் தலைவர் ஊடாக அனுப்பியுள்ளார். வடக்கு அமைச்சர்கள் யார் என்பது தொடர்பில் சர்ச்சை நிலவுகின்றது. இதனைக் குறிப்பிட்ட ஆளுநர், திருமதி அனந்தி சசிதரனின் வெளிநாட்டுப் பயணத்துக்கான விடுமுறைக்கு அனுமதி வழங்கவில்லை.

ஆனால், திருமதி அனந்தி சசிதரன் கடந்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் திருமதி அனந்தி சசிதரன் உறுப்பினராக, சென்று வந்த வெளிநாட்டுப் பயணத்துக்கான அனுமதியை கோரியுள்ளார். அவைத் தலைவர், அனுமதி கோரலை சபைக்கு நேற்றுச் சமர்பித்தார். சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டார். வடக்கு மாகாண ஆளுநருக்கு அதனை அனுப்பி வைக்கவுள்ளார். (5)

## பாதீனிய ஒழிப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 10

வலி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் பாத்தீனியத்தை இல்லாமல் ஒழித்தல் தொடர்பண கலந்துரையாடல் இன்று பி.ப. 2 மணிக்கு வலி கிழக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. பிரதேச செயலகமும் விவசாய திணைக்களமும் இணைந்து இந்தக் கலந்துரையாடலை நடாத்தவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் சமூக ஆர்வலர்கள் ஆலோசனைகளை வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-8.11)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டு பேரவையால் நடத்தப்படும் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வலி கிழக்கு பிரதேசத்து கலைஞர்கள் ஒன்று கூடலில் கலந்துகொண்டு தங்களது ஆற்றுகைகளை வெளிக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (8-11)

சி.பி.ஜி. ஒதுக்கீட்டில்

# தரமற்ற பொருள்கள் வடக்கில் பயனாளிகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக. 10
மாகாணசபை உறுப்பினர்களின் குறித்துஒதுக்கப்பட்ட நிதியில் (சி.பி.ஜி.) பயனாளிகளுக்கு தரம் குறைந்த பொருள்கள்விநியோகிக்கப்படுவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குற்றம்சுமத்தினர்.

உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்களையடுத்து, தரமான பொருள்களையே அதிகாரிகள் கொள்வனவு செய்து வழங்கவேண்டும் என்று மாகாணசபையில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

வடக்குமாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக.சி.பி.ஜி.ஒதுக்கீட்டில்வவுனியாமாவட்டத்தில் பொருள்கள் கொள்வனவு செய்யப்படாமல் யாழ்ப்பாணத்தில்கொள்வனவுசெய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட மாகாணசபைஉறுப்பினர்தியாகராசா, விவசாய அமைச்சு தவிர்ந்த ஏனைய அமைச்சுக்கள் தமது ஒதுக்கீட்டுக்குரியபொருள்களைபயனாளிகளுக்கு வழங்கவில்லை. கட்டிட வேலைகளில் தாமதம் ஏற்படலாம். பொருள்களைக் கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு வழங்குவதில் ஏன் தாமதம் ஏற்படவேண்டும். வடக்கு மாகாணகலாசாரத்திணைக்களம் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் என்பனவேஇதில்மோசமாகச்செயற்படுகின்றனஎன்று குற்றஞ்சுமத்தினார்.

அந்த மாவட்டத்தைச் சேர்ந்தமற்றொருமாகாணசபை உறுப்பினரான ப.சத்தியலிங்கம், பயனாளிகளுக்கு தரம் குறைந்த பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றது. அதிகாரிகள் தாங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்துவிட்டு அவற்றை விநியோகிக்கும் போது எங்களை அழைக்கின்றார்கள். பயனாளிகளுக்குஅவற்றைவழங்கும் போது எங்களுக்கு வெட்கமாக இருக்கின்றது. உதைபந்தாட்ட அணியினருக்கு காலணி வாங்கிக் கொடுக்கப்பட்டது.ஒருஆட்டத்துடன் அவைபயன்படுத்தமுடியாத நிலைக்கு வந்துவிட்டது.

இவற்றைநாங்கள்கொள்வனவு செய்து வழங்குவதாக பயனாளிகள் நினைக்கின்றார்கள். அவர்களுக்கு உண்மை தெரியாது. அதிகாரிகள் தரமான பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும். கேள்விகோரல் அடிப்படையில், விலை குறைந்த பொருள்களைக் கொள்வனவு செய்வதாகக் கூறுகின்றார்கள்.

நாம் மிகச்சிறந்த பொருள்களின் விலைகளைக் கணிப்பிட்டேபயனாளிகளுக்குநிதி ஒதுக்கீட்டை மேற்கொள்கின்றோம். ஆனால் அதிகாரிகள், தரம் குறைந்த பொருள்களைவழங்குகின்றார்கள் என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், பொருள்களைக் குறிப்பிடும்போது வியாபாரக் குறியை (பிராண்ட் நேம்) குறிப்பிட்டால் இந்தப் பிரச்சினை எழாது, என்றார்.

இறுதியில், தரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தே பொருள்களைக் கொள்வனவுசெய்யப்படவேண்டும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (5)

### உறுப்பினர்களின் முன்மொழிவுகளை மாற்றும்அதிகாரிகள்

*மாகாணசபை உறுப்பினர்களின் குறித்தொதுக் கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்குச் சமர்பிக்கப்படும் திட்டங்களில் அதிகாரிகள் மாற்றம் செய்கின்றார்கள். வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.*

*வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். தியாகராசா, வவுனியாவில் கோயில் ஒன்றுக்கு நிதி ஒதுக்கியிருந்தேன். நான் முன்மொழிந்த திட்டத்தை செயற்படுத்த முடியாது என்று கலாசார அலுவலர், கோயில் தலைவரிடம் கூறியிருக்கின்றார். அவர் திட்டத்தை மாற்றித் தருமாறு என்னிடம் வந்து கேட்கின்றார். அவருக்கு மாற்றுத் திட்டத்துக்கு கையெழுத்து வைத்து விட்டுத்தான் அமர்வுக்கு வந்தேன் என்றார்.*

*'மன்னார் மாவட்டத்தில் கோழிக்குஞ்சும், கோழிக் கூடும் வழங்க பயனாளி ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய திணைக்கள அதிகாரி, கோழிக் கூடு வழங்க முடியாது என்று பயனாளியை நேரில் சென்று மிரட்டியுள்ளார்' என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார். (5)*

# ஹைஏஸ் வாகனங்களையும் பதிவு செய்யவேண்டும்

சத்தியலிங்கம் யோசனை முன்வைப்பு

**யாழ்ப்பாணம், ஒக. 10**

**முச்சக்கரவண்டிகள், தனியார் பேருந்துகள் என்பன பதிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவதுபோல, ஹைஏஸ் வாகனங்களும் பதிவு செய்யப்படவேண்டும். போக்குவரத்து நியதிச் சட்டத்தில் அதற்குரிய திருத்தங்களை மேற்கொண்டு இதனைச் செய்யவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவற்கு ஏ9 வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்துவது தடைசெய்யப்பட வேண்டும்என்ற அவைத்தலைவரின் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணம், கிளிநொச்சியைச் சேர்ந்த வாகனங்களே பெரும்பாலும் விபத்துக்களில் சிக்கிக்கொள்கின்றன. இங்கிருந்து கொழும்புக்குச் சென்று அங்கிருந்து வெளிநாடுகளில் வந்தவர்களை ஏற்றி வருகின்றார்கள். சுமார் 16 மணித்தியாலங்கள்தொடர்ச்சியாகவாகனம் செலுத்துகின்றார்கள். அவர்கள் நித்திரை கொள்வதாலேயேஅதிகம்விபத்துக்கள்ஏற்படுகின்றது.

தூரப் பயணத்துக்கு இரண்டு சாரதிகளைப் பயன்படுத்தவேண்டும். வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மேலதிகமான இரண்டாவது சாரதிக்கு ஆயிரத்து 200 செலவு செய்ய மாட்டார்களா? உயிரா அல்லது ஆயிரத்து 200 ரூபா பணமா முக்கியம். வாகனங்களின் உரிமையாளர்கள் விபத்துக்களில் தங்கள் வாகனம் அழிந்துபோவதைவிட, இரண்டுசாரதிகளைப்பயன்படுத்தலாம்.

பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கரவண்டி, தனியார்பேருந்துகள் என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் 12 ஆசனங்களைக் கொண்ட ஹைஏஸ் வாகனங்கள் எங்கேயும் பதிவு செய்யப்படவில்லை. அவற்றைப் பதிவு செய்யவேண்டும். போக்குவரத்துநியதிச்சட்டத்தில்திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்றார்.

**பொலிஸ் கொள்ளையர்கள்**

இலங்கையில் சீருடை அணிவிக்கப்பட்ட உத்தியோகபூர்வ கொள்ளையர்களாகப் பொலிஸார்செயற்பட்டுவருகின்றனர்என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாகிர் தெரிவித்தார். ஹைஏஸ் வாகனங்களில்சில குறிப்பிட்ட ரகங்களைச் சேர்ந்தவற்றில் 4 பேருக்கு மேல் ஏற்ற முடியாது. அவ்வாறு ஏற்றிப் பயணம் செய்து விபத்துக்குள்ளானால் காப்புறுதியும் கிடைக்காது. ஆனால் பொலிஸார் இவற்றைப் பார்ப்பதில்லை. அவர்கள் பணத்தைவாங்குவதிலேயேகுறியாகஇருக்கின்றார்கள். என்றார்.

**சாரதி பற்றாக்குறை**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், கடந்த சில வாரங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 3 பேருந்துகள் விபத்துக்குள்ளாகியுள்ளன. கொழும்பிலிருந்து வரும் சாரதிகளே உள்ளூர் சேவையிலும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இங்கு சாரதி வெற்றிடங்கள் இருக்கின்றது. அவை நிரப்பப்படாமையினால், அதிக நேரம் சாரதிகள் சேவையில் ஈடுபடுவதால் விபத்துநிகழ்கின்றது. ஏனையமாகாணங்களில்இந்தநிலைமைஇல்லை - என்றார். (5)

# 'உறவுகள்' நாடக ஆற்றுகை




யாழ்ப்பாணம் .ஒக 10
நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில், ஈழத்து நவீன தமிழ் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்ற குழந்தை ம. சண்முகலிங்கத்தின் , எழுத்துருவிலும் , நெறியாள்கையிலும் உருவான 'உறவுகள்' நாடகம் நாளை 11 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணியளவில், காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின், தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

நாடக, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இவ் ஆற்றுகையைக் கண்டுகளிக்க ஒன்று கூடுமாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

# வடக்குகூட்டுறவில் ரூ.1 கோடி ஊழல்

நடவடிக்கை எதுவுமில்லை என்று உறுப்பினர்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஒக. 10
வடக்குமாகாணகூட்டுறவுஅமைச்சுக்குஉட்பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கியில் இடம் பெற்றஒருகோடிரூபாஊழல்மோசடிதொடர்பாகஎந்தநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை என்றுவடக்குமாகாணசபைஉறுப்பினர்கள் கடும்விசனம்வெளியிட்டனர்.

மாகாணசபையின் நேற்றைய அமர்வில் அவைத் தலைவர் சி. வி. கே. சிவஞானம், கூட்டுறவு கிராமிய வங்கியின் சிமெந்து விற்பனையில்மோசடிஇடம்பெற்றதாகபொதுமக்கள் முறைப்பாட்டுக்குழு மற்றும் கணக்கு குழு ஆகியன கண்டறிந்திருந்தன. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

'இந்த விடயம் சபையில் முதன்முறையாகப் பேசப்பட்டபோது 29 லட்சம் ரூபா பணமே ஊழல்மோசடிசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்றுஒருகோடியே6லட்சம்ரூபாவாகஅது வளர்ந்துள்ளது. வடக்கு மாகாணசபை பொறுப்பேற்றபின்னர்நடந்த ஊழல்மோசடி இது. இதுதொடர்பில்அதிகாரிகள்உரியகாலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தளவு தூரம்மோசடிநடைபெற்றிருக்காது. இனியும் அதிகாரிகள்நடவடிக்கைஎடுப்பார்கள்என்று நம்பமுடியாது' இவ்வாறுஎதிர்க்கட்சித்தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

இதுவரையும்எந்தநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. இப்போது அதிகாரிகளை துரிதமாகநடவடிக்கைஎடுக்கச்சொல்லி அவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் என்ன செய்யப்போகின்றீர்கள்என்று, ஆளும்கட்சிஉறுப்பினர் அ. பரஞ்சோதி கேள்வி எழுப்பினார்.

'அடுத்த அமர்வுக்குமுன்னதாகநடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் என்ன செய்வேன் என்பதை இப்போது கூறுமாறு வற்புறுத்தவேண்டாம்'என்றுஅவைத்தலைவர் சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி பனைதென்னை வள கூட்டுறவுச் சங்கம், விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் இடம் பெற்றமோசடிகள்தொடர்பிலும்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ஆளும் கட்சி உறுப்பினர்களான அ. பரஞ்சோதி, ஆ. புவனேஸ்வரன் ஆகியோர்சபையில்குறிப்பிட்டனர். (5)




நாளை ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.
ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.
Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்
K.T.Prassath - 078 612 5929, 071 381 5114
Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

# ஆளும் கட்சி மோதலால் வெளியேறியது எதிர்க்கட்சி

## வடக்குச் சபை அமர்வில் நேற்றும் வாதப் பிரதிவாதங்கள்

*சபைச் செய்தியாளர்*

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான கருத்து மோதல்களை சகிக்காது ஒரு கட்டத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர். வழமைபோன்று கடும் வாதப் பிரதிவாதங்கள் சபையில் நேற்றும் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபையின் 129ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு அமர்வின் ஆரம்பத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நிதி உப நியதிச் சட்டம் சபைக்கு சமர்பிக்கப்பட்டது.

திருமதி அனந்தி சசிதரனின் விடுகைக்கான கோரிக்கை சபைக்கு அவைத் தலைவர் சமர்பித்தார். அவர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு முடித்திருந்த நிலையிலேயே இது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வடக்கு அமைச்சரவை தொடர்பில் சிக்கல்கள் இருக்கின்ற நிலையில். அமைச்சர் என்ற கோதாவில் அனந்தி சசிதரன் சமர்ப்பித்திருந்த விடுகைக்கான அனுமதியை வடக்கு மாகாண ஆளுநர் வழங்கவில்லை. மாகாணசபை உறுப்பினராக அவரது விண்ணப்பத்தை ஆளுநருக்கு அனுப்பி அந்த விடயத்தைச் சமாளிக்கலாம் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார். இந்த விடயம் வில்லங்கமாகி விவாதமாகி விடுவதைத் தவிர்பதற்கு அவைத் தலைவர் முயன்றார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் விடுவதாக இல்லை. அவைக்கு விடயத்தை முழுமையாக அறிவிக்கக் கோரினார். அனந்தி சசிதரனும் சபைக்கு விளக்கமளித்து விடயத்தைப் பெரிதாக்க முனைகையில். அவைத் தலைவர் சிவஞானம் அதனை முடிவுக்கு கொண்டு வந்து அடுத்த விடயத்துக்கு நகர்ந்தார்.

வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபை. வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபைக்குரிய கொடுப்பனவுக்கு சபை அனுமதி வழங்கியது.

**உயிரியல் தொழில்நுட்ப பிரிவு**

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உயிரியல் தொழில்நுட்ப பிரிவை ஆரம்பிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் முன்வைத்த கோரிக்கை வடக்கு கல்வி அமைச்சால் கண்டுகொள்ளப்படவில்லை. வடக்கு மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழுவுக்கு அந்த விடயம் பாரப்படுத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சுக்குப் பணிக்கும் சிபார்சை சபை நேற்று வழங்கியது. இந்த விடயத்தில் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

**கண்முன்னே பெருகிய ஊழல்**

கூட்டுறவு கிராமிய வங்கி ஊடாக நடைபெற்ற ஊழல் தொடர்பில் சபையில் அடுத்து பிரஸ்தாபிக்கப்பட்டது. 29 லட்சம் ரூபா ஊழல் நடந்த போது சபையில் பேசினோம். இப்போது 106 லட்சம் ரூபாவில் அது வந்து நிற்கின்றது என்றார். எதிர்க்கட்சித் தலைவர், மாகாணசபையின் ஆட்சியின்போது நடந்த ஊழலை அம்பலப்படுத்தினார். கூட்டுறவு அமைச்சு அல்லது கூட்டுறவுத் திணைக்களம் எப்படி நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். ஊழல், மோசடிகள் விடயங்களில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துவிட்டு அதிகாரிகள் தப்பித்துக் கொள்கின்றார்கள் என்று அவைத் தலைவர் சாடினார். தாங்கள் நடவடிக்கை எடுத்தோம் என்று காட்டுவதற்கே அவர்கள் இவ்வாறு செய்வதாக ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி குறிப்பிட்டார்.

ஊழல்களை நீங்கள் கண்டுபிடிக்கின்றீர்கள். ஆனால் நடவடிக்கைதான் ஒன்றுமில்லை என்று அவைத் தலைவரிடம் முறையிட்டார் எதிர்க்கட்சித் தலைவர்.

இந்த விவாதத்தில் பேசிய மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை வழமைபோன்று கதை கூறினார். அம்மாவுக்கு வருத்தம். பிள்ளைகள் எல்லோரும் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்திருக்கின்றனர். உடனடியாக சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள். சத்திரசிகிச்சை கூடத்துக்குள் அவரைக் கொண்டு செல்கின்றனர். சுமார் அரைமணிநேரம் சத்திரசிகிச்சை கூடத்துக்குள் பெரும் சத்தம் கேட்கின்றது. மருத்துவர் வெளியே வருகின்றார். உறவினர்கள் என்ன மாதிரி என்று கேட்கின்றனர். சத்திரசிகிச்சை செய்யிறத்துக்குரிய கத்திகள் வைச்சிருக்கின்ற பெட்டியை இப்பத்தான் உடைத்து முடிஞ்சுது. இனித்தான் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று மருத்துவர் கூறினார். அதைப்போன்றுதான் இங்கும் நிலமை இருக்கின்றது என்றார்.

கதை சொந்தமோ. இரவல் வாங்கினதோ என்று சிரித்துக் கொண்டு கேட்டார் அவைத் தலைவர். இரவல்கதைதான் என்று சிரித்தபடியே பதில் சொன்னார் பசுபதிப்பிள்ளை. நாங்கள் அடுத்த ஆளையாவது காப்பாற்றுவம் என்று சொல்லிக் கொண்டு அவைத் தலைவர் பிரேரணைக்குள் நுழைந்தார்.

**வீதி விபத்து**

ஏ9 வீதியில் தொடரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் பிரேரணையை அவைத் தலைவர் முன்வைத்தார். உறுப்பினர்கள் அதனை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தனர். எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன். ஏ9 வீதியில் மாத்திரமல்ல வேறு வீதிகளிலும் அவ்வாறு விபத்து நடக்கின்றது. தனியே வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மாத்திரம் உயிரிழக்கவில்லை என்று பிரேரணையில் திருத்தங்களை அடுக்கிக் கொண்டுபோனார். முதலில் ஒன்றைச் செய்வோம். பின்னர் மற்றைய வீதிகளைப் பார்ப்போம். எல்லாவற்றையும் கூழாம்பாணியாக்க வேண்டாம் என்றார். தனது பிரேரணையில் திருத்தங்கள் வராமல் பார்த்துக் கொண்டார் அவைத் தலைவர்.

எதிர்க்கட்சித் தலைவர் தவராசா. போக்குவரத்து மாகாணத்துக்குரிய முழுமையான விடயம். அதனைச் செய்யவில்லை என்று குற்றம் சுமத்தினார். மாகாணசபை செய்யவேண்டியதை செய்யவில்லை என்ற தனது வழமையான குற்றச்சாட்டுக்கு இந்த விடயத்தையும் ஆதாரமாக்கி அடித்து விளாசினார்.

**சி.பி.ஜி.**

மாகாணசபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பான விவாதமும் சூடு கிளப்பியது. அமைச்சுக்கள், திணைக்களங்கள் உறுப்பினர்களின் சிபார்சு செய்தவேலைகளை உரிய காலத்தில் செய்து முடிப்பதில்லைஎன்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. கல்வி அமைச்சர் அல்லது அமைச்சின் செயலர் சொல்வதைக் கேட்கும் நிலையில் வவுனியா அதிகாரிகள் இல்லை என்று குற்றச்சாட்டை அடுக்கினார் ஆளும் கட்சி உறுப்பினர் தியாகராசா. தரமான பொருள்களைக் கொள்வனவு செய்து கொடுக்கின்றார்கள் இல்லை என்று அடுத்த அடிபோட்டார் ஆளும் கட்சி உறுப்பினர் ப.சத்தியலிங்கம்.

இந்தப் பொருள்களை நாங்கள் ஏதோ வாங்கித் தருவதாக மக்கள் நினைக்கின்றார்கள். நாங்கள் பொக்கெட்டுக்குள் காசு போடுவதாக அவர்கள் கருதுகிறார்கள். அதிகாரிகள் வாங்கித் தரும் பொருள்களை கையளிக்கும் எங்களைத்தான் மக்கள் கள்ளர் என்று நினைக்கின்றார்கள் என ஆதங்கத்தைக் கொட்டினார் சத்தியலிங்கம். எங்களின் பரிந்துரையில் பாடசாலைகளுக்கு இன்னியம் வாத்தியக் கருவிகள் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். மிருதங்கம் அடிக்க முடியாது. தவில் வாசிக்க முடியாது. அந்தளவுக்கு மோசமான கருவிகளை அதிகாரிகள் கொள்வனவு செய்து வழங்கியிருக்கின்றார்கள் என்றார் சத்தியலிங்கம்.

**அடிவாங்கிய ஐங்கரநேசன்**

உறுப்பினர்கள் இங்கே சொல்வதைப் போன்று எனது ஒதுக்கீடு தொடர்பா பொருள்கள் கையளித்தலில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்லிக் கொண்டு மூக்கை நுழைத்தார் முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன். அவரது கருத்தை வைத்தே அடிபோட்டார் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின். அதிகாரிகள் முகம் பார்த்துதான் வேலை செய்கின்றார்கள் என்பதை ஐங்கரநேசன் உறுதிப்படுத்திவிட்டார் என்றார். இந்த விடயத்திலும் தலைபோட்ட எதிர்க்கட்சித் தலைவர் தவராசா. அதிகாரிகளைக் குறை சொல்லவேண்டாம். அதிகாரிகளை வழிப்படுத்தவேண்டியவர்கள் அமைச்சர்கள் மற்றும் இந்தச் சபை. அமைச்சர்கள் சரியாகச் செயற்பட்டிருந்தால் இப்படிப் பிரச்சினைகள் எழும்பாது என்று, மாகாணசபையின் செயற்றிறன் இன்மையை விமர்சித்தார். தரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்ற தீர்மானத்துடன் சபையின் பாதி அமர்வு நிறைவுக்கு வந்தது.

**அமைச்சரவை விவகாரம்**

தேநீர் இடைவேளையின் பின்னர் சபை அமர்வு ஆரம்பமாகியது. ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். சுகாதார அமைச்சர் யார் என்றே தெரியாத நிலையில் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சிறப்புரிமைப் பிரச்சினையுடன் தொடங்கினார். அமைச்சரவை விவகாரம் சபையில் சர்ச்சைக்குரியதாகியது.

ஆறு அமைச்சர்களோ, யார் அமைச்சர்களோ, தாங்கள் தாங்கள் அமைச்சர்கள் என்பதை சபைக்கு தெளிவுபடுத்தட்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தெரிவித்தார். அமைச்சர்கள் அமைதியாக இருந்தார்கள். உறுப்பினர்கள் சிலரை அமைச்சர்கள் என்று உத்தியோகபூர்வமாக காட்சிப்படுத்துவது பிழை என்று சயந்தன் வாதிட்டார். அமைச்சர்களின் அமைச்சுக்கள் குறிப்பிட்டு சபையில் இதுவரை இருந்து வந்த பலகை அகற்றப்பட்டிருந்தது சுட்டிக்காட்டப்பட்டது. அவைத் தலைவர் அதனை நீக்கியமைக்கான காரணத்தை சபைக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற கோசம் எழுந்தது.

இதற்கிடையில் அமைச்சர் சிவநேசன், எங்களை 7ஆம் திகதி மன்றில் முன்னிலையாகவேண்டும் என்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் பார்த்தேன். எங்களை அமைச்சர்களாகக் கருதியமையினால்தான் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்று புதுக்குண்டைப் போட்டார்.

இந்தப் பிரச்சினை சமயோசிதமாகக் கொண்டு செல்ல முயன்றதாகத் தெரிவித்த அவைத் தலைவர். அதனால்தான் எல்லா விடயங்களும் முடிந்த பின்னர் இறுதியாக எதிர்க்கட்சித் தலைவரின் அவசர கோரிக்கையை எடுத்ததாகக் கூறினார். சபை ஆரம்பிக்க முன்னரே நேற்று காலை சபை அமர்வில் குழப்பம் வரலாம் என்று செய்தி போட்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையை சமயோசிதமாக நகர்த்தவே முயல்கின்றேன் என்றார் அவைத் தலைவர்.

**அரைத்த மாவை அரைத்த உறுப்பினர்கள்**

எதிர்க்கட்சித் தலைவரின் அவசரகோரிக்கை சபையில் முன்வைக்கப்பட்டது. அமைச்சர்களின் ஆசன ஒழுங்கு தொடர்பில் அவரது பிரதான கேள்வி அமைந்திருந்தது. இந்த உரை மீதான விவாதத்தில், அரைத்த மாவை அரைத்தலைத் போல கடந்த அமர்வுகளில் பேசிய விடயங்களையே திரும்பத் திரும்ப பேசினார்கள். இதுவரை நடந்தது என்பதை ஒவ்வொரு உறுப்பினர்களும் நீட்டி முழக்கிச் சொல்வதிலேயே முக்கால்வாசி நேரத்தை விழுங்கினார்கள்.

முதலமைச்சர் பாமர மக்களை இந்தச் சபையைப் பயன்படுத்தி ஏமாற்றுகின்றார் என்று சயந்தன் வழமைபோன்று முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை அடுக்கினார். ஆளுநருக்கு ஆலோசனை என்ற பதத்தை அவர் தவறாக வியாக்கியானப்படுத்தி கடந்த அமர்வில் பேசியதைக் குறிப்பிட்டே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கில் சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகின்றார் என்று கூற, அது தவறான தகவல் என்று சயந்தன் குறிப்பிட்டார். தனது உரையில் பல இடங்களில் சிவா ஜிலிங்கம் தடுமாறினார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஏன் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக மாத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. முதலமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படவில்லை என்று கேள்வி எழுப்பி. தனது மூக்கை தானே உடைத்துக் கொண்டார். இந்த வழக்கில் தானும் இடைபுகு மனுதாரராகப் போக முடியும் என்று குறிப்பிட்ட சிவாஜி, சட்டத்தரணிகளுக்கு அள்ளி இறைப்பதற்கு தன்னிடம் பணமும் இல்லை, அடகு வைப்பதற்கும் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார்.

**முதலமைச்சருக்கு அக்கறையில்லை**

முதலமைச்சர் இந்த வழக்கு விவகாரத்தில் சட்டவியாக்கியானம் தொடர்பில் குழப்பம் இருந்திருந்தால் உயர்நீதிமன்றை நாடியிருக்க முடியும். அவர் அதனைச் செய்யவில்லை என்று சயந்தன் சுட்டிக்காட்டினார். முதலமைச்சர் அரசமைப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார் என்று அவைத் தலைவர் தெரிவிக்க. அவர் அப்படிச் சொல்கின்றார். ஆனால் நடப்பதில்லையே என்று ஆதங்கப்பட்டார் எதிர்க்கட்சித் தலைவர்.

வடக்கு மாகாண ஆளுநர் அமைச்சர் என்று என்னை விழித்து கடிதம் அனுப்பியிருக்கின்றார் என்று சிவநேசன் கூறினார். அது எப்ப என்று அவைத் தலைவர் கேட்க. இடையில் நுழைந்த சயந்தன், ஞானசாரருக்கு 19ஆண்டு சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கபட முன்னரா? வழங்கப்பட்ட பின்னரா என்று கேள்வி எழுப்பினார். திகதி நினைவில்லை என்று சமாளித்தார் சிவநேசன்.

**முன்னாள் உறுப்பினர்கள்**

பின்திகதியிடப்பட்ட அரசிதழை வெளியிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம். அவைத் தலைவருக்கு முதலமைச்சர் இது தொடர்பில் கடிதம் அனுப்பியிருக்கின்றார். அதனை ஆளுநருக்கு அனுப்பி பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று, சிவாஜிலிங்கம் கூற, அது தனது வேலை இல்லை என்று மறுத்தார் அவைத் தலைவர். ஒக்ரோபர் 25ஆம் திகதியுடன் மாகாணசபை இயற்கை மரணம் அடைய இருக்கின்றது. ஒக்ரோபர் 26ஆம் திகதியிலிருந்த நாங்கள் எல்லாரும் முன்னாள்தான் என்று சிவாஜிலிங்கம் கூற சபையில் சிரிப்பொலி எழுந்தது.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், மாகாணசபையில் இந்தப் பிரச்சினைக்கு எல்லாம் கூட்டமைப்பின் தலைவர்தான் காரணம் என்று தனக்கு கிடைத்த வாய்ப்பில் ஆளும் கட்சியை ஒரு வாங்குவாங்கினார்.

முதலமைச்சர் தரப்பினாலேயே நீதிமன்ற வழக்கு இழுத்தடிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுடன் எழுந்தார் அஸ்மின். மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம். ஆளுநருக்கு ஆலோசனை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கின்றார். அவரை முதலமைச்சராக்கிவிட்டால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவார் என்று அஸ்மின் தொடர்ந்து கூற நீங்கள் பகிடி விடவேண்டாம் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார். நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை என்று தெரிவித்து அஸ்மின் சிவாஜியைச் சீண்டினார்.

**தயங்கிய அவைத் தலைவர்**

சிவாஜிலிங்கத்தும், அஸ்மினுக்கும் இடையில் கருத்து மோதல் எழுந்தது. எங்கே என்று பார்த்துக் கொண்டிருந்ததுபோல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதனைச்சாட்டாக வைத்து வெளிநடப்புச் செய்தார்கள். இதன் பின்னர் டெனீஸ்வரன் தன்னிலை விளக்கத்தை வழங்கினார்.

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அரசமைப்புக்கு அமைவாக அமைச்சர்கள் விடயத்தில் நிறைவேற்று அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறினார். அந்த நிறைவேற்று அதிகாரிகளில் யார் முதலில் செய்யவேண்டும் என்பதை அவைத் தலைவர் கூறுவதற்கு ஏன் தயங்குகின்றார் என்று சயந்தன். அவைத் தலைவரை வலிந்து இழுத்தார்.

ஏன், எனக்கு என்ன தயக்கம் என்று கேள்வி எழுப்பிய அவைத் தலைவர் மீண்டும் சட்டவாசகங்களையே கூறினார். இறுதியில், நிறைவேற்று அதிகாரிகள் அடுத்த சபை அமர்வான 30ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவை விடயப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

## முதியோர்களுக்கான சுற்றுலா

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஒரு தொகுதி முதியோர்கள் நேற்று வியாழக்கிழமை ஆன்மிகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருக்கோணேஸ்வரம், சிறிலக்சுமி நாராயணர் கோவில், சிறிபத்திரகாளி அம்மன் கோவில், கன்னியா வெந்நீரூற்று ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகப் பணியாளர்களும் பளைப் பிரதேச செயலகப் பிரிவு, சமூக சேவைகள் பிரிவுப் பணியாளர்களும் முதியோர்களுக்கு அனுசரணையாகச் சென்றிருந்தனர். (9)

## விளையாட்டு பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி முகாம்

கிளிநொச்சி, ஓக 10

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளையோர் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 27ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள இளையோர்கள் 11 பேருக்குச் சந்தர்ப்பம் உள்ளது எனவும், விளையாட்டு பயிற்றுவிப்பாளராக வருவதற்கு, ஆர்வம் உள்ள இளையோர்கள் உங்கள் பெயர் விபரத்தை அனுப்பி வைக்குமாறும். மேலதிக தகவல்களுக்கு கரைச்சிப் பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரியைத் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (222)



## பாலவிநாயகர் ஆலய உற்சவம்

வவுனியா, ஓக. 10

வவுனியா, தவசிக்குளம் பாலவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்று தேர்உற்சவம் இடம்பெறும். தினமும் இன்தமிழ் இனியன் செ.ஸ்ரீநிவாசனின் ஆன்மிகச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது. (222)

மன்னார் விவசாயிகள் கேட்டுக்கொண்டவாறு

# கட்டுக்கரைக் குளத்தை சீரமைக்கத் தீர்மானம்

**மன்னார், ஓக.10**

**மன்னார் மாவட்டத்தில் தண்ணீர் இல்லாது வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.**




கட்டுக்கரைக் குளத்துக்கு வரும் தண்ணீரானது , குறிப்பிட்ட அளவுக்கு மேல் தேக்கி வைத்துப் பாதுகாக்க முடியாமல் வீணாகிப் போவது வழக்கம். விவசாய அமைப்புகளால் தொடர்ந்து விடுக்கப்பட்ட கோரிக்கைகளாலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீர்ப்பாசன அமைச்சுக்கு கொடுத்த அழுத்தங்களாலும், கட்டுக்கரைக் குளத்தைச் சீரமைப்புச் செய்வது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது

அந்த வகையில் நடந்து முடிந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் உப தலைவர், மற்றும் கட்டுக்கரைத் திட்டக்குழுத் தலைவர் கட்டுக்கரைக் குளம் தொடர்பாக கலந்துரையாடியபோது, கட்டுக்கரைக் குளத்துக்கு வரும் தண்ணீரின் உள்வரத்து வாய்க்கால்களை அகலப்படுத்தி, கட்டுக்கரைக் குளத்தை ஆழப்படுத்தி . குளத்தில் நீர் மட்டத்தை அதிகப்படுத்துவதற்காக இரண்டு அடிகளுக்கு வான் கதவை உயர்த்துவ தாகவும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாகச் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். (213)

## ‘பச்சிலை’ இதழ்-4 ஆக்கங்கள் கோரல்

வலி.தென்மேற்கு, ஒக.10

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகத்தால் வருடம் தோறும் வெளியிடப்படும் 'பச்சிலை' இதழ்-4 என்னும் சஞ்சிகைக்கு ஆர்வமுள்ள இலக்கிய கர்த்தாக்கள், மாணவ மாணவிகள், பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் புகழ்கூறும் வரலாற்றுக் கட்டுரைகள், பிரதேச வளங்கள், ஆலயங்கள் பற்றிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், துணுக்குகள், ஆங்கிலக் கட்டுரைகள் போன்ற ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக நூலகர் புலோப்பளைப் பொதுநூலகம், பச்சிலைப் பள்ளிப்பிரதேசசபை, பளை என்னும் முகவரிக்குத் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம் என்று தெரிவித்துள்ள தவிசாளர், பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், சிறந்த ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் அறிவித்துள்ளார்.

## மடுத்திருவிழாவை முன்னிட்டு வீதியோரக் கடைகளுக்கு அனுமதி

மன்னார், ஓக.10

மடுக்கோவில் ஆவணித்திருவிழா கடந்த ஆறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும், இலட்சக்கணக்கான பக்தர்கள் திருவிழா முடியும் வரை வந்து போவது வழக்கம். கோவிலுக்கு வரும் மக்களின் சிற்றுண்டி, குடிதண்ணீர் மற்றும் உணவுத்தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வதற்காக, நானாட்டான்பிரதேச சபையின் ஏற்பாட்டில் மடுச்சந்தியில் வீதியோரக் கடைகளை நடத்துவதற்கு உள்ளூர் மற்றும் வெளியிடத்து வியாபாரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

வீதியோரக் கடைகள் அமைக்கப்படும் இடத்துக்குச் சென்ற நானாட்டான் பிரதேசசபைத் தலைவர், தி.பரஞ்சோதி, உறுப்பினர்கள், ஊழியர்கள், பிரதேச சபையின் துப்புரவுப் பணியாளர்களை வைத்து அந்த இடங்களைத் துப்புரவு செய்து, வியாபாரிகளுக்கான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர்.

அத்துடன் புனிதத் தலமாக இருக்கும் இப்பகுதியில் வியாபாரிகளாலோ அல்லது பொது நபர்களாலோ சட்டவிரோதச் செயற்பாடுகள் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும். புகைபாவித்தல், மது அருந்துதல், பெண்களைக் கேலி செய்தல் போன்ற நடவடிக்கைகளை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பிரதேசசபைத் தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு மடுப் பிரதேசசெயலகம், பூமலர்ந்தான், கிராமசேவையாளர், நானாட்டான் பிரதேசசபையின் முருங்கன் கிளை அலுவலகத்தினர், பொதுமக்கள் முழு ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.








குடிதண்ணீர் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## மட்டக்களப்பில் எதிர்ப்பு பேரணியும், ஆர்ப்பாட்டமும்

மட்டக்களப்பு, ஓக 10

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று ,செங்கலடி பிரதேசத்துக்குட்பட்ட பெரியபுல்லுமலையில் மக்களின் எதிர்ப்பினையும் மீறி அமைக்கப்படுகின்ற போத்தலில் அடைக்கப்படும் குடிநீர்த் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனைத் தடுக்கக் கோரியும் நேற்று பெரியபுல்லுமலையில் எதிர்ப்புப் பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

பெரிய புல்லுமலைப் பிரதேச பொது மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட எதிர்ப்புப் பேரணியில் மதகுருமார், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீனித்தம்பி யோகேஸ்வரன் ,ச.வியாழேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், கட்சி பேதமின்றிய அரசியல் உறுப்பினர்கள் , இளையோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போத்தலில் அடைக்கப்படும் குடிதண்ணீர் தொழிற்சாலை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறும், சூழலுக்கு விரோதமாக அமைக்கப்படும் இந்தத் தொழிற்சாலை தேவையற்றது, போன்ற பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## வவுனியாவில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா , ஓக .10

யாழ்போதை ஒழிப்புப் பொலிஸ்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், வவுனியா பண்டாரிக்குளத்தில் தேடுதல் நடத்திய யாழ் போதை ஒழிப்புப் பிரிவினர் 3 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியதுடன், அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைக்காக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். வியாபாரநோக்கத்துக்காகக் குறித்த கஞ்சா வைக்கப்பட்டிருந்ததா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நேற்றைய தினம் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (26,110)

## அல்வாய் வித்தியில் பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10
வடமராட்சி அல்வாய் கிழக்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
பாடசாலை மண்டபத்தில் மாலை 4 மணியளவில் இது நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (4)

## காணி உறுதிகள் இன்று வழங்கல்

சுழிபுரம் மேற்கு குகன்குல சங்கம் ஊடாக 105 பயனாளிகளுக்கு காணிகள் பங்கிடப்பட்டு உறுதிகள் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளன.
சுழிபுரம் மேற்கில் உள்ள காணிகளே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.
முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார்.
சுழிபுரம் மேற்கில் குகன்குல சங்க தலைவர் நா.இராசரத்தினம் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நிகழ்வு இடம்பெறும்.
சிறப்பு விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், பிரதேச செயலாளர் திருமதி பொன்னம்பலம் பிறேமினி, மல்லாகம் சட்டத்தரணி சாருஜா மயூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (4,50)

## கந்தசுவாமிக்கு இன்று தேர்

கொடிகாமம், ஓக. 10
மீசாலை கிழக்கு காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (4,159)

## குடிதண்ணீர் விநியோக திட்டம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10
நெல்லியான் - பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத்திட்டத் திறப்பு நிகழ்வு பொன்னாலை மேற்கில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30க்கு இடம்பெறவுள்ளது.
வேள்ட் விசன்- ரிவோஸ் 3 திட்டத்தின் 8.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குடிதண்ணீர் திட்டம் உருவாக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த 240 குடும்பங்களுக்கு நன்னீர் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு வேள்ட் விசன் நிறுவன பணிப்பாளர் கிளாரன்ஸ் சுதர்சன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி எம். சுலோசனா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4,50)

மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டபின்னர்

# பருத்தித்துறை மகப்பேற்று நிபுணர் யாழ்.போதனாவுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 10

தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டதையடுத்து, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவ நிபுணர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிக்கு வடக்கு வலிகாமம் கிழக்கின் வடக்குப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த கர்ப்பிணிகள், பருத்தித்துறை மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணர் இல்லாததால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர். இவ்வாறு மாதாந்தம் 200 தொடக்கம் 300 பேர் போதனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர்.
தங்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்புவதால் சிரமங்களை எதிர்நோக்குவதாக வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி வடக்குப் பிரதேச மக்கள் மாகாண சபை உறுப்பினர்கள் மூலமாக மாகாண சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். எனினும் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. வடக்கு மாகாணத்தில் மகப்பேற்று நிபுணர் பற்றாக்குறையாகக் காணப்பட்டனர். அதனால் மக்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்தநிலையில் திருகோணமலையைச் சேர்ந்த மகப்பேற்று மருத்துவர் மந்திகை மருத்துவமனைக்கு இடமாற்றல் கேட்டு வருகை தந்து கடமைகளை மேற்கொண்டுவந்தார்.
இந்த நிலையில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமாற்ற அடிப்படையில் குறித்த மருத்துவ நிபுணரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றல் செய்திருந்தார். இதனால் வடமராட்சிப் பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முற்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
மாகாண சபை உறுப்பினர்கள் மூலமாகத் தகவலை அறிந்த மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் பிரதேச மக்களுடன் நேற்றுக் கலந்துரையாடி உரிய பதில் வழங்குவதாக உறுதியளித்து மருத்துவ நிபுணரின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு மருத்துவமனை நிர்வாகத்துக்குப் பணித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இதுதவிர, சிறு சிறு பிரச்சினைகளுக்குப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் மருத்துவர்களுக்குப் பணிப்புறக்கணிப்பு விடுமுறையுடன் மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. ஆனால் ஏனைய திணைக்களத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால் பணிப்புறக்கணிப்பு நாள் விடுமுறையாக கணிக்கப்படுவது குறித்தும் பிற திணைக்களத்தினர் கவலை தெரிவித்தனர். (4,9)



தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த 45 முதியவர்கள் மன்னார் மாவட்டத்துக்கு ஆன்மீக வழிபாட்டுச் சுற்றுலா சென்றனர். அவர்கள் திருக்கேதீஸ்வரம், மடுமாதா தேவாலயம் ஆகியவற்றிற்குச் சுற்றுலா சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். தெல்லிப்பழைப் பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவின் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள ஏற்பாட்டில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

## பனிப்புலம் முத்துமாரிக்கு இன்று வேட்டைத் திருவிழா

கொடிகாமம், ஓக. 10
பண்டத்தரிப்பு பனிப்புலம் சிறி முத்துமாரி அம்பாள்ஆலயப் பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா நாளை இடம்பெறவுள்ளது.
கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. 15 நாள்கள் திருவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், நாளை சப்பறத்திருவிழாவும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (4,159)

## ஆடிஅமாவாசைக்கு வருவோர் புனிதம் பேணவும்

யாழ்ப்பாணம், ஓக. 10
மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தம் மற்றும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை6 மணிக்குதீர்த்தக்கேணியில் நடைபெற்று மாலை 6 மணிக்கு சுவாமி வீதிவலம் வருவார்.
பக்த அடியார்களும் பிதிர்க்கடன் தீர்க்க வரும் அடியார்களும் ஆலயச் சூழல் மற்றும் பிரதேசங்களின் புனிதத் தன்மையை பாதுகாப்பதுடன் அந்தப்பிரதேசங்களில் பாதணிகளுடன் செல்வதைத் தவிர்க்குமாறும், கோவிலுக்கு வருகைதரும் பக்தர்கள் இந்து சமய கலாசார பண்பாட்டைப் பேணிக்காக்கும் கலாசார உடைகளுடன் வருமாறும் கோரப்படுகின்றனர்.
பிரதேசத்தில் பொலித்தீன் பாவனையைத் தவிர்த்தல், புனித பிரதேசத்தில் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போடுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். பிரதேசத்தைப் புனிதமாகப் பேணி, வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தி ஒழுங்குகளை கடைப்பிடித்துதவுமாறும் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார். (4,113)

## போதைப் பொருள்கள் பற்றி வழிப்புணர்வுக் கருத்தரங்கு



தென்மராட்சி, ஓக.10
போதைப் பொருள் பாவனையும் அதன் தாக்கங்களும் எனும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது.
முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் இது நடைபெற்றது. சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தினரும் லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து இதை நடத்தினர்.
கருத்தரங்கில் பெருமளவான பெற்றோர், மாணவர்கள் கலந்துகொண்டனர். கருத்தரங்கில் காணொலி மூலமான விளக்கங்களும் காண்பிக்கப்பட்டன. (4,9)

## தெல்லிப்பழை துர்க்கைக்கு திங்கள் கொடி

யாழ்ப்பாணம், ஓக. 10
வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,147)

## நெசவுசாலை வீதியை சீரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 10
மானிப்பாய் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக உள்ள வீதி மிக நீண்டகாலமாகப் பழுதடைந்தநிலையில் காணப்படுகின்றது. அதனைச் சீரமைத்துத் தருமாறு கோரப்படுகிறது.
வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இந்தநெசவுசாலை வீதி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எந்த வித கவனிப்பும் அற்ற நிலையில் முற்றுமுழுதாக சீரழிந்து வெறும் கற்கள் மட்டுமே வீதியின் மேற்பரப்பில் உள்ளன. வாகனத்தில் மட்டுமன்றி வீதியால் நடந்து செல்வதுகூட மிகவும் கடினமாக உள்ளது. அதனால் விரைவில் சீரமைக்க வேண்டும் என்று பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றனர். (4,147)

## முன்பள்ளிச் சிறார்களின் போட்டிகள் தொடர்கின்றன



சாவகச்சேரி, ஓக. 10
96 ஆவது பன்னாட்டுக் கூட்டுறவு தினத்தையொட்டி சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் முன்பள்ளிச் சிறார்களுக்கிடையிலான போட்டிகளை நடத்திவருகின்றனர்.
சங்கத்தினர் நேற்று பத்து முன்பள்ளிகளின் சிறார்களுக்கிடையில் திருக்குறள், ஆத்திசூடி போன்ற மனனப்போட்டிகளை நடத்தினர். எதிர்வரும் 15ஆம் திகதி முன்பள்ளிகளின் சிறார்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று சங்கப் பொது முகாமையாளர் க.நாகசுபாசன் தெரிவித்தார். (4,9)

## சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக. 10
யாழ்ப்பாணம் புதிய சோனக தெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு சங்க நிதியிலிருந்து சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை ஆறுகால்மடம் அறவொளி கலையரங்க முன்றலில் பிற்பகல் 4 மணிக்கு சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறும்.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

சுதுமலை, ஓக. 10
யாழ்ப்பாணம் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும் மகாமாரி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிக்கு புளியங்கூடல் புதுவெளித்திடலில் நடைபெறும்.
போட்டியில் கலந்துகொண்டு முதல் 4 இடங்களைப் பெறும் காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என்று மகாமாரி சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (147)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஓக. 10
சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசமாக அலைபேசி திருத்துதல், எல்.ஈ.டி. மின்குமிழ் தயாரித்தல் மற்றும் மறைகாணிகள் (சிசிரிவி) பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் எதிர்வரும் 14 செவ்வாய்க்கிழமை கோப்பாய் பிரதேச செயலக விதாதா வளநிலையத்தில் நடைபெறவுள்ளன.
ஆர்வமுள்ள சுயதொழில் முயற்சியாளர்கள் மேற்படி பயிற்சியில் கலந்து பயன்பெறும் முகமாக பதிவினை மானிப்பாய் வீதி கோப்பாயில் அமைந்துள்ள பிரதேச செயலக விதாதா வளநிலையத்தில் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆடித் திருக்குளிர்த்தி

யாழ்ப்பாணம்,ஓக. 10
காரைநகர் மணற்காடு கும்பநாயகி அம்பாள் ஆடித் திருக்குளிர்த்தி சங்காபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

*சந்தைகளை அடிக்கடிச் சீரமைத்து கிடைக்கும் நிதியை வீணாக்காது*

# மாதிரி வரைபடம் தயாரித்து கட்டுமானத்தை ஏற்படுத்தவும்

தென்மராட்சி, ஓக. 10

**கொடிகாமம் சந்தைக் கட்டடங்கள் மிகப் பழைமை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. அடிக்கடி அவற்றைச் சீரமைத்து சபையின் நிதியை வீணடிக்காமல் கொடிகாமம் நகரப் பகுதியை அழகுபடுத்தும் வகையிலான மாதிரி வரைபடம் தயாரித்து அதன் அடிப்படையில் கட்டடங்களை அமைக்க வேண்டியது கட்டாயம்.**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் கு.ந.பாலச்சந்திரன் அமர்வில் தெரிவித்தார்.
சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது.
கொடிகாமம் சந்தை கடந்த காலங்களில் பிரபல்யம்மிக்கதாக விளங்கிவருகின்றது. இதனை வசதிகளுடன் கூடிய சந்தையாக மாற்ற வேண்டிய பெரும்பொறுப்பு எமக்கு உள்ளது.
சந்தை விஸ்தரிப்புக்குக் கடல் உணவுகள் விற்பனைப் பகுதி இடைஞ்சலாக காணப்படின் அதனை வேறு இடத்துக்கு மாற்றி கடலுணவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கும் வகையிலான மாதிரி வரைபடம் தயாரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியுடன் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்க வேண்டும்.
கடலுணவு விற்பனைப் பிரிவுக்கென வேறு இடத்தில் கட்டடம் அமைப்பது சிறந்தது என்று தெரிவித்தார்.
இதற்குக் கருத்துத் தெரிவித்த தவிசாளர், கொடிகாமம் சந்தையை நவீன வடிவில் அமைத்து மென்மேலும் மக்களுக்கு நன்மைகளை வழங்கவேண்டுமென்பது உறுப்பினர்கள் அனைவரினதும் விருப்பம். ஒரே நேரத்தில் நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்படும் என்பதால் கிடைக்கும் நிதியில் தயாரிக்கப்படும் மாதிரி வரைபடத்துக்கு அமைவாக நிதி உதவிகளுடன் சந்தையைச் சீரமைக்க வேண்டும். கிடைக்கும் நிதிகளைக்கொண்டு கட்டடங்கள் அமைக்க முற்படுகையில் அங்குள்ள சில வியாபாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து மாற்று ஏற்பாடுகள் வழங்கிய போதிலும் கட்டடம் அமைக்கும்வரை புதிய இடத்துக்குச் செல்ல மறுக்கின்றனர் எனத் தெரிவித்தார்.
அவ்வேளையில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், நாளாந்த வருமானத்துக்காக அங்கு வியாபாரம் செய்பவர்கள் சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைக்க மறுத்தால் பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். (4.S.159)

*காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் தொடர்பில்*

# வடக்கு சிவில் சமூக அமைப்புகளின் கருத்தறியும் அமர்வு திங்கட்கிழமை

*அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்துகிறது*

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் காணாமற் போனோர் ஆணைக்குழு தொடர்பான சிவில் சமூக அமைப்புகளின் கருத்தறியும் அமர்வை நடத்துகின்றது. இதில் சிவில் சமூக அமைப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகள், அரசியல் கட்சி சார்ந்தோர், கல்வியியலாளர்கள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
தமது கருத்துகளை எழுத்து மூலமும் சமர்ப்பிக்குமாறும் இதனை ஏற்பாடு செய்துள்ள இணையத்தின் தலைவர் சே.தேவானந்த் கேட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இது இடம்பெறவுள்ளது.
இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
இலங்கை அரசால் காணாமற்போனோர் ஆணையாளர் பணியகம் அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழு தொடர்பான சிவில் சமூக அமைப்புகளின் கருத்தறியும் அமர்வுகள் பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் இந்தக் கருத்தறியும் அமர்வு நடத்தப்பட்டு கருத்துகள் பெறப்பட்டன.
சிவில் சமூக அமைப்புகளிடம் கருத்தறிதல் என்பது ஒரு சம்பிரதாயத்துக்காக நடத்தப்படுகின்ற சடங்காகவே கடந்த காலங்களில் நடைபெற்றிருக்கிறது என்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான கருத்தறியும் அமர்வுகளில் சிவில் சமூக அமைப்புகள் தெரிவிக்கின்ற கருத்துகள் மற்றும் முன்வைக்கப்படும் திட்டங்கள் தொகுக்கப்பட்டு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகளைக் காணமுடியவில்லை. ஒரு அமர்வு நடத்தப்பட்டது என்பதற்கான கையொப்பங்கள் பெறப்படுவதில் காட்டப்படுகின்ற அக்கறையளவுக்கு சிவில் சமூக அமைப்புக்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்பட்டு ஆக்கபூர்வமான முன்மொழிவுகளாக எழுத்து வடிவில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்ய முடியவில்லை.
சிவில் சமூகங்களின் நிலைப்பாட்டுக்கு மாறாக கருத்துக்கள் சிவில் அமைப்புக்களின் கருத்துக்களாக உட்புகுத்தப்படும் ஏது நிலைகளையும் அவதானிக்க முடிகின்றது.
ஒவ்வொரு கருத்தறியும் அமர்விலும் சிவில் அமைப்புகள் முன்வைக்கும் கருத்துக்கள் எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் உணரப்படுகிறது. இதன் மூலமே சிவில் அமைப்புகளின் கருத்துகள் பயனுள்ள பதிவுகளாக முடியும். இதனைக் கருத்திற்கொண்டு குறித்த அமர்வில் கலந்துகொண்டு கருத்துகளைப் பதிவு செய்யுமாறு தலைவர் கேட்டுள்ளார். (4)

## பேச்சுப்போட்டி

*யாழ்ப்பாணம்,ஓக.10*
*யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 வலயங்களிலும் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களிற்கு சமய அறிவினையும் பேச்சுத்திறனையும் வளர்க்கும் நோக்கில் பேச்சுப் போட்டி நடாத்தப்படவுள்ளது.*
*இந்தப் போட்டி யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.*
*சைவசமய விவகாரக் குழு நல்லூரர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் நல்லைக்குமரன் என்னும் மலரினை வெளியிடுவதுடன் பாடசாலை மாணவர்களிடையே சைவசமய அறிவினை வளர்ப்பதற்காகப் போட்டிகளையும் நடாத்தி வருகின்றது.*

## கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக. 10
நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் நடப்பு ஆண்டுக்குரிய பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.
கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கலைஞானச்சுடர் விருதுக்கு தகுதியான கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறன.
விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி

சாவகச்சேரி, ஓக.10
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் நல்லியடி யாழ் பீச் விடுதியில் காலை 8.45 மணி தொடக்கம் இது நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பயிற்சிப் பட்டறையை நெக்டர் லங்கா நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிறுவனத்தினர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல்வர் மற்றும் தவிசாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையை கட்டம் கட்டமாக நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4.9)

## 'இடிபடும் கோட்டைகள்' நாவல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 10
மூத்த படைப்பாளர் நா.யோகேந்திரநாதன் எழுதிய "இடிபடும் கோட்டைகள்" நாவல் வெளியீடு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளது.
1950 - 1960 காலப் பகுதியில் எமது மண்ணில் நிலவிய சமூக, பண்பாட்டு வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியப் படைப்பாக குறித்த நாவல் வெளிவருகின்றது.
நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

## பிதிர்க்கடன் செய்வோருக்கு கீரிமலையில் தங்குமிட வசதி

### உணவும் வழங்குகிறது சைவ மகாசபை

யாழ்ப்பாணம், ஓக. 10

ஆடி அமாவாசை தினமான நாளை சனிக்கிழமை பிதிர்க்கடன் செலுத்தவரும் அடியார்களுக்கு இலவச தங்குமிட வசதிகளைச் செய்யவுள்ளதாகச்சைவமாகாசபைதெரிவித்துள்ளது.

தாய் தந்தையர்களை இழந்தவர்கள் பிதிர்க்கடன் செலுத்துவதற்காகத் தூர பிரதேசங்களில் இருந்து வருகின்றனர். அவர்களுக்காக சைவ மகாசபை இலவச தங்குமிட வசதிகளைஏற்படுத்திக்கொடுக்கத்தீர்மானித்துள்ளது.

கீரிமலை முத்துமாரியம்மன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள குழந்தைவேல் சுவாமிகள் சித்தர் மடாலயத்தில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு தங்குபவர்களுக்கான இலவசஉணவைச்சைவமாகாசபையினர்வழங்குவர்என்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4,114)

## வாள்வெட்டுச் சம்பவத்தில் தேடப்பட்டவர் சரணடைவு

யாழ்ப்பாணம், ஓக. 10

நீர்வேலி வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவரைக் கைது செய்துள்ளோம்என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

நீர்வேலி செம்பாட்டு பிள்ளையார் கோவிலுக்குள் கடந்த மே மாதம் வாள்வெட்டு இடம்பெற்றிருந்தது. அதே இடத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்திருந்தனர். சம்பவத்துடன்தொடர்புபட்டவர்கள் இணுவில் தாவடி போன்ற பகுதிகளைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தொடர்ந்தும்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று மேலும் சிலரைத் தேடி வருகிறோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், குறித்த சந்தேகநபர் சட்டத்தரணி ஒருவர்மூலமாகயாழ்ப்பாணநீதிமன்றில்சரணடையவிருந்தார். எனினும் நீதிமன்றில் சரணடையாது அவரைப் பொலிஸ் நிலையத்தில் சரணடையுமாறு நீதிவான் தெரிவித்ததையடுத்து நேற்று முன்தினம் அவர்பொலிஸ்நிலையத்தில்சட்டத்தரணிமூலமாகச் சரணடைந்தார். அவர்நீதிவான்நீதிமன்றில்நேற்று முற்படுத்தப்பட்டார்.

அவர் தரப்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி பிரதீபன், சந்தேகநபருக்கும் வாள்வெட்டுச் சம்பவத்துக்கும் தொடர்பில்லை எனவும் நண்பர் ஒருவரின் அழைப்பின் பேரிலே அந்த இடத்துக்குச்சென்றிருந்தார் என்றும் மன்றில் தெரிவித்தார். வழக்கை ஆராய்ந்தயாழ்ப்பாணநீதிமன்றமாவட்டநீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய வி. இராமக்கமலன், சந்தேக நபரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4,114)

*அரசின் ஆணைக்குழுக்களை நம்புவதற்கு*

# இலங்கை அரசின் செயற்பாடுகளில் மாற்றத்தைக் காட்டச் சொல்லுங்கள்

### காணாமற்போனோரின் உறவுகள் சுவீடன் பிரதிநிதியிடம் கோரிக்கை

திருகோணமலை, ஓக. 10

**காணாமல்ஆக்கப்பட்டவர்களைமீளஎங்களிடம்ஒப்படைக்கவேண்டும்என்பதில் நாங்கள் இன்னும் உறுதியாகவே இருக்கிறோம். இலங்கை அரசின் ஆணைக்குழுக்களை, பணியகங்களை நாம் நம்புவதாக இருந்தால் இலங்கை அரசின் செயலில் மாற்றத்தைக் காட்டச் சொல்லுங்கள். இலங்கை அரசின் பிரதிநிதிகளிடம் இதனை எடுத்துச் சொல்லுங்கள்.**

இவ்வாறு சுவீடன் அரசின் ஜனநாயகக் கவுன்சிலரும் நீதி மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருமான சிமொனற்றாசம்மருகாவிடம்இலங்கையில்வடக்கு-கிழக்கைச்சேர்ந்தகாணமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

அவர்களுக்கும் சுவீடனின் குறித்த அதிகாரிக்கும் இடையிலான சந்திப்புத் திருகோணமலையில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது. அதில்காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் மனு ஒன்றை வழங்கினர். அதில் மேற்கண்டவாறு கூறியுள்ளனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எங்களுடைய உறவுகள் போரின் போதும்அதற்குப்பின்னரும், வெள்ளை வான் கடத்தல்கள் மூலமாகக் கடத்திச் செல்லப்பட்டனர்.

**அவர்கள் எங்கே?**

ஒவ்வொருஆணைக்குழுவுக்கும், ஒவ்வொரு விசாரணைக்கும், ஒவ்வொரு ஐ.நா. அதிகாரிக்கும், ஒவ்வொரு பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனத்துக்கு முன்னாலும், எங்களுடைய அன்புக்குரியவர்களைக்கண்டுபிடிப்பதில்அவர்களால் உதவக்கூடியதாக இருக்கும் என்றநம்பிக்கையில்சென்றுள்ளோம்.

போர் முடிந்து ஒன்பதுஆண்டுகள் ஆகியும், நாங்கள் இந்தப் போராட்டங்களை ஆரம்பித்துஒருவருடமாகியும், நாங்கள் மிகவும் பதைபதைப்புடன் தேடும் பதில்களை எங்களுக்குத் தருவதற்கு, இலங்கை அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நாங்கள் வெயில், மழை, தூசு போன்ற மிகக் கொடூரமான நிலைமைகளில், ஒரேகொள்கையுடன் வீதியோரத்தில் இருந்து வந்திருக்கின்றோம்.

காணாமல்போனோருக்கானபணியகத்துக்கு எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு எங்களுக்கு எந்தச் சந்தர்ப்பங்களும் வழங்கப்படவில்லை. நாமாக அந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டு மேற்படி கருத்துக்களை அரசதலைவர், தலைமை அமைச்சர் பணியகம் ஆகியவற்றிடம் தெரிவித்தோம். எந்தப் பயனும் கிட்டவில்லை.

அரசதலைவர் முன்னர் குறிப்பிட்டது போல பட்டியல்களை வெளியிடுவது தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளையும்நிறைவேற்றவில்லை. பொறிமுறையால் எங்களுக்கு எந்தவிதமான தீர்வுகளும்கிடைக்காதுஎன்றமுடிவுக்குவருவதற்குநாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த காணாமற்போனோர் பிரச்சினையில் செயற்பாட்டு அனுபவம் உள்ள எந்தச் சிவில் சமூகப் பிரதிநிதியும் உள்வாங்கப்படவில்லை. இன்று எமக்குத் தேவை உறுதிமொழிகள் அல்ல. நடவடிக்கைகள் என்பதே எமது நிலைப்பாடு.

அண்மையில் காணாமற்போனோர் பணியகத்தினர்வடக்கு-கிழக்குஉட்படப் பலபிரதேசங்களில் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். எங்களுக்கு ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவதில்எந்தவொருபிரச்சினையும் இல்லை. அதனால் காணாமற்போன உறவுகள் அமைப்பு ரீதியாகப் நீண்ட காலமாகவே செயற்பட்டு வருகிறோம். எமது கோரிக்கைகள் என்னவென்பதைப் பொதுவெளியில் தெளிவாகவே முன்வைத்துள்ளோம். இப்பொழுதுஎமக்குத்தேவை மேலதிக கூட்டங்கள் அல்ல. காத்திரமான நடவடிக்கைகளே. உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தரப்புக்கள் அரசோடு நல்லுறவு பாராட்ட விரும்புவதற்காக கண்மூடித்தனமாக நம்பிக்கை வைக்குமாறு எங்களைக் கேட்கமுடியாது. ஒவ்வொருமுறையும் ஒருஆணைக்குழுவோ அல்லது பணியகமோ அமைக்கப்படும் போது அதன் முன் அழுது, மண்டியிட்டுமுறையிட எங்களை எதிர்பார்க்கவேண்டாம். கடந்தகாலங்களில்நாங்கள்போதுமானளவு அதனைச் செய்துவிட்டோம். நல்லெண்ணத்தைக் காட்டவேண்டிய சுமை ஆணைக்குழு மீதுள்ளது. குழு எம்மைச் சந்திக்கவரும் போதுநாங்கள் காத்திரமான ஒருவேண்டுகோளை வைத்தோம்.

இந்த அரசு பதவிக்கு வந்தகாலத்திலிருந்து பன்னாட்டுச் சமூகம் இவர்களின் அன்ரகுறைமுயற்சிகளுக்குஆதரவுநல்கச்சொல்லிஎங்களைக்கேட்டுவந்துள்ளனர். அரசின் மீதுபிரயோகிக்கப்படும் அழுத்தம் இப்போது எங்கள் மீது செலுத்தப்படுகிறது. தீர்வுகளைநோக்கிநாங்கள் வேலைசெய்யத்தயார் என்பதைக் காட்டும்பொறுப்புஎங்கள்மீதுசுமத்தப்படுகிறது. சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் தகைமை அற்றவர்போல் எங்கள் மீது பரப்புரைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதுவெந்தபுண்ணில்வேல்பாய்ச்சுவது போல. யாருமே அரசியற் கட்சியாக இருக்கலாம், அமைப்பாக இருக்கலாம் வீதிக்குஇறங்கிப்போராடுமாறுஎம்மைக் கோரவில்லை. அதுஎங்கள்முடிவு. நாங்களே எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றோம்.

எங்களுக்குள்கருத்துவேறுபாடுஇருக்கலாம் ஆனால் நாம் அவற்றைத் தீர்த்துக் கொள்வோம். ஆனால் எமக்கு என்ன தேவைஎன்பதில்எல்லோரும்தெளிவாக இருக்கிறோம்- என்றுள்ளது. (4)

## தேடப்பட்டு வந்தவர் கைது மறியலில் வைக்கஉத்தரவு

சாவகச்சேரி, ஓக. 10

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சாவகச்சேரி நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருந்து, பொலிஸாரால் தேடப்பட்டுவந்த வாள்வெட்டுக் குழு ஒன்றின் தலைவர் என்றுகூறப்படும் நபர் கைது செய்யப்பட்டார்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுமற்றும்வாள்வெட்டுச்சம்பவங்களுடன்தொடர்புடையவர் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வடமராட்சி துன்னாலைப் பகுதியில் வைத்துக் கடந்த 7ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டன. சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளைபொலிஸாரால்தேடப்பட்ட மற்றொருவர்கடந்த செவ்வாய்க்கிழமை மந்துவிலில் கைதுசெய்யப்பட்டார். அவரையும் 17ஆம் திகதி வரை மறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (4,9)

# சாவகச்சேரி மருத்துவமனையில் குருதிச் சுத்திகரிப்பு நிலையம்!

### திறந்து வைக்க அமைச்சர் ராஜித வருகிறார்

சாவகச்சேரி, ஓக. 10

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குருதி சுத்திகரிப்புநிலையம் எதிர்வரும்17 ஆம்திகதி தொடக்கம் இயங்கவுள்ளது. அன்று சிறுநீரகநோயாளர்களுக்கான முதல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அதனைத் திறந்துவைக்கமையசுகாதாரஅமைச்சர் ராஜித சேனாரத்ன வருகைதரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சைகள் சாவகச்சேரி மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சிறுநீரகப் பாதிப்புக்குள்ளான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். சிகிச்சைபெற்ற சிறுநீரகத்தில் கடுமையான பாதிப்புக்குஉள்ளானவர்களுக்குக் குருதிச்சுத்திகரிப்புச்செய்யவேண்டிய நிலை காணப்பட்டது. இதுதொடர்பாகயாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஊடாகமைய சுகாதார அமைச்சுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. சிகிச்சைநிலையத்துக்குவரும் நோயாளர்களுக்கு யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில்குருதிப் பரிசோதனைகள் நடத்தி வழங்கும் அறிக்கைகளுக்கு இங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. சிறுநீரக சிகிச்சைகளை மேற்கொண்ட மருத்துவர் இடமாற்றம்செய்யப்பட்டதையடுத்துசாவகச்சேரி மருத்துவமனையில் நடத்தப்பட்ட சிகிச்சை நிறுத்தப்பட்டது. நோயாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் மைய சுகாதாரத்திணைக்களத்தால் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரங்களும் அதன் உபகரணங்களும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. மருத்துவமனை வளாகத்தில் அமைந்திருந்த கட்டடமொன்று உடைக்கப்பட்டு அந்த இடத்தில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள்பொருத்தப்பட்டுள்ளன. இதற்கென மருத்துவரும்நியமிக்கப்பட்டுகடமைகளைப்பொறுப்பேற்றுள்ளார். மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை இயந்திர சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர்நோயாளர்கள் இணைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மருத்துவமனைப் பொது மருத்துவ நிபுணர் மகாதேவா தலைமையிலானமருத்துவக்குழுவினர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில்குருதிச்சுத்திகரிப்புநிலையங்கள்அமைந்துள்ளமருத்துவமனைகளுக்குச்சென்று அவற்றின்செயற்பாடுகள் தொடர்பாகப் பார்வையிட்டனர் எனவும்தெரிவிக்கப்பட்டது. (4,9)

# பயிலுநர் கல்லூரிகளில் பயின்றும் பணியகங்களில் பயிற்சி இல்லை

## மாணவர்கள் பலரும் கடும் மனவருத்தம் அதிகாரிகள் சீர் செய்ய வேண்டும் எனக்கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஒக. 10

வடக்கு மாகாணத்தில் பயிலுநர் கல்லூரிகள் ஊடாகக் கற்றலை நிறைவுசெய்து பயிற்சிக்காகச் செல்லும் மாணவர்களுக்கான ஒழுங்கான பயிற்சிகள் உரிய பணியகங்களில் கிடைப்பதில்லை என்று மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். மாணர்வர்களின் தொழிற்றிறனை மேம்படுத்துவதற்காகத் தொழில்முறைக்கல்விகள் தொழில்நுட்பக்கல்லூரிகள் மற்றும் பயிலுநர் அதிகார சபையின் கீழ் நடைபெறும் நிறுவனம் ஊடாகக் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாகத் தகவல் தொழில் நுட்பம், கணினி வலையமைப்பு, கணக்கீடு, ஒளிப்பட வடிவமைப்பு, தொலைத்தொடர்பாடல், இயந்திர தொழில் நுட்பம், பொறியியல் போன்ற பல்வேறு துறைகளில் மாணவர்களுக்குக் கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. என்.வி.கியூமட்டம்4இல்தொடங்கி 6 வரை செல்கின்றது. டிப்ளோமா தொடக்கம்பட்டம்வரையிலானகற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

பாட நெறிகளைப் பொறுத்து 6 மாதம் தொடக்கம்ஒருவருடம்அல்லதுஅதற்கு மேலதிக வருடங்கள்கொண்டகற்கை நெறிகள் நடைபெறுகின்றன. ஒரு வருடக்கற்கைநெறியில் 6மாதங்கள் கற்றல்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும். அடுத்த6மாதங்களுக்குக்கற்றல் துறைசார்ந்த பணியகம் ஒன்றில் பயிற்சி பெற வேண்டும். கற்பித்தலை மேற்கொள்ளும்நிறுவனங்கள் அந்தப் பயிற்சிக்கானஒழுங்குளைமேற்கொள்ளும். அத்துடன் மாணவர்களும் தாம் கற்ற கல்விக்கு ஏற்ப உரிய பணியகத்தைத் தெரிவுசெய்கின்றனர். பல்கலைக்கழகங்கள், மாவட்டச்செயலகங்கள், பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள், அமைச்சுகள் உள்ளிட்ட பல்வேறு பணியகங்களில் பயிற்சிக்காகச் செல்கின்றனர். அங்கு அநேகமான பணியகங்களில் மாணவர்களுக்கு உரிய வகையில் பாடம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவதில்லைஎன்றுகுற்றஞ்சாட்டப்படுகிறது.

இதுதொடர்பில்மாணவர்கள்தெரிவித்ததாவது:

தகவல் தொழில்நுட்பம் படித்துவிட்டுப் பயிற்சிக்காகப் பணியகம் செல்கின்றோம். நாள்ஒன்றுக்கு 500ரூபா தரப்படுகின்றது. கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் படித்துவிட்டுச்செல்லும் தமக்கு அங்கு தரப்படும் வேலைகள் கவலைக்குரியவை. போட்டோ பிரதி எடுத்துக் கொடுத்தல், காகிதங்களை ஒன்றாகச்சேர்த்துக்கட்டிக்கொடுத்தல், ஆவணங்கள் அடங்கிய பயில்களுக்குப் பெயர் எழுதி ஒட்டுதல், கடிதங்கள் அனுப்புவதற்குக் கடித உறையில் பெயர் எழுதுதல், அலுமாரிகளுக்குப் பெயர் எழுதுதல், பந்தி பந்தியாக தட்டச்சுச்செய்தல், பணியகம்சார் த்னிப்பட்ட பயில்களைத்தேடிஎடுத்துக்கொடுத்தல் போன்ற வேலைகள் தரப்படுகின்றன. ஒளிப்பட வடிமைப்புபடித்தவர்களுக்கு அந்த நிறுவனம் சார்ந்த ஏதேனும் விழாவுக்கான அழைப்பிதழை அங்கு உள்ள பணியாளர் வடிவமைக்கும் போது அருகில்எம்மைக்கூப்பிட்டுஒரு விடயம் கூடச்சொல்வதில்லை. பிரதி எடுத்துக் கொடுப்பதற்கு எம்மை அழைப்பார்கள். கணனி வலையமைப்புப் தொடர்பான கற்கையை மேற்கொண்டவர்கள் பணியகத்தில் இணையம்சார்பானபிழைகள்ஏற்பட்டால்அந்தவிடயத்தில்கவனம்செலுத்த அனுமதிக்கமாட்டார்கள்.

நாம் படித்தது கணினியில் தரவுகளை உள்ளீடு செய்தல், ஆவணங்களுக்கான வடிவமைப்பு வேலைகள், மின்னஞ்சல் முறைமை, இணையம் சார்பான பணிகள் எனப் பல்வேறு பணிகளைச்செய்வதற்கு. ஆனால்பயிற்சிக்காகச் செல்லும்போது அநேகமான அலுவலங்களில் படித்ததற்கு மாறான பணிகளையே செய்கின்றோம். இதனைச் செய்துவிட்டு 6மாதங்கள் கழித்து எமக்குப் பரீட்சைகள் நடைபெறும். அதில் சித்தியடைந்தால் மாத்திரமே எமக்குச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் உரிய பயிற்சிகள் கிடைக்காமையால் பரீட்சையில் தோல்வியடைந்துஅடுத்தஎன்.வி.கியூ மட்டக்கற்றல்நெறிக்கும்செல்லமுடியாதநிலைஏற்படுகின்றது-என்றுதெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பணியகங்களும், அவற்றின் பணிப்பாளர்கள், பிரிவுத்தலைவர்கள் கவனஞ்செலுத்தவேண்டும். நாம்படித்தவற்றைச்செயற்படுத்தஇடமளித்தால் தான் தமக்கும் தாம் படித்ததற்கும் பயனுடையதாக அமையும். அடுத்த கட்டத்தை நோக்கி நகரலாம். அதற்கேற்ப இடம் வழங்கப்படாவிடின் தாம் என்ன செய்வது? எதற்காகப்படிக்கவேண்டும் என்ற கேள்வி எழக்கூடாதல்லவா? எனவே எமது திணைக்கள, கற்றல் நிலைய அதிகாரிகளும், நாங்கள் பயிற்சிபெறும்நிறுவனத்தினரும்இந்த விடயம் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டும்என்றுமாணவர்கள்கோருகின்றனர். (4.7)

# தேனுக்கு ஆசைப்பட்டு விருட்சத்துக்கு தீ வைத்த விசமிகள்

கொடிகாமம், ஒக. 10

ஆலயதலவிருட்சமானநாவல்மரத்தில்காணப்பட்ட தேனைப் பெறுவதற்காக இனந்தெரியாதோர் தீ வைத்துள்ளனர். அதனால் நாவல் மரம் கொழுந்துவிட்டுஎரிந்தது.

சம்பவம் கொடிகாமம் கொயிலாமனையில் அமைந்துள்ள அண்ணமார் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்றது. நாவல்மரத்தின் அருகாககொயிலாமனை வீதிக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு செல்கிறது.

கொழுந்து விட்டு எரிந்த தீயால் இடர் ஏற்படும் என்று கருதி அயலவர்கள் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்ததையடுத்து நிர்வாகத்தினர் கொடிகாமம் பொலிஸாருக்கும், சாவகச்சேரி மின்சார நிலையத்தினருக்கும் தெரிவித்துள்ளனர்.

அங்கு விரைந்த இரு தரப்பினரும்ஆலய பரிபாலன சபையினரும் இரவு 8 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரை தீ அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பின்னர் தலவிருட்சம் முழுமையாக எரியாதவாறு தீ கட்டுப்படுத்தப்பட்டது. (4.159)

## தெல்லிப்பழை மருத்துவமனையில்

# குருதிச் சுத்திகரிப்பு நிலைய பணி இன்றுடன் 500 நாள்கள்

யாழ்ப்பாணம், ஒக. 10

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிறுநீரக் நோயாளர்களுக்கானகுருதிச்சுத்திகரிப்புநிலையத்தின்500 ஆவது குருதிச் சுத்திகரிப்பு இன்று இடம்பெறுகிறது.

குருதிச்சுத்திகரிப்புக்கடந்தஜனவரிமாதம்ஆரம்பிக்கப்பட்டு தினமும்குருதிச்சுத்திகரிப்புப்பரிசோதனைகள்இடம்பெற்று வருகின்றன.

அதன் 500ஆவது நாளையொட்டி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சிறுநீரகப் பிரிவில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மருத்துவமனையின் அத்தியட்சகர் யோ.திவாகர் மற்றும் மருத்துவ நிபுணர் அ.ரகுபதி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வில்மருத்துவநிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும்தாதியஉத்தியோகத்தர்கள்கலந்துசிறப்பிக்கின்றனர் என்று மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர். (4)

# கொழும்பு குடிவரவு அதிகாரிகளால் இந்தியர் 5 பேர் யாழில் கைது

யாழ்ப்பாணம், ஒக. 10

கொழும்பிலிருந்து வந்த குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்தியர்கள் 5 பேரை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல தங்குமிட விடுதியில் வைத்து அவர்களைக் கைது செய்தனர்.

சாத்திரம் கூறுபவர்களாக அவர்கள் இங்கு தங்கியிருந்துள்ளனர் என்றும், அவர்கள் இங்கு தங்கியிருப்பதற்கான நுழைவிசைவு அனுமதிக்காலம் நிறைவடைந்த பின்னரும் தங்கியிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் உள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளே கைது செய்தனர். அவர்கள் 5 பேரும் கட்டுநாயக்க வானூர்தி நிலைய அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (4.106)

# யாழ்ப்பாண மாவட்ட மருத்துவர்கள் இன்று மதியம்வரை சுகவீனவிடுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதனா மருத்துவமனை தவிர்ந்த ஏனைய சகல மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இன்று காலை தொடக்கம் மதியம்வரை சுகவீனவிடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய்ப்பிரிவு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றது. தெல்லிப்பளை புற்றுநோய்மருத்துவமனையில் இந்தச்சிகிச்சைப் பிரிவுக்குமாத்திரம்18மருத்துவர்கள்தேவைப்படுகின்றனர் ஆனால் தற்போது 9 மருத்துவர்களே கடமையாற்றுகிறார்கள். அங்கு நீண்டகாலம்சேவையில்உள்ளவர்களுக்கும்உரிய காலப்பகுதிக்குள் இடமாற்றம் வழங்கப்படுவதில்லை. இதனால் அங்கு மருத்துவர்களுக்கு நீண்டகாலமாகப்பற்றாக்குறைநிலவுகின்றது. இது மோசமான நிலை.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கும், அமைச்சுக்கும் அறிவித்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. இதுவரை நோயாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாதவாறு அங்குள்ள சொற்ப மருத்துவர்கள் பணிபுரிகின்றனர்.

இத்தகையநிலையில்மைய சுகாதார அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கைப்படி 2015ஆம் ஆண்டுவரை அங்கு பணிபுரிந்த மருத்துவர்களை இடமாற்றம் செய்யுமாறு மருத்துவமனைப்பணிப்பாளர்மற்றும்மருத்துவ அத்தியட்சகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைமற்றும்கிளிநொச்சிமருத்துவமனையில் இருந்து தெல்லிப்பளை புற்றுநோய் மருத்துவமனைக்குவரவேண்டியவர்களை விடுவிக்க அந்த மருத்துவமனைகளின் பொறுப்பதிகாரிகள் இணங்கியுள்ளனர். போதனாமருத்துவமனைஉட்பட அனைத்து மருத்துவமனைநிர்வாகங்களும்இடமாற்றத்துக்கு ஆதரவு தெரிவிக்கின்றன. ஆனால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் குகதாசன் மட்டும் அங்குள்ளமருத்துவர்களுக்குப்பிரதியீடாக மருத்துவர்களை விடுவிக்க மறுப்புத் தெரிவிக்கின்றார்.

இவர் முன்னர் சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்தபோதும் பல நிர்வாகக் குற்றச்சாட்டுக்கள்இருந்தன. அங்கிருந்தபோதும்இடமாற்றம்செய்யவேண்டியமருத்துவர்களை விடுவிக்க மறுத்துவந்தார். மாகாண சுகாதார அமைச்சரின் கருத்துக்களையும் அவர் செவிமடுப்பதில்லை என்றும் அபிவிருத்தி பற்றிய சுகாதாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லைஎனவும்சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எமதுதாய்சங்கத்தின் ஊடாகப்பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் குகதாசன்மீதுநடவடிக்கைஎடுக்கவேண்டும்என்று பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக மைய சுகாதார அமைச்சுக்கும் அறிவித்துள்ளோம். சிலநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எதிர்பார்கின்றோம்.

எவ்வாறிருப்பினும்தெல்லிப்பளைமருத்துவமனையில்நிலவும்பற்றாக்குறையைநிவர்த்தி செய்வதற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் இன்று வெள்ளிக்கிழமைவேலைநிறுத்தப்போராட்டத்தைநடத்த முடிவுசெய்துள்ளோம். இந்தவேலைநிறுத்தப் போராட்டம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நீங்கலாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரசேவைகள்பிராந்தியத்துக்குஉட்பட்ட அனைத்துமருத்துவமனைகளிலும்நடைபெறும். எமதுகோரிக்கைகளாக2015ஆம்ஆண்டுவரையான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் குகதாசனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைஎடுக்குமாறுவடக்குமாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக கொழும்பு சுகாதாரப்பணிப்பாளர்நாயகத்துக்குக்கடிதம் எழுதியுள்ளோம். இதற்கு உடனடியாக நடவடிக்கைஎடுக்கவேண்டும்-என்றுள்ளது. (4.113)

## குப்பையைச் சேகரித்து குபேரனான லியனகே

கொழும்பு, ஒக 10

குப்பையில் போடப்படும் கழிவுப் பொருள்களை வைத்துப் பலவகை உற்பத்திப் பொருள்களை உருவாக்கி விற்பனை செய்துவந்த நபர் தற்போது பெரும் குபேரனாக மாறியுள்ளார். கண்டியில் வாழும் லியானகேதான் அந்தக் குபேரன்.

குப்பைகள் போடுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் பொதுமக்கள் அவற்றை வீதிகளில் வீசிவிட்டுச் செல்கின்றமையை அவதானித்த இவர். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என எண்ணினார்.

ஆரம்பத்தில் குப்பைகளில் இருந்து எடுக்கப்பட்ட பழைய காகிதங்களைப் பயன்படுத்தி வாழ்த்து மடல்களைத் தயாரித்துள்ளார். அவற்றை விற்பனை செய்வதில் பெரும் சவால்களை எதிர்கொண்டதுடன் ஆரம்ப காலத்தில் இவரின் உற்பத்திக்கு பெரிதாக வரவேற்பு இருக்கவில்லை. மாத வருமானம் 3 ஆயிரம் ரூபாவாக இருந்துள்ளது.

அதன் பின்னர் மெல்ல மெல்ல வியாபாரம் சூடு பிடித்து வெளிநாட்டவர் இவரின் உற்பத்தியை விரும்பி வாங்கிச் சென்றுள்ளனர்.

இவருடைய உற்பத்திக்கான மூலப் பொருள்கள் குப்பையிலிருந்தே பெறப்படுவதால் மூலப் பொருள்களுக்கான முதலீட்டுக்கென செலவீனங்களும் அவருக் இருக்கவில்லை.

ஆரம்ப காலத்தில் இவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த அதே நிறுவனம் இன்று 1 கோடி ரூபாவுக்கு இருவருடனான வர்த்தகத் தொடர்புகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது இவரது நிறுவனத்தில் 240 பேர் .தொழில் புரிவதுடன் இதில் 99 வீதமானவர்கள் பெண் தொழிலாளிகள். நாட்டில் இருந்து குப்பைகளை அகற்றும் பணியை மேற்கொள்வதுடன் வருமானத்தையும் சம்பாதிக்கும் இவ்வாறான செயற்பாட்டை அனைவரும் பின்பற்றுவதன் மூலம் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

# போலி மருந்து விநியோகத்துக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஒக 10

**போலி மருந்து வகைகளை இறக்குமதி மற்றும் விநியோகம் செய்வோருக்கு எதிராகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதாகச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

மருந்து ஒழுங்குமுறை அதிகார சபை, உணவு மருந்துகள் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து போலி மருந்து வகைகளை விநியோகம் செய்வோரைச் சுற்றிவளைக்கவுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு மருத்துவ நிபுணர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த சுற்றிவளைப்புக்களின் போது, கம்பஹா உள்ளிட்ட பல பகுதிகளில் போலி மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

இதேவேளை, கம்பஹா, பியகம, தொம்பே உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இயங்குகின்ற போலி மருத்துவர்கள் சம்பந்தமாகவும் சுகாதார அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பிலும் தற்போது அவதானஞ் செலுத்தப்பட்டு வருகிறது.

இதன்பிரகாரம், அனைத்துத் தனியார் மருத்துவர்களும் அவர்களது தனியார் மருத்துவ நிலையங்களை மருத்துவர்கள்.மருத்துவ ஒழுங்குமுறை அதிகார சபையில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் - என்றார்.

## விடுதலைப் புலிகள் மீண்டும் இணைந்து தமிழீழக் கனவை முழுமையடைய செய்வர்

கொழும்பு.ஒக 10

தற்போது பரவலாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் இணைந்து தங்களின் தமிழீழக் கனவை முழுமையடைச் செய்வார்கள் என்று முன்னாள் கடற்படைத் தளபதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரகேசர தெரிவித்தார். கொழும்பில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள அதிகாரப் பகிர்வு என்பது மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலை தூக்குவதற்கு இடமளிக்கும். சமீபத்தில் அதிகார பகிர்வினைக் கூறும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரின் கோரிக்கைகளுடன் வடக்கிலிருந்த இராணுவம் வெளியேற வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கை. இந்த அரசு இராணுவத்தின் அதிகாரங்களையும் வலுவிழக்கச் செய்துள்ளது. சி.வி. விக்னேஸ்வரன் தனக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் வடக்கிலுள்ள இந்தப் பயங்கரவாத ஆயுதக் குழுக்களை உடனடியாக அடக்க இயலும் எனக் கூறியிருப்பது வடக்கில் உள்ள ஆயுதக் குழுக்களுக்கும் விக்னேஸ்வரனுக்கும் நேரடியான தொடர்பு இருப்பதையே வெளிப்படுத்துகின்றது -எனக் கூறினார். எனினும் இறுதியாகக் கூறியது நகைச்சுவை எனவும் அவருக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது ஆபத்து - என்றார்

## தாங்கியினுள் வீழ்ந்து சிறுமி பரிதாபச் சாவு

கொழும்பு.ஒக 10

தண்ணீர் நிறைந்திருந்த தாங்கியினுள் விழுந்த சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று தனமல்வில. ஊவா குடாஓயாப் பகுதியில் இடம்பெற்றது.


தனமல்வில ஆரம்ப பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் 8 வயதுடைய அமாஷி விந்தீவரி என்ற சிறுமியே உயிரிழந்தார். விளையாடிக்கொண்டிருந்த சிறுமி வீட்டில் நிறைத்து வைத்திருந்த தண்ணீர் தாங்கி ஒன்றில் தவறி விழுந்துள்ளார்.

உடனடியாக தனமல்வில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தனமல்விலப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸார், ஊடகவியலாளர்களின் அலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு

### ஒன்றிணைந்த எதிரணி குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 10


கூட்டரசு சில பொலிஸாரினதும், ஊடகவியலாளர்களினதும் தொலைபேசி அழைப்புக்களை சட்டவிரோதமான முறையில் ஒட்டுக்கேட்டு வருவதாக ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு பொரளை மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெக் என அழைக்கப்படும் குறித்த கருவி நுகேகொடப் பகுதியில் உள்ள வீடொன்றில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரின் கீழ் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. கூட்டரசின் செயற்பாடுகளை விமர்சிப்போரின் கருத்துக்களை மாத்திரமே இவ்வாறு ஒட்டுக்கேட்கப்படுகிறது.

அரச அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் ஆட்சியாளர்களை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியான நாம் அவதானித்துக்கொண்டுதான் இருக்கின்றோம் - என்றார்




நன்றி: டெய்லிமிரர்

## பாடசாலை சீருடையில் இப்படியும் ஒரு திருடன்

கொழும்பு.ஒக 10

பாடசாலைச் சீருடையுடன் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கேகாலைப் பகுதியிலுள்ள ஒரு பிரபல பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து ஆயிரத்து 300மில்லிகிராம் ஹெரோய்ன் கைப் பற்றப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இந்த நபர் பாடசாலைச் சீருடையுடன் கேகாலை யில் உள்ள பல பாட சாலைகளில் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளின்போது வெளியாகியுள்ளன.

## ஞானசாரருக்குச் சிறுநீரகத்தில் பெரியளவிலான கல்

கொழும்பு,ஒக10

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரின் சிறுநீரகத்தில் பெரியளவிலான கல் ஒன்று இருப்பதாகவும் அதனை சத்திரசிகிச்சை மூலம் வெளியேற்ற வேண்டியுள்ளதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை மருத்துவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறுநீரகத்தில் உள்ள கல், சிறுநீரில் செல்லும் அளவுக்கு சிறியது இல்லை. அதனை சத்திரசிகிச்சை மூலமே அகற்ற வேண்டும். ஞானசார தேரரின் நோய் குறித்த மருத்துவ அறிக்கை கிடைத்ததன் பின்னரே அவருக்கு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இருப்பதைத் தெரிந்து கொண்டேன் என்றார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 19 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 19 ஆண்டுகள் சிறைத் தண்டனையை 6 ஆண்டுகளுக்கு அனுபவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிபதிகள் குழு நேற்றுமுன்தினம் கட்டளையிட்டது

## ஆடை இறக்குமதி செய்ததாக கூறப்படும் செய்தி பொய்யானது

கொழும்பு,ஓக. 10
வடகொரியாவில் இருந்து இலங்கை ஆடை இறக்குமதிசெய்ததாகக்கூறப்படும் செய்தி பொய்யானது என்று இலங்கை அயலுறவு அமைச்சு வெளியிட்டுள்ளஊடகஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஒக்ரோபர் 2017 மற்றும் மார்ச் 2018 காலப்பகுதியில் இலங்கை உள்ளிட்ட பலநாடுகளுக்குக்கொரியா ஜனநாயக மக்கள் குடியரசிலிருந்து ஆடை இறக்குமதிகள்தொடர்பானசெய்தி அறிக்கைகள் இந்த அமைச்சின் கவனதுக்குக் கொண்டுவரப்பட்டது.
இலங்கைதொடர்பாகசெய்தி அறிக்கையில் அடங்கிய தகவல்கள் தவறானவை என இந்த அமைச்சு தெளிவுபடுத்த விரும்புகிறது.
ஐ. நா. சபையின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கையின் பன்னாட்டுக்கடமைகளைப்பாதுகாகும் விதத்தில் இலங்கை அரசானது கொரிய ஜனநாயகக் குடியரசு தொடர்பில் ஐ. நா பாதுகாப்புச் சபையின்தீர்மானங்களின்விதிகளுக்குகட்டுப்படுகின்றது.
அதன்படி ஐ.நா சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானஉள்நாட்டுஒழுங்குமுறைகள் தொடர்பான அரசிதழ் முறையே 06 ஒக்ரோபர் 2017. 19 ஏப்ரல் 2018 மற்றும் 14 மே 2018 இல் வெளியிடப்பட்டுள்ளன.
அந்தத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்குஐ.நா பாதுகாப்புச் சபையின் நிபுணர்குழுவோடுஇலங்கை ஒத்துழைக்கிறது. மேலும் அவ்வப்போது பாதுகாப்புச் சபையின் நிபுணர்களின் குழுவால் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பதில்களை வழங்குகிறது.
இறக்குமதியாளர் / சுங்கத் தொகுதியின் முகவர் மூலம் சுங்க தானியங்கி தரவு செயலாக்க முறையில் ஏற்றுமதி நாட்டின் பெயர்உட்சேர்க்கப்படுகையில்கொரியாகுடியரசுஎன்பதற்கு பதிலாக கொரியா ஜனநாயகக் குடியரசு தேர்வு செய்யப்படுகின்ற பல நிகழ்வுகள் கவனக்குறைவாக நேர்ந்துள்ளன.
இந்த நிபுணர் குழுவிடம் இந்தப் பிழையைப் பற்றி தெளிவுபடுத்தியிருக்கின்ற நிலையில் எதிர்காலத்தில் அத்தகைய பிழைகள் திரும்பத் திரும்ப நிகழாது தடுக்கஒருவழிமுறையை இலங்கை சுங்கம் முன்னெடுத்துள்ளது. என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் அப்பாவி மக்களைப் பற்றிச் சிந்தியுங்கள்

### அரச தலைவர் அறிவுரை

**கொழும்பு,ஓக 10**
**வேலைநிறுத்தங்களில் ஈடுபடுகின்றவர்கள் தங்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்களை பற்றி சிந்திப்பதைப் போன்று நாட்டின் அப்பாவி பொதுமக்களின் உரிமைகளைப் பற்றியும் மனிதாபிமானத்தோடு சிந்திக்கவேண்டும் என்று அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.**



இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனமும்இலங்கைஇராணுவமும்இணைந்துநடத்தியஒருஇலட்சம்மூலிகைகன்றுகளைபகிர்ந்தளிக்கும்நிகழ்ச்சித்திட்டம்நேற்றுகொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம் பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
பயணிகள் போக்குவரத்து சேவைகள், இலவசசுகாதாரசேவைகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றவர்கள் நாட்டின் அப்பாவி ஏழை மக்களேயன்றி வசதிபடைத்தவர்கள் அல்ல
நேற்றுமுன்தினம் புகையிரத வேலை நிறுத்தத்தின் காரணமாக ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குதோற்றிவிட்டுவீடுகளுக்கு திரும்பிச் செல்லும் மாணவர்கள் உட்பட பொதுமக்களும் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்தனர்.
நாட்டின் அப்பாவி பொதுமக்களின் அன்றாடக் கடமைகளுக்கு இடையூறை ஏற்படுத்தாதது. அறிவுபூர்வமாகவும் மனிளதாபிமான அடிப்படையிலும் தங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறுபுகையிரதமற்றும்மருத்துவத்துறை உள்ளிட்ட வேலைநிறுத்தங்களுக்குத்யாராகிவரும்தொழிற்சங்கங்களிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.
நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஆயுர்வேதஔடதங்கள் கூட்டுத் தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க, இராணுவ கட்டளைத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத்தின் விவசாயப் பணிப்பாளர் பிரிகேடியர் புவனக்க குணரத்ன உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.



## அதிக ஆசனங்கள் கிடைத்தமையால் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு. ஓக. 10
2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அதிகபடியான ஆசனங்கள் கிடைக்கப் பெற்றமையினாலே எதிர்க்கட்சி தலைவராக சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார் எனசுகாதார அமைச்சரும், அமைச்சரவைபேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில்இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தொடர்ந்து தெரிவிக்கையில்,
அதிகபடியான ஆசனங்கள் கிடைக்கப்பெற்று நாடாளுமன்றில் சிறந்த எதிர்க்கட்சியினராகவே செயற்படுகின்றனர். அத்துடன் பலநல்ல திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.
மாறாக நாடாளுமன்றில் குழப்பங்களை ஏற்படுத்தி மக்களுக்கு செல்லவேண்டிய நன்மையை சென்றடையாதவாறு தடுத்துக் கொண்டிருப்பவர்கள் எதிர்க்கட்சியினராக செயற்பட முடியாது.
ஆனால்அரசிற்குஒத்துழைப்புவழங்குகின்றார்கள்என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது பங்காளிகள் அல்ல. அவர்கள் சிறந்த எதிர்க்கட்சியினரே - என்றார்.

## மகனின் அலைபேசியிலிருந்ததைப் பார்த்த தாயார் மயங்கி வீழ்ந்தார்

### பாடசாலையில் வெளிப்பட்டது சம்பவம்

கொழும்பு, ஓக. 10
மகனின் அலைபேசியில் ஆபாச காணொளிகளைப் பார்த்த தாய் அதிர்ச்சியில் மயக்கமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் பொலன்னறுவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
பொலன்னறுவையிலுள்ள பாடசாலை ஒன்றின் உயர்தர வகுப்பு மாணவரொருவரிடமிருந்து பாடசாலை ஒழுக்காற்று குழுவினர் அலைபேசியை கைப்பற்றி சோதனையிட்டபோது, அதில் சுமார் 300 க்கும் மேற்பட்ட ஆபாச காணொளிகள் சேமிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.
இதனையடுத்து, பாடசாலை ஒழுக்காற்று குழுவினர், மாணவனின் தாயாரை அழைத்து மகனின் செயற்பாடுகள் குறித்து தெரிவித்துள்ளனர். காணொளியை பார்வையிட்ட தாய் அதிர்ச்சியில் மயக்கமடைந்துள்ளார்.
மாணவனின் தாய் மயக்கத்திலிருந்து தெளிந்ததையடுத்து பொலிஸார் அவரிடம் வாக்குமூலத்தை பதிவு செய்தபோது, தனது அலைபேசியிலிருந்தே மகன் குறித்த காணொளிகளை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.
தாயையும், மகனையும் பொலிஸ் உயரதிகாரியொருவர் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு இருவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

# ஒவ்வொரு விவசாயினதும் இறைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

கொழும்பு,ஓக 10
இலங்கை தேசம் தன்னிறைவடைந்து கொள்வதற்கு ஒவ்வொரு விவசாயினதும் இறைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் சந்ததியினரும் விவசாய வலைப்பின்னலில் இணைந்து ஊற்றெடுக்க நாம் உந்துதலாய் இருக்க வேண்டும். என்று விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.
விவசாய அமைச்சின் தேசிய விவசாயவிருதுவழங்கும்நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, க விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் அதிதியாக கலந்து கொண்டு விவசாயிகளுக்கான விருதுகளை வழங்கினர்.
இதன் போது விவசாய பிரதி அமைச்சர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மரபு ரீதியான செய்கையை மேற்கொள்ளும் விவசாயியின் பழமையை பாதுகாப்பதோடு, மனித தேவைகளுக்கு ஈடுசெய்யக்கூடிய வழங்கலை ஏற்படுத்த நவீன விவசாய செய்கை உள்வாங்கப்படுதல் வேண்டும். அவற்றின் பிரயோக தன்மையினை உணர்ந்து கொள்வதற்கு கண்காட்சிகள், மற்றும் செய்முறை செயலமர்வுகள் இன்றியமையாததாகும்.
உற்பத்தியை அதிகப்படுத்துதல், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக கொண்டு, விவசாய வளர்ச்சியை அதிகப்படுத்துதல் என்பது கடந்த காலங்களில் நமது நாட்டின் உத்தியாக காணப்பட்டது. இது நமது நாடு மொத்த உணவு தேவையில் ஒரளவு தன்னிறைவு பெறுவதற்கும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் வழிவகையை ஏற்படுத்தும். ஆனால் இந்த வளர்ச்சில் முக்கிய பங்காளரான விவசாயிகள் வருமானம் உயர்ந்ததற்கான அறிகுறிகள் தென்படவில்லை.
இவ் அசாதாரண நிலையை மாற்றியமைக்க வேண்டுமானால் உற்பத்தி சார்ந்த சந்தையை விட சந்தை சார்ந்த உற்பத்தியே தற்காலத்தில் நன்மையுடையதாக அமைவதோடு உழவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் உன்னதமான அணுகுமுறை என அறிவியல் ரீதியாக அதிகரித்த வலு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.



விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வேண்டுமானால் நவீன விற்பனை உத்திகளான, ஒப்பந்த பண்ணையம் நேரடி சந்தை, எதிர்கால சந்தை குழு சார்ந்து, சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி சந்தை போன்றவற்றை உழவர்களிடம் பரவலாக்கம் பெற செய்ய வேண்டும்.
பாரம்பரியமாகவும் பரம்பரை ரீதியாக வும் எமது தேவைகளை பூர்த்தி செய்யும் நம்மவர்களை பாதுகாக்க அவர்களுடைய கட்டமைப்புக்களை சீர் செய்ய வேண்டியது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும் - என்றார். (6)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ரணிலின் அழைப்பும் உண்மை நிலையும்

போர்க்காலத்தில்நாட்டைவிட்டுவெளியேறியதமிழர்கள்உள்ளிட்ட இலங்கையர்கள்அனைவரும்நாடு திரும்ப வேண்டும் என்று நேற்று அழைப்பு விடுத்துள்ளார் தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க. நாடாளுமன்றத்தில் அவர் இந்தப் பகிரங்க அழைப்பை விடுத்தார். 2015ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றியபோதும் அவர் இதே அழைப்பை விடுத்தார். மாற்றத்துக்கான பெரும் எதிர்பார்ப்பு நிலவிய அந்தக் காலகட்டத்தில் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுநாடுதிரும்பாதவர்கள்மகிந்தராஜபக்சமீண்டும் ஆட்சிக்கு வரக்கூடும் என்கிற அச்சம் பரவுகிற இந்தச் சமயத்தில் நாடு திரும்புவதற்கு முன்வருவார்களா என்பது கேள்விக்குரியதே!

1980களில் போர் தீவிரம் பெறத் தொடங்கிய காலத்தில் இருந்து 10 லட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. மூளைசாலிகள்வெளியேற்றம் மட்டுமின்றி உழைப்பாளிகள் வெளியேற்றமாகவும் இந்த வெளிச் செல்லுகை இன்று வரைக்கும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. புதிய ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னரும்கூட வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து தமிழர்கள் அகதிகளாக வெளியேற முயற்சிப்பது இன்னும் நிற்கவில்லை.

வெளிநாடுகளில் அகதித் தஞ்சம் கடுமையாக நிராகரிக்கப்படும் நிலையிலும் இனிமேல் இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்கமாட்டோம் என்கிற நிலைப்பாட்டில் பல நாடுகள் கடும்பிடி பிடிக்கின்ற நிலையிலும்கூட தமிழர்களின் புலம்பெயர்வு நின்றபாடில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் முக்கியமானது, அரசியல்தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட்டு தமிழர்களுக்கு இலங்கைநாட்டில்நிம்மதியானவாழ்வுக்கான ஏது நிலை ஏற்படுத்தப்படாததும் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாததும்தான்.

போர் முடிந்த கடந்த 10 வருடங்களிலும் வடக்கு – கிழக்கில் பொருளாதார மேம்பாடு அடிமட்டத்திலேயே இருக்கின்றது. உற்பத்தியில் மிகப் பின்தங்கிய பகுதியாக வடக்கு, கிழக்குப் பகுதிகளே காணப்படுகின்றன. அதற்குக் காரணம் இங்கு தொழிற்சாலைகளோ, பன்னாட்டு நிறுவனங்களோ, தொழில் நிறுவனங்களோ இல்லாமல் இருப்பது அல்லது அவற்றை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது.. இதனால்வறுமையும்வேலையில்லாப்பிரச்சினையும்வடக்கு கிழக்கில் தாண்டவமாடுகின்றன.

மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வறுமையும் வேலையில்லாப் பிரச்சினையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகம் என்பதை அரச புள்ளிவிவரங்களே எடுத்துக் காட்டுகின்றன. போதாததற்கு அளவுக்குமீறிய அளவில் படையினர் வடக்கு – கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கின்றனர். இது மக்கள் மத்தியில் தொடர்ந்தும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. படையினரின் அதிகரித்த இருப்புதமது பாதுகாப்பைக் கேள்விக்குட்படுத்துவதாகத்தமிழர்கள்நினைக்கும்நிலையே இன்னமும் தொடர்கின்றது. கடந்த காலங்களில் குற்றங்களை இழைத்தவர்கள் இன்னமும் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் நிலமையே இருக்கின்றது. குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்பிக்கும் போக்குக்கு முடிவுகட்டுவதற்கான ஏதுநிலைகள் எதனையும் காணமுடியவில்லை. காணாமற்போனவர்களினதும் தமிழர் அரசியல் கைதிகளினதும் நிலை தொடர்ந்தும் நிச்சயமற்றதாகவே உள்ளது. இவற்றைவிட முதலீட்டாளர்களை வடக்கு, கிழக்கு நோக்கிக் கவர்வதற்கான எந்தச் சிறப்புத் திட்டமும் இதுவரையில் அரசால் முன்னெடுக்கப்படவில்லை.

இப்படி எல்லாவழிகளிலும் பாதகமாக இருக்கும்நிலமையைச் சரிசெய்வதற்கு அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்கள்நடவடிக்கைஎடுக்காமல்புலம்பெயர்ந்து இருப்பவர்களைத்திரும்பி வருமாறு விடுக்கப்படும் அழைப்பு வெறும் நடிப்பும் கண்துடைப்பும்மட்டுமே! புலம்பெயர்ந்து சென்றவர்கள்உண்மையிலேயே இலங்கைக்குத் திரும்பி வரவேண்டுமானால் அதற்குரியசூழ்நிலைஏற்படுத்தப்படவேண்டும். அவர்கள்தற்போது வாழும் நாடுகளில் உள்ள அரசியல், சமூக அமைதியாவது ஆகக்குறைந்தது ஏற்படுத்தப்படவேண்டும். அதனைக் கொண்டு வருவதற்கு ஆகக் குறைந்து புதிய அரசமைப்பை நிறைவேற்றிஅரசியல்தீர்வு ஒன்றுக்கான அடித்தளத்தையாவது இந்த ஆட்சியாளர்கள் ஏற்படுத்தவேண்டும். அதனைச் செய்யாமல், பௌத்த சிங்களக் கடும்போக்காளர்கள் மீண்டும் பதவிக்குவரும்வகையில்செயற்பட்டுக்கொண்டுபுலம்பெயர்ந்து சென்றவர்களைஇலங்கைக்குத்திரும்புமாறு அழைப்புவிடுப்பதில் எந்த நியாயமும் இல்லை.



தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி - 02

# பிறப்பு ஒரு சம்பவமானாலும் இறப்பு வரலாறாக வேண்டும்

தேவநாயகம் தேவானந்த்

திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் கருணாநிதியின் மறைவு, உலகத் தமிழர்களைச் சோகத்தில் ஆழ்த்தி இருக்கிறது. தலைவன் இல்லாத ஒரு நிலையில் இன்று தமிழினம் இருக்கிறது எனலாம். தலைவனைத் தேடும் பணியில் அல்லது தலைவன் வரவுக்காகக் காத்திருக்கும் நிலையில் தமிழ் இனம் இருக்கிறதுபோலும்.

ஒவ்வொரு தலைவனும் இறக்கும்போது தனக்கு அடுத்தபடியான தலைவர்களைத் தந்துவிட்டுச் செல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருப்பது வழமை. கருணாநிதி தனது மறைவுக்கு முன்னரே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையை அறிவித்துச் சென்றிருக்கிறார். தென் ஆசியப் பாரம்பரியத்திற்கு ஏற்பத் தனது குடும்ப வாரிசிடம் கட்சி சென்றடையக் கூடியதாக கனகச்சிதமாகக் காய்களை நகர்த்தி ஒரு தலைவனை கட்சிக்குக் காட்டிச் சென்றிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணாபோன்று, தன்கொள்கையின் மீதும் சித்தாந்தங்களின் மீதும், பற்றுறுதி கொண்டதுமான தலைமையை கருணாநிதி இனங்காட்டிச் செல்லவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. கருணாநிதி குடும்பம் வழிநடத்திச் செல்கின்ற ஒருகட்சியாக திராவிட முன்னேற்றக்கழகம் இனி இருக்கப்போகின்றது. ஆனால் கருணாநிதியின் சாவு தமிழ்த் தலைமையை கோடிகாட்டிச் செல்லவில்லை என்பது வெளிப்படை. அதே வேளை அது தமிழ்நாட்டில் திராவிடக்கட்சிகளின் வீழ்ச்சிக் காலம் ஆரம்பித்து விட்டது என்பதற்கான தெளிவான செய்தியைக் கோடிகாட்டிச் சென்றிருக்கிறது. ஏம்.ஜி.ஆர் ஆரம்பித்த அண்ணாதிராவிட முன்னேற்றக் கழத்தின் வீழ்ச்சி ஜெயலலிதாவின் மறைவோடு ஆரம்பித்திருக்கிறது. ஆக திராவிடக்கட்சிகளின் ஆட்சிமுடிவுக்கு வருவதற்கான கட்டியம் கூறப்பட்டுள்ளது.

### கருணாநிதியின் மறைவு இன விடுதலை உணர்வின் மறைவு

கருணாநிதியின் மறைவு ஒரு சித்தாந்தத்தில், ஒரு பேரெழுச்சியில், இனவிடுதலைஉணர்வின் மறைவு என்றும் கூறலாம். கட்சியில் அடிமட்டத் தொண்டனாக இருந்து ஒரு பாசறையில் வளர்ந்து, படிப்படியாக கட்யின் தலைமைக்குவரும் பாரம்பரிய வழக்கத்தின் முடிவாகவும் பார்க்கப்படலாம். தீவிர கொள்கையின் அடிப்படையில் மக்கள் எழுச்சியின் தலைவர்களாகும் வாய்ப்பு இனிவரும் தமிழ்நாட்டின் அரசியலில் அரிதென்றநிலைமையே காணப்படுகின்றது.

சினிமா,கலை இலக்கியங்களில் ஈடுபட்டவர், அரசியல் அரங்கில் கோலோச்சிய நிலைமை கருணாநிதியோடு முடிவடைவதையும் காணமுடியும்.

> கருணாநிதி சொன்னது போலவே அவரது வாழ்வும் இறப்பும் வரலாறாகியிருக்கின்றன. இந்திய வரலாற்றில் முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரின் மறைவுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அஞ்சலி செலுத்தி, நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதற்குமுன் இந்தியநாடாளுமன்றவரலாற்றில் உறுப்பினர் அல்லாத ஒருவரது மறைவுக்காக நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதில்லை.

இன்று தமிழ்நாட்டின் அரசியலில் சினிமா ஊடகத்தின் திரைநாயகர்கள் என்ற பிம்பத்தை மட்டுமே நம்பிக் கட்சிகளை ஆரம்பித்து.ஆட்சியைப் பிடிக்கும் ஆசையில் நடிகர்கள் இறங்கியிருக்கிறார்கள். அவர்களால் கருணாநிதி.எம்.ஜி.ஆர். ஜெயலலிதா போன்றோர் அளவுக்கு வெற்றிபெற முடியுமா? என்றகேள்வி உண்டு. சினிமாக்காரனாகவும் கலை இலக்கிய விற்பனராகவும் மட்டுமே இருந்திருந்தால் கருணாநிதியால் இத்தனைஉச்சங்களைத்தொட்டிருக்கமுடியாது. தீவிரமான சமூகமாற்றத்திற்கானசித்தாந்தம் இருந்ததால்தான், அவரால் இந்தச் சாதனையைநிகழ்த்தமுடிந்திருக்கிறது.

### அஸ்தமிக்காத சூரியன் எனப் போற்றப்பட்டவர் கருணாநிதி

'கருணாநிதிஒரு அஸ்தமிக்காதசூரியன்' என்று குறிப்பிடப்பட்டாலும், அவரது மறைவு, திராவிட பாரம்பரியங்கள் பலவற்றின் அஸ்தமனமாக அமையப்போகிறது என்பது கவலையான உண்மை. ஆக, தமிழ்த் தலைவன் இல்லாது தமிழ் இனம் புதிய வரலாற்றுக்குள் புகுகின்றது.

'பிறப்பு ஒருசம்பவமாக இருந்தாலும் சாவு ஒருவரலாறாக இருக்கவேண்டும்; என்று கருணாநிதி அடிக்கடி கூறுவார்.

அவரது இறுதி ஊர்வலம் அதைத்தான் தெளிவாகக் காட்டிச்சென்றுள்ளது. இலட்சோப இலட்சம் மக்கள் மெரீனாவில் ஒன்று கூடி அவருக்குவிடைகொடுத்தார்கள். தனது ஆசான் பேறறிஞர் அண்ணாஅருகில் உறங்குவதற்கான தனதுவிருப்பத்தின்படியே அவர் உறங்கியிருக்கிறார்.

அண்ணாவை அவரது குடும்பத்தினர் குடும்ப

வழக்கப்படி எரியூட்ட நினைத்தபோது. அவர் நினைவழியாவகையில் அவரைப் புதைத்து அவருக்குநினைவிடம் அமைத்து நீங்காப்புகழைத்தேடிக் கொடுத்தவர் கருணாநிதி. அப்போது அண்ணாவின் கல்லறையில் என்ன எழுத வேண்டுமென்று கருணாநிதியிடம் கேட்கிறார்கள். அவர் சொன்னார் "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகின்றது" என்று எழுதுங்கள் என்றார். அந்த வாசகம் அண்ணாவின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது. அந்தக்கல்லறைக்கருகில் தான் கருணாநிதியும் உறங்குகிறார். தனது கல்லறையில் என்னவாசகம் பொறிக்கப்படவேண்டும் என்பதையும் தனது நெஞ்சுக்கு நீதி நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.
"ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வுகொண்டிருக்கிறான்" என்ற அவரது வாசகங்கள் அவர் விரும்பியபடியே அவரது உடல் வைக்கப்பட்ட சந்தனப் பேழையில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.



**கருணாநிதியின் வாழ்வும் இறப்பும் வரலாறாகியிருக்கின்றன**

கருணாநிதி சொன்னதுபோலவே அவரது வாழ்வும் இறப்பும் வரலாறாகியிருக்கின்றன. இந்திய வரலாற்றில் முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரின் மறைவுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அஞ்சலி செலுத்தி. நாள் முழுநாளும் ஒத்திவைக்கப்பட்டன. இதற்குமுன் இந்திய நாடாளுமன்ற வரலாற்றில்உறுப்பினர் அல்லாத ஒருவரது மறைவுக்கு நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மறைந்தவர்களுக்கு மட்டுமே நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவது வழமை. முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களாக இருந்து இறந்தவர்களுக்கும் மக்களவை. மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டது இல்லை. ஆனால் பதவியில் இல்லாதபோது கருணாநிதிக்கு இந்த மரியாதை கிடைத்திருக்கிறது.
தேசிய அளவில் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தலைமை அமைச்சர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியிருக்கிறார். இந்தியக்குடியரசுத் தலைவர்.சபாநாயகர் .முன்னாள் சபாநாயகர்.எதிர்கட்சித்தலைவர் என்றுஅனைவரும் இரங்கல் தெரிவித்திருக்கிறார்கள். பல மாநிலங்களின் முதலமைச்சர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். இறந்த பின்னரும் இறப்பின் போதும் வரலாறாகியிருக்கிறார் கருணாநிதி.



**கருணாநிதியின் வெற்றிக்கான ஆயுதங்கள் அவரது பேச்சுத் திறனும் எழுத்துத் திறனுமாகும்**

இரண்டு ஆயுதங்களைக் கொண்டுதான் அவர் இந்த வரலாற்றைப்படைத்திருக்கிறார். ஒன்றுஅவரது பேச்சுத் திறமை. இன்னொன்றுஎழுத்துத் திறமை. கடுமையான உழைப்புஅவரது மூலமுதல்.
தமிழ்நாட்டை ஐந்துமுறை ஆட்சி செய்த கருணாநிதிதாம் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களில் ஒன்றில்கூட தோல்வியடைந்ததில்லை. ஏழு தசாப்தங்கள் பொதுவாழ்வில் பங்களித்தமிகச் சில அரசியல் தலைவர்களில் கருணாநிதியும் ஒருவர்.
கருணாநிதிக்கு முன்பு திமுகவின் முன்னணித் தலைவர்களாக இருந்த அண்ணாதுரை.மதியழகன் உள்ளிட்டோர் அப்போதே முதுகலைபட்டம் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால். பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய கருணாநிதி அவர்களைவிட அதிக நூல்களை எழுதினார். எழுத்துமீதான அவரது தீராக் காதல். அவரை பல உயரங்களுக்கு அழைத்துச் சென்றது.
17 வயதிலேயே இந்தித் திணிப்புக்குஎதிராக மாணவர்களை ஒன்றுதிரட்டிய கருணாநிதி.தமிழ்நாடுமாணவர் மன்றம் என்றமாணவர் அமைப்பைத் தொடங்கினார்.
கருணாநிதியின் அனைத்துசெயல்பாடுகளுக்கும் சமூக நீதியேஅடித்தளமாக இருந்தது.
இந்தியத் தேசிய அரசியலுக்கு கணிசமானபங்களிப்பை கருணாநிதி வழங்கியிருக்கிறார். மத்திய அரசின் தலைமை அமைச்சர் பதவிக்கானவாய்ப்புக்கள் வந்தபோதெல்லாம் 'என் உயரம் எனக்குத் தெரியும்.' என்று பெரும் தன்மையோடு ஒதுங்கியிருந்திருக்கிறார்.
மத்தியில் அரசுநிலையாக இருக்கவேண்டும் என வலியுறுத்தினாலும்.ஒரே இடத்தில் அதிகாரம் குவிக்கப்படுவதை கடுமையாக எதிர்த்திருக்கிறார்.
தேசிய முன்னணி அரசை வி.பி.சிங் அமைத்தபோது. ஆட்சியமைப்பதில் கருணாநிதி முக்கியப் பங்காற்றினார். வி.பி.சிங் பதவி விலகிய பின்னும்.தேவகௌடா மற்றும் ஐ.கே.குஜ்ரால் ஆகியோரை தலைமை அமைச்சர்களாகத் தேர்வு செய்வதில் கருணாநிதி முக்கியப் பங்காற்றி இந்திய அளவில் வரலாற்று நாயகனாகத் திகழ்ந்தார். 1999இல் பாரதியஜனதாவுடன் கூட்டணி அமைத்துமீண்டும் தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்தினார். பாரதிய ஜனதாக்கட்சிக்கு அதரவளித்தபோதும் அந்தக் கட்சியின் முக்கியவிடயமாக இருந்த இராமர் விடயத்தில் 'அது ஒரு கட்டுக்கதை' என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். அதற்கு ஆதரவாக 'திராவிடர்கள் மீதுதங்கள் மேலாதிக்கத்தை செலுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதையே ராமாயணம் என்று கூறி ஜவாஹர்லால் நேருவை விடவும்.ராமரைக் காக்க வருபவர்கள் ஒன்றும் பெரியவர்கள் அல்ல' என்று கருணாநிதி அப்போது கூறினார்.
'வாஜ்பாயைப்போல அத்வானி தமிழர்களுக்கு அனுசரணையாக இல்லை' என்றுகூறி 2003இல் திமுக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்துவிலகியது. பின்னர்காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணிஅமைவதில் முக்கிய பங்காற்றினார்.
'கருணாநிதி அரை நூற்றாண்டுகாலமாக பொது வாழ்வில் உள்ளார். அவரதுஅனுபவமும் அறிவும் நாட்டை நிர்வகிப்பதில் உதவுவதுஎங்களுக்குமிகவும் அதிர்ஷ்டவசமானது.' என்றுமன்மோகன் சிங் கூறியமை இங்கு கவனிக்கத்தக்கது.

*தொடரும்*

> "கருணாநிதிஒரு அஸ்தமிக்காதசூரியன்' என்றுகுறிப்பிடப் பட்டாலும், அவரது மறைவு திராவிட பாரம்பரியங்கள் பலவற்றின் அஸ்தமனமாக அமையப் போகிறது என்பது கவலையான உண்மை. ஆக,தமிழ்த் தலைவன் இல்லாது தமிழ் இனம் புதிய வரலாற்றுக்குள் புகுகின்றது. 'பிறப்பு ஒருசம்பவமாக இருந்தாலும், மரணம் ஒரு வரலாறாக இருக்கவேண்டும்'' என்று கருணாநிதிஅடிக்கடி கூறுவார். அவரது இறுதி ஊர்வலம் அதைத்தான் தெளிவாகக் காட்டிச் சென்றுள்ளது.

## ஆசிரியருக்கான கடிதம்

# உடல்நலம் குறித்த அடிப்படை அறிவு அனைவருக்கும் அவசியமே

இன்றைய இயந்திரமய வாழ்க்கை ஓட்டத்தில். முன்னைய காலகட்டங்களைவிட தற்போது பொதுமக்கள் மத்தியில் பல்வேறு வகைப்பட்ட நோய்கள் வயது. பால் வேறுபாடுகளின்றி அதிகரித்துக் காணப்படுகின்றன. அதற்கான காரணங்கள் குறித்து ஆராய்வதைவிட. அத்தகைய நோய்களின் தன்மை. தாக்கம் என்பவை குறித்த அடிப்படை அறிவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. விஞ்ஞான தொழில்நுட்பத்துறை வளர்ச்சி கண்டுள்ள இன்றைய நிலையில். பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருவது. மேற்குறித்த நோய்கள் தொடர்பான சாதாரண அறிவு எம்மத்தியில் நலிவு கண்டு வருவதற்கான முக்கிய காரணமாகும்.
இன்றைய காலச்சூழலுக்கேற்ப அச்சு ஊடகங்கள் பொதுமக்களது பல்தரப்பட்ட இரசனைகளுக்கேற்ற விடயங்களை பத்திரிகைகளில் பிரசுரித்து வருவதுடன். சமூக நலன்சார். பொதுமக்களது உடல் நலம் சார் விபரங்களையும் தவறாது தத்தமது விசேட மற்றும் வார இறுதிப் பதிப்புக்களில் வெளியிட்டு தமது சமூகக் கடமைகளை நிறைவேற்றி வருகின்றன.
அந்த வகையில் புரிந்துணர்வின்மை. தெளிவான அறிவைப் பெற்றிருக்காமை காரணமான தவறுகளால் நோய்களுக்கு ஆட்பட்டதன் பின்னர் வைத்தியர்களது ஆலோசனைக்கும் சிகிச்சைக்குமெனப் பெருந்தொகையில் பணம் செலவிடாமல். மருத்துவத் துறைசார் நிபுணர்களிடமிருந்து பெற்று. பொதுமக்களுக்கான சேவையாக அச்சு ஊடகங்கள் பிரசுரிக்கும் மருத்துவ ஆலோசனைகள். தகவல்கள். தெளிவுபடுத்தல்கள் மற்றும் எச்சரிக்கைக் குறிப்புக்கள் மீது கவனம் செலுத்தி அவற்றை மனதில் உள்வாங்கி சாதாரண நோய்கள் குறித்த பலதரப்பட்ட தகவல்களை நாம் பெற்றிட இயலும். அவற்றை அனுசரித்து எமது நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்வதால் நோய் நொடிகளினின்றும் நாம் தப்பித்துக்கொள்ள இயலும். இதனைக் கருத்தில் எடுத்துச் செயற்பட விளைவோம்.

*உ.கதிரவேலு, கரவெட்டி*

# மத பேதங்களுக்கு வழி ஏற்படுத்த முயலாதிருப்போம்

05.08.2018ஆம் திகதிய ஞாயிறு உதயனின் சூரியகாந்தி பகுதியில் மாட்டிறைச்சியும் பசுவதையும் என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரை ஒன்றைப் படித்தேன். கட்டுரையின் சாராம்சம். பிற மதங்களின் வருகையே எம்மவர்கள் மத்தியில் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்தைத் தூண்டியதாகவும். மாட்டிறைச்சி விற்பனையைத் தடை செய்ய வேண்டுமென்ற சாரப்படவும் அமைந்திருந்தது. மனிதன் உட்பட உயிர்கள் அனைத்தும் இறைவனாலேயே படைக்கப்பட்டவை. மனித இன வளர்ச்சி தனது தேவைக்கானவற்றைப் பயன்படுத்திக் கொண்டது. ஆரம்ப காலத்தில் காய்கறி கள். கிழங்கு வகைகளை உண்டு வந்த மனிதன் குறிப்பிட்ட சிலவகை மிருகங்களது மாமிசத்தையும் உண்ணப் பழகிக்கொண்டான். இதை எவரும் தடுக்கவில்லை. எது எவ்வாறாயினும் இந்த மாமிசப் பிரச்சினையை முன்வைத்து மதரீதியாக மக்களைப் பிரிக்க முனைவது. எம்மினத்திற்கு உவப்பாகாது. எம்மினம் இன்று பல வகையில் கூறுபோடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மதரீதியாகவும் மக்களைப் பிரிக்க முனைவது மக்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்துவதாகவே அமையும். எனவே மனிதஉயிர்களைமதித்து, மனிதநேயத்தை வளர்த்து. மனிதப் பண்போடு. ஒற்றுமையாக இனங்கள் ஒன்றிணைந்து வாழ முனைவது சிறப்பாகும். இதுவே எமது மக்களது இன்றைய தேவை. மக்களுக்காக ஒன்றுபடுவோம். மக்களை யும் ஒன்றுபடுத்துவோம். எம்மத்தியில்கருத்து வேறுபாடுகளை உருவாக்குவதைத் தவிர்ப்போம்.

*ப.யேசுபாதம், மாயவனூர்*

# தமிழ்த் தலைவர் கருணாநிதிக்கு இலட்சக் கணக்கானோர் அஞ்சலி



சென்னை. ஒக. 10
சென்னை-மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதிக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சமாதியில் லட்சக்கணக்கான பொதுமக்கள் இரவு பகலாக அஞ்சலி செலுத்தி வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

சென்னை காவேரி மருத்துவ மனையில் கடந்த 11 நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த தி.மு. கழகத்தின் தலைவர் கருணாநிதி கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணியளவில் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அண்ணா சமாதிக்கு அருகில் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. லட்சக் கணக்கான மக்கள் இரவுடன் இரவாகச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கவிஞர் வைரமுத்து நேற்றுக் காலை கருணாநிதியின் சமாதியில் பால் ஊற்றி அஞ்சலி செலுத்தினார். (ம)



## 5 மணித்
## தயாராகி

சென்னை. ஒக. 10
கருணாநிதியை அடக்கம் செய்வத
கான சமாதி வெறும் ஐந்து மணிநேர
தில் தயாராக்கப்பட்டது என்
குறிப்பிட்டன இந்திய ஊடகங்கள்.
கடந்த செவ்வாய்கிழமை கருணாந
மறைந்ததும் அவரை அண்ணா ச
திக்கு அருகில் அடக்கம் செய்ய வே
டும் என்று கோரிக்கை வைத்தது தி.மு
கழகம். எனினும், தமிழக அரசு அ
ஏற்க மறுத்தது.
ஜெயலலிதா நினைவிடம் தொடர்பா
வழக்குகள் நிலுவையில் உள்ளதா

# சீனாவுக்குக் கூடுதல் வரி அதிபர் ட்ரம்ப் விதித்தார்



வொஷிங்டன், ஒக. 10
அமெரிக் அதிபர் ட்ரம்ப் சீனத்து உற்பத்திகளுக்கு 16 பில்லியன் டொலர் அளவுக்குக் கூடுதல் வரி விதித்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் ஏற்பட்டுள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதியாகின்ற பொருள்கள் மீது அமெரிக்காவும், அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகிற பொருள்கள் மீது சீனாவும் மாறிமாறி கூடுதல் வரி விதித்து வருகின்றன. அந்த வகையில் 34 பில்லியன் டொலர் மதிப்பிலான சீனத்துப் பொருள்கள் மீது அமெரிக்கா கடந்த மாதம் 6ஆம் திகதி கூடுதல் வரி விதித்தது. அதே அளவுக்கு அமெரிக்க பொருள்கள் மீது சீனாவும் கூடுதல் வரி விதித்தது. பதிலுக்கு சீனத்து உற்பத்திகளுக்கு மேலும் வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் மிரட்டி வந்தார். இதன்படி சுமார் 16 பில்லியன் டொலர் அளவுக்கு அவர் கூடுதல் வரி விதித்து நடவடிக்கை எடுத்துள்ளார். 25 சதவீத அளவிலான இந்த கூடுதல் வரி விதிப்பு, எதிர்வரும் 23ஆம் திகதி நடைமுறைக்கு வருகிறது. (ம)




முப்பெரும் தமிழ்த் தலைவர், தமிழ் அறிஞர், தி.மு. கழகத்தின் தலைவர் கருண
நிலையில் அவர் முழு இராணுவ மரியாதையுடன் நேற்றுமுன்தினம் அடக்
கருணாநிதியின் உடலை அடக்கத்துக்காகக் கொண்டு செல்வதைக் காட்டும் ஒளி

# இந்தோனேசியா நிலநடுக்கத்தில் சாவு எண்ணிக்



இந்தோனேசியாவில் அண்மையில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 374ஆக அதிகரித்தது.

இந்தோனேசியாவின் லாம்போக் தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கு அடியில் 7.0 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நூற்றுக் கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. ஏராளமாக கட்டடங்கள் இடியுண்டன. 90 பேர்



# ...த்தியாலத்தில் ...கியது சமாதி

... செய்வதற்
... மணிநேரத்
...து என்று
...ங்கள்.
... கருணாநிதி
...ண்ணா சமா
...ய்ய வேண்
...வத்தது தி.மு.
... அரசு அதை
...
...தொடர்பான
... உள்ளதால்

கருணாநிதியை அண்ணா சமாதிக்கு அருகில் அடக்கம் செய்ய இயலாது என்று குறிப்பிட்டது தமிழக அரசு. இதையடுத்து ஜெயலலிதாவின் சமாதி தொடர்பான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்றுவிட்டு நீதிமன்றத்தை நாடியது தி.மு. கழகம். தீர்ப்பில் கருணாநிதியை அண்ணா சமாதிக்கு அருகில் அடக்கம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

இதையடுத்து சுமார் 5 மணிநேரத்தில் இதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று முடிந்தன. (ம)



...வர் கருணாநிதி கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்த
...னம் அடக்கம் செய்யப்பட்டார். இராணுவ வாகனத்தில்
...ட்டும்ஒளிப்படமே இது. (ம)

# ...ணிக்கை 374

...மையில்
...ர்க
...பாக்
...மை
...து.
...ற்பட்
...கள்
... பேர்

உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாக அறிவிக்கப்பட்டது.
இரண்டாவது கட்டத் தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 145 என்று தெரிவிக்கப்பட்டது.
மூன்றாவது கட்டத் தகவலின்படி சாவு எண்ணிக்கை 374 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
காயமடைந்த சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# மெரீனாவும் சமாதியும்






தமிழகத் திராவிடத் தலைவர்கள் பலரும் இறப்பிற்குப் பிறகு சென்னை மெரினா கடற்கரையில் அடக்கம் செய்யப்படுகிறார்கள். அங்கு அடக்கம் செய்யப்படுவது மிக முக்கியமானதாகவும், மதிப்பானதாகவும் கருதப்படுகிறது.

**அண்ணாவில் ஆரம்பம்**

உலகின் இரண்டாவது நீண்ட நகர்ப்புற கடற்கரையான மெரினா கடற்கரையின் வடகோடியில் அமைந்திருக்கிறது முதலமைச்சர் சி.என். அண்ணாதுரையின் நினைவிடம். மெரினா கடற்கரையில் முதன்முதலாக நல்லடக்கம் செய்யப்பட்ட முதலமைச்சர் அவர்தான். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழக முதல்வர்களாகப் பதவிவகித்தவர்களில் சி.என். அண்ணாதுரைக்கு முன்பாக சாவடைந்தவர் பி.எஸ். குமாரசாமி ராஜா மட்டுமே. 1949 ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி முதல் ஏப்ரல் 10 ஆம் திகதி 1952ஆம் ஆண்டு வரை இவர் முதலமைச்சராகப் பதவிவகித்தார். பதவியை விட்டு விலகி ஐந்தாண்டுகளுக்குப் பின் 1957 மார்ச் 16ஆம் திகதியன்று காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் அவரது குடும்ப வழக்கப்படியே நடந்து முடிந்தன.
புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அண்ணாதுரை மறைந்தபோது, அவருக்கு முந்தைய பிற முதலமைச்சர்களான ஓ.பி.ராமசாமி ரெட்டியார், ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம் ஆகியோர் உயிருடனேயே இருந்தார்கள். திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரான பெரியாரும் அப்போது இருந்தார். தவிர, முதலமைச்சர் பதவியில் இருக்கும்போதே அதுவரை யாரும் சாவடைந்திருக்கவில்லை.
ஆகவே, மெரினாவில் புதைப்பது குறித்தோ, மிகப் பெரிய நினைவுச் சின்னம் எழுப்புவது குறித்தோ அந்தத் தருணத்தில் யாரும் யோசிக்கவும் இல்லை.
அண்ணாத்துரை மறைந்தபோது குடும்ப வழக்கப்படி உடலை எரியூட்ட அவரது குடும்பத்தினர் முடிவுசெய்தனர். அடுத்த நாள் காலையில் கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டில் உடல் எரியூட்டப்படவிருப்பதாக நாளிதழ்களிலும் செய்தி வெளியானது. ஆனால், அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க. அதனை விரும்பவில்லை.

தனது வாழ்க்கை வரலாற்று நூலான நெஞ்சுக்கு நீதியில் அண்ணாதுரையின் மறைவு குறித்த பகுதியில், "தமிழினத்தையே தலை நிமிர்ந்திடச் செய்து, கலங்கரை விளக்கமாக வழிகாட்டிய, ஒளியூட்டிய அண்ணா அவர்களுக்குக் காலாகாலத்திற்கும் அழியவே அழியாத ஒரு நிலையான நினைவுச் சின்னம் எழுப்புவதே முறையான நன்றிக் கடன் ஆகும் என்று நம்பினோம். அதற்கு அவர்தம் சடலத்தை எரிக்காமல் புதைக்கச்





செய்து, அங்கே கல்லறை எழுப்புவதே சரி என்றும் கருதினோம்" என கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறார். இதற்குப் பிறகு, அண்ணாதுரையின் மனைவி ராணி அண்ணாதுரை மற்றும் அவரது பிற குடும்ப உறுப்பினர்களிடம் பேசி அவரது உடலைப் புதைக்க ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பிறகு, மெரினாவின் வடகோடியில் புதர் மண்டிக் கிடந்த இடம் தேர்வுசெய்யப்பட்டது. அந்த இடம் உடனடியாக சுத்தம் செய்யப்பட்டு, அண்ணாவின் உடல் அங்கே அடக்கம் செய்யப்பட்டது. அண்ணாவின் கல்லறையின் மீது, "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டன.
ராஜாஜி, காமராஜர் ஆகியோர் மறைந்தபோது குடும்ப வழக்கப்படியே அவர்களது உடல்கள் எரியூட்டப்பட்டன. காமராஜர், பக்தவத்சலம் ஆகியோருக்கு சர்தார் பட்டேல் சாலையில் நினைவு மண்டபங்கள் பிறகு அமைக்கப்பட்டன.
அண்ணாவுக்குப் பிறகுதான் காமராஜர், ராஜாஜி, பக்தவத்சலம் ஆகியோர் சாவடைந்திருந்தாலும் திராவிட இயக்க சித்தாந்தத்தின் சின்னமாகப் பார்க்கப்பட்ட அண்ணாவின் நினைவிடத்தை ஒட்டி தங்களுக்கு நினைவிடம் அமைக்கப்படுவதை விரும்பியிருக்க மாட்டார்கள்.

அண்ணாதுரைக்குப் பிறகு, திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரான பெரியார் மறைந்தபோது அவரது உடலை மெரினாவில் நல்லடக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவரது இயக்கமான திராவிடர் கழகம் எழுப்பவில்லை. அவர் பெரியார் திடலிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

**எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும்**

1987 டிசெம்பரில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் சாவடைந்தபோது மீண்டும் மெரினா கடற்கரை முக்கியத்துவம் பெற்றது. எம்.ஜி.ஆரை அண்ணாதுரையின் நினைவிடத்திற்கு அருகில் அடக்கம்செய்ய அப்போதைய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது. இதற்குப் பிறகு, 2016ஆம் ஆண்டின் இறுதியில் ஜெயலலிதா சாவடைந்தபோது அவரது உடலையும் மெரினா கடற்கரையில் அடக்கம் செய்ய அமைச்சரவை முடிவெடுத்தது.
ஆனால், கடற்கரை ஒழுங்காற்று மண்டல விதிகள் கடுமையாக இருந்ததால், புதிதாக ஓரிடத்தைத் தேர்வுசெய்யாமல், அ.தி.மு.கவின் நிறுவனரும் மறைந்த முதல்வருமான எம்.ஜி.ஆரின் நினைவிடத்தின் அருகிலேயே ஜெயலலிதாவின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**தற்போது கருணாநிதி**

தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தவரை தனது உடலுக்கு எப்படி இறுதிச் சடங்குகள் நடக்க வேண்டுமென கருணாநிதி கூறவில்லை. ஆனால், அவரது தன் வரலாற்று நூலான நெஞ்சுக்கு நீதியின் முதல் பாகம் வெளியானபோது, அவர் ஓய்வெடுக்கும் காலம் வந்துவிட்டதாக பலர் விமர்சித்தனர். அதற்குப் பதிலளித்த கருணாநிதி, "ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வுகொண்டிருக்கிறான் என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும்" என்று குறிப்பிட்டார். இதே வாசகங்களை சமீபத்தில் வெளியான நெஞ்சுக்கு நீதியின் ஆறாவது பாகத்தின் முன்னுரையிலும் குறிப்பிட்டார் அவர்.
அவர் விரும்பியபடியே அவரது உடல் வைக்கப்பட்ட சந்தனப் பேழையின் மீது இந்த வாசகங்கள் தற்போது பொறிக்கப்பட்டிருக்கின்றன.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** மற்றவருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழிலில் இலக்கை அடைய அதிக நேரம் பணி புரிவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சு, செயல்களில் புத்துணர்வு வெளிப்படும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி வந்து சேரும்.

**கடகம்:** நல்லவர்களின் ஆலோசனையை பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரம சூழ்நிலை சரியாகும். புதிய இனங்களில் திடீர் செலவு ஏற்படலாம்.

**சிங்கம்:** திட்டமிட்ட செயலில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**கன்னி:** வளர்ச்சிக்கான நல்வாய்ப்பு கனிந்து வரும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்க கூடுதல் பணிபுரிவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** பொது விஷயங்களில் கருத்து சொல்வதை தவிர்த்திடுங்கள். தொழில் வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். இலாபம் சுமார்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் ஆதரவால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராகருக்கும். பிறர் பார்வையில் தெரியும்படி அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்.

**தனுசு:** உறவினர்களிடம் பாசத்துடன் பழகுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பணி இனிதே நிறைவேறும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:** முன்னர் செய்த நற்செயலுக்கான பலன் தேடி வரும். தொழிலில் உற்பத்தி விற்பனை வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு உயரும்.

**கும்பம்:** அவசரப்பணியால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் முயற்சியும் உழைப்பும் உதவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** மற்றவரின் அறிவுரையால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். தொழில் வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும்.



# சசிக்குமார் இயக்கும் வரலாற்றுப் படத்தில் விஜய்!

இயக்குநரும், நடிகருமான சசிகுமார் அடுத்து ஒரு வரலாற்றுப் படத்தை எடுக்க முடிவு செய்துள்ளார். வரலாற்றுத் திரைப்படங்கள் எடுப்பதில் கைதேர்ந்தவர் ராஜமௌலி என்பதால் அவரைச் சந்தித்து ஆலோசனை பெற்றுள்ளார். இந்த வரலாற்றுப் படத்தில் நடிகர் விஜய் நடிக்கவுள்ளார் என்றும் கூறப்படுகிறது. சில ஆண்டு களுக்கு முன் அவர் இந்த கதையை கூறியுள்ளார் என்றும் அதற்கு விஜய் சம்மதம் தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது.



# அண்ணாவைத் தேடி ...

நாத இசை கொட்டுகின்ற நாவை ஏன் சுருட்டிக்கொண்டாய்?

விரல் அசைத்து எழுத்துலகில் விந்தைகளைச் செய்தாயே;
அந்த விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?

எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன் தொடர்ந்தாய்,உன்
கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோம்;
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?

நிழல் நீதான் என்றிருந்தோம் நீ கடல் நிலத்துக்குள்
நிழல் தேடப் போய்விட்டாய் நியாயந்தானா?

கண்மூடி நீ சிந்திக்கும் பேரழகை பார்த்துள்ளேன்...இன்று
மண்மூடிக்கொண்டுன்னைப் பார்க்காமல் தடுப்பதென்ன
கொடுமை,கொடுமைக்கு முடிவுகண்டாய்
எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏது எமக்கிதயம்?

கடற்கரையில் காற்று வாங்கியது போதுமண்ணா எழுந்துவா
வரமாட்டாய்; இயற்கையின் சதி எமக்கு தெரியும்.
அண்ணா நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில் இரவலாக
உன் இதயத்தை தந்திடண்ணா...

நான் வரும் போது கையோடு கொணர்ந்து உன் கால் மலரில்
வைப்பேன் அண்ணா.

*அண்ணன் நினைவாக கலைஞரின் கண்ணீர்*

# மனிதத்துக்கு தேவை மனசின் ஆட்சியே



சட்டம் என்பது வெளிக்காவல்
தர்மம் என்பது மனக்காவல்

ஒரு படத்துக்கு கட்டையால் சட்டம் போடுகிறார்
நிலத்துக்கு வேலியால் வட்டம் போடுகிறார்
அது போலவே குடும்பம், சமுதாயம், தேசம்,
உலகம் யாவும்ஒரு தனி
மனிதனுக்கு வட்டம், கட்டம்,
சட்டம் போட்டுக் காட்டுகிறது

குழந்தைக்கு அப்பா மேல் கோபம்
தொழிலாளிக்கு மேலாளர் மேல் வெறுப்பு
மாணவனுக்கு ஆசிரியர் மேல் ஆத்திரம்
மக்களுக்குக் காவலர் மேல் காட்டம்

இந்த சட்ட திட்டங்கள் யாவும் எமக்கு மேல்
திணிக்கப்பட்டால் எரிச்சல் ஆனால்
நாம் பிறர் மேல் பிரயோகிக்கும் போது திருப்தி

வட்டம் இல்லாமல் பாதுகாப்பில்லை
சட்டம் இல்லாமல் ஒழுங்கில்லை

ஒன்று அரசாட்சி
மற்றது மனசாட்சி
அரசின் ஆயுதம் சட்டம்
மனசின் ஆயுதம் தர்மம்

சட்டத்துக்கு ஓட்டை உண்டு
அது ஒரு சல்லடை
ஆயிரம் துளைகள் உள்ள அலங்கோலம்

அது ஒரு இருட்டறை குருட்டு
பூனையை இருட்டிலே தேடும் கோணல்
விளையாட்டு

வேலிகளே பயிரை மேயும்
சாத்தான்கள் வேதம் ஓதும்

சமுதாயத்தை வீழ்த்தும்
சதிகார செயல்களை அதர்மம் என்றனர்

மனிதத்தை உயர்த்தும்
மகத்தான சாதனைகளை
தர்மம் என வாழ்த்தினர்

இதில் எல்லாம் மக்கள் நம்பிக்கை
இழந்து விட்டார்கள்
வெளிக்காவல் என்பது வீணே தன்னைத்தான்
காக்கும் மனசின் ஆட்சியே
மகத்தான பாதுகாப்பு மனிதத்துக்கு..

## மனிதன் மண்ணை ஏக்கர் கணக்கில் அளக்கிறான்



## மண் மனிதனை ஆறே அடியில் அளக்கிறது

இடையூறுகள்
தடையூறுகள்
அசாத்தியங்கள்
அவமானங்கள்
குறைபாடுகள்
ஊனங்கள்
எல்லாம் தாண்டி
வென்று எழும்
முயற்சியே
மானுடதத்துவம்

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | 5 | | |
| 1 | | | 8 | | 5 | | | |
| 8 | 2 | | | 3 | | | | |
| | | 1 | | | | | 3 | 5 |
| | 3 | | 1 | | 7 | | 6 | |
| 2 | 4 | | | | | 9 | | |
| | | | | 5 | | | 9 | 7 |
| | | | 2 | | 9 | | | 4 |
| | | 8 | | 7 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 2 | 6 | 5 | 4 | 3 | 9 | 8 |
| 9 | 3 | 8 | 2 | 1 | 7 | 6 | 5 | 4 |
| 4 | 5 | 6 | 9 | 8 | 3 | 2 | 1 | 7 |
| 8 | 6 | 5 | 4 | 2 | 9 | 1 | 7 | 3 |
| 3 | 1 | 4 | 5 | 7 | 6 | 8 | 2 | 9 |
| 7 | 2 | 9 | 8 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 2 | 9 | 1 | 3 | 4 | 5 | 7 | 8 | 6 |
| 6 | 4 | 7 | 1 | 9 | 8 | 5 | 3 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 6 | 2 | 9 | 4 | 1 |

நேற்றைய விடை

## பெயர்: செவ்வாய்



## தொழில்: கல்யாணத்தை நிறுத்துவது

## நாளை

# 11.08.2018

சனிக்கிழமை

ஆடி 26

திதி: அமாவாசை பி.ப. 04.29 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ. 02.13 வரை
சுபநேரம்: 03.04 – 04.34 வரை
ராகுகாலம்: 09.04 – 10.34 வரை

# நீ உன்னை அறிந்தால்...




ஒரு உயர்ந்த மரத்தின் மீது இருந்த தனது கூட்டில் கழுகு ஒன்று. முட்டைகளை இட்டு வைத்திருந்தது. அந்த மரத்தின் அடிப்பகுதியில்கோழிஒன்றும். முட்டைகளையிட்டு அடைகாத்து வந்தது. ஒரு நாள் அந்தக் கழுகின் முட்டைகளில் ஒன்று மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து விட்டது. நல்ல வேளையாக அது உடைந்து போகாமல் எப்படியோ உருண்டு புரண்டு வந்து மரத்தின் அடியில் இருந்த கோழி முட்டைகளோடு சேர்ந்து கொண்டது. கோழியும் கழுகின் முட்டையைத் தன் முட்டை என நினைத்து அடைகாத்து வந்தது. ஒருநாள் முட்டைகள் யாவும் பொரித்து குஞ்சுகள் வெளி வந்தன. கோழிக் குஞ்சுகளின் மத்தியில் ஒரு கழுகுக் குஞ்சும் வெளிவந்தது. எல்லாக் குஞ்சுகளும் ஒற்றுமையாக விளையாடித் திரிந்தன. தாய்க் கோழியும் எல்லாக் குஞ்சுகளையும் கவனமாகக் காத்து வந்தது. குஞ்சுகள் சற்று வளர்ந்திருந்த வேளை ஒரு நாள் குஞ்சுகள் அனைத்தும் மேய்ந்துகொண்டிருந்தபோது வானில் கழுகு ஒன்று வட்டமிட்டது. கோழிக் குஞ்சுகளின் மத்தியில் நின்றிருந்த குஞ்சுக் கழுகு அதனைக் கவனித்தது. உடனே அதற்கு தானும் வானில் பறக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனால் "நான் கோழி ஆயிற்றே. என்னால் எப்படி அந்தப் பறவைபோல உயரப் பறக்க முடியும். என் அம்மா கூட உயரப் பறப்பது கிடையாதே" என்று தனக்குள் எண்ணி பெரு மூச்சு விட்டு தனது ஆசையை அடக்கிக் கொண்டது.

வானில் பறந்த கழுகு திடீரென தரையைநோக்கிப்பறந்து வந்தது. அதனைக் கண்டு கோழிக் குஞ்சுகள் மட்டுமல்ல. சிறிய கழுகு கூடப் பயந்து நடுங்கியது. ஆனால் கழுகு சற்றுத் தாமதியாது அந்த சிறிய கழுகைத் தூக்கிக் கொண்டு வானில் உயரப் பறந்தது. இப்பொழுது பெரிய கழுகைப் பார்த்து சிறிய கழுகு "கழுகே, என்னை ஒன்றும் செய்து விடாதே! நான் ஓர் அப்பாவிக் கோழிக் குஞ்சு! என்று நடுங்கியபடி கூறியது. அதனைக் கேட்ட பெரிய கழுகு "அடே முட்டாளே! நீ கோழிக்குஞ்சும் அல்ல. நான் உன்னைக் கொல்வதற்கு தூக்கிக்கொண்டு வரவுமில்லை. நீயும் என் போல வானில் பறக்கக் கூடிய கழுகுதான். அது தெரியாமல் தரையிலேயே திரிந்து கொண்டிருக்கிறாயே!" என்றது. பெரிய கழுகு சொன்னதை சிறிய கழுகால் நம்பவே முடியவில்லை. இருந்தாலும் அது "அப்படியானால் என்னாலும் வானில் உயரமாகப் பறக்க முடியுமா?என்று ஆச்சரியத்தோடு கேட்டது. நிச்சயமாக உன்னால் பறக்க முடியும். இதோ பறந்து பார் என்ற கழுகு சிறிய கழுகைத் தன் கால்களுக்கிடையில் இருந்து நழுவ விட்டது. சிறிய கழுகு தன் சிறகை அடித்து நன்றாகப் பறந்து சென்றது. இப்போது தான் அதற்கு தான் கோழி அல்ல. கழுகு என்ற உண்மை விளங்கியது.

**ஒவ்வொருவருக்குள்ளும் திறமைகள் தூங்குகின்றன. அவற்றைத் தட்டி எழுப்பி வெளிக் கொணரவேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.**



| ஒருமை | பன்மை |
|---|---|
| 1. பசு | ------------- |
| 2. காகம் | ------------- |
| 3. இலை | ------------- |
| 4. மரம் | ------------- |
| 5. பழம் | ------------- |
| 6. கல் | ------------- |
| 7. பல் | ------------- |
| 8. பூ | ------------- |



# சோம்பியிருத்தல்

ஓய்வு எல்லோருக்கும் தேவையானதே. நாள் முழுவதும் வியர்வை சிந்த உழைக்கும் தொழிலாளிக்கும். மூளையை உபயோகித்துச் செயற்படும் புத்திஜீவிகளுக்கும். வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கும். சகல தொழிலாளர்களுக்கும் ஓய்வு தேவையானதே. ஓய்வுக்கும் வேலை ஒன்றும் செய்யாது சோம்பி இருப்பதற்கும் அனேக வேறுபாடுகளுண்டு. இந்த உலகில் நேரமானது ஒருவிலை மதிப்பற்ற பொருளாகும். ஒரு நிமிடந்தானும் வீணாகி விடக்கூடாது. ஒன்றும் செய்யாதிருத்தல், சோம்பியிருத்தல் என்ற இரண்டிற்குமுள்ள முரண்பாடுகளை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். கூடுதலாகிஓய்வென்பதை அனேகமாக வேலை மாற்றங்களினால் அடையக் கூடுமேயன்றி ஒருவேலையும் செய்யாமல் சும்மா இருப்பதாலன்று. சோம்பியிருப்பதென்பது ஓய்வாயிருப்பதற்குச் சொல்லப்படும் சமாதானமாகாது.

சிலபேர் உட்கார்ந்து சிந்திப்பார்கள். வேறு சிலர் சிந்தனையின்றி சும்மா உட்கார்ந்திருப்பார்கள். சிவனே என்று சும்மா உட்கார்த்திருப்பவர்கள்தான் இந்த உலகிலே வறுமையால் வாடுபவர்கள், கையாலாகாதவர்கள்.

தினந்தோறும் மனித இயந்திரம் ஆக்கபூர்வமான சக்தியை உண்டுபண்ணிக்கொண்டேயிருக்கும். இந்தச் சக்தியை உபயோகப்படுத்தாவிடில் எம்மைத் துன்பங்கள் வந்தடையும்.

உடல் உழைப்பாளிக்கு தகுந்த ஓய்வு. மூளைக்கு வேலை கொடுப்பதாகும். உதாரணமாக, பத்திகைகள் படிக்கலாம். நூல்களை வாசிக்கலாம். தினசரி மூளையைப் பிரயோகித்து வேலை செய்பவருக்கு உண்மையான ஓய்வு தோட்ட வேலை, தச்சுவேலை முதலான வேலைகளைச் செய்வதனால் கிடைத்து விடுகிறது. எல்லோருமே தகுந்த சமயங்களில் சுமார் அரை மணி நேரம் இளைப்பாறி ஓய்வெடுப்பது நல்லது. ஆனால் அப்படி எடுக்கும் ஓய்வுக்கு நாளடைவில் அடிமையாகி விடக்கூடாது. உடல் தளர்ச்சிக்கும் ஓய்வு தேவை என்பது கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும்.

உங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும். மகிழ்ச்சியோடு இருப்பவர்கள் தங்களுக்குள்ளேயிருந்து வெளிப்படும் சக்தியை நல்லவழியில் பிர யோசனப் படத்தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். முற்றாகச் சோம்பியிருப்பதை மருந்துக்கு ஒப்பிடலாம். நல்ல ஆரோக்கியமான திட காத்திரமான மக்களுக்கு அந்த மருந்து தேவைப்படாது.





# திபெத்

உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள பகுதியாக திபெத் இருப்பதனால். அதனை உலகத்தின் கூரை என்பர். இந்தப் பகுதியின் சராசரி ஏற்றம் 500மீற்றர்களாகும். உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரம்(8848மீற்றர்) திபெத் நேப்பாள எல்லையிலுள்ளது. திபெத் இன்று ஒரு தனி நாடன்று. சீனாவின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. 1951ஆம் ஆண்டு திபெத் மீது சீனா படையெடுத்து அதனைக் கைப்பற்றிக்கொண்டது. சீனாவின் ஆட்சியே இன்று திபெத்தில் நடக்கிறது.

ஆசியாக்கண்டத்தின் மத்திய பகுதியிலுள்ள திபெத்தில் இரண்டு மலைத் தொடர்கள் உள்ளன. வடபகுதியிலிருப்பது குன்லுன். தென்பகுதியிலிருப்பது இமயமலை. சிந்து நதியினதும் சாங்போ நதி (பிரமபுத்திராவின் தலையருவி)யினதும் தோற்றவிடம் திபெத்தே.

திபெத் நாட்டின் பரப்பளவு சுமார் 12 இலட்சம் சதுரகிலோ மீற்றர்களாகும். குளிர்காலத்தில் குளிர் மிக அதிகம். மழை மிகக் குறைவு. எனினும் பார்லி, உருளைக் கிழக்கு, அப்பிள் என்பவை இங்கு செய்கை பண்ணப்படுகின்றன. ஆடு, மாடு, குதிரை, பன்றி என்பவை இந்த நாட்டின் வளர்ப்பு விலங்குகளாவுள்ளன. திபெத்தியர்கள் வளர்க்கும் விலங்குகளில் 'யாக்' எனப்படும் கவரிமான் முக்கியமானது. பொதி சுமக்கவும், வண்டி இழுக்கவும், இது பயன்படுகின்றது. இதன் பாலும் இறைச்சியும் உணவாகின்றன. இதன் தோலை உடையாகப் பயன்படுத்துகின்றனர்.

## இரு படங்களுக்கும் இடையே 10 வேறுபாடுகள் உள்ளன. கண்டுபிடியுங்கள்



# ‘துளசி’

# வாழ்வாங்குவாழ வழிகாட்டும் பிருந்தாவனி

மதுரகவி அருளானந்தம்



**சிறப்பு**

துளசியின் ஒவ்வொரு இலையிலும் சிறீ ஹரியின் அருள்கடாட்சம் பொலிவுறுகிறது. மகிமை பொருந்தியதாக தெளிவுறுகிறது. திருமகள் மணாளன் திருமாலின் அருளைப் பெற்றுத் தரும் தெய்வத் தலம் துளசி. ஆதலால் அனைத்துப் பிணிகளையும் போக்கி மாங்களம் தந்து நற் சுவாத்தியம் தரும் துளசிச் செடியை பக்குவமாக பதியம் செய்து வீடுகளில் வழிபாடு இயற்றச் சொல்கின்றன சாஸ்திரங்கள்.

அனுதினமும் துளசி மாடத்தை வணங்குவதோடு,கார்த்திகை மாதம் துளசிக் கல்யாண நிகழ்வுதனை நடத்தி தெய்வத்துளசியை வழிபட்டு மகிழ்வர் ஆன்மிக ஆன்றோர். ஆக, துளசிச் செடியை தெய்வார்த்த ஆத்மமாகப் பேணி மதித்தும், மகத்துவமாய் வணங்கிப் பணிந்தும் வரக் காரணங்களை நோக்கின் புராணங்கள் பல்வேறு கதையாடல்களைச் சொல்லி நிற்கின்றன. நாமும் துளசி பற்றிய திருக்கதைகளையும், துளசி வழிபாட்டின் மகிமைகளையும் தெரிந்து கொள்ளுதல் நன்று.

**தேவீ பாகவதத்தில் துளசி**

இன்பமயமான கோ லோகம் என்றுமே ரம்யமான சூழ்நிலை. நீலமேகச் சியாமளனான கண்ணன் மீது கொண்ட காதலால் கசிந்துருகி, கண்ணனின் இசையில் மெய்மறந்து அவன் அருகில் அழகுப் பதுமையாக அமர்ந்

> வீட்டில் துளசிச் செடியை வளர்த்தால் பாவங்கள் நீங்கும். உடல் நலம் வளம் பெறும். தீயவர்களின் கண் பார்வை அகலும். ஏவல், பில்லி, சூன்யம் என்பன செயலிழந்து போகும். துர் தேவதைகள் தூர விலகிப் போய்விடுவர்.

திருந்தாள் ராதை. அன்பால் கட்டுண்டு போன இதயங்களின் லய ஓசையை கலைக்கும் விதமாக ஏதோவொரு ஒலி கேட்டது. அவர்கள் இருவருடைய இன்பத்தைக் குலைக்கும் வண்ணம் ஆங்கு வந்த சுதாமனும் ராதையின் தோழியானவளும் கண்ணனின் கோபத்துக்கு ஆட்பட்டனர்.

அவர்கள் இருவரும் பூமியில் பிறந்து துன்பங்களை அனுபவிக்கும் படியாக கண்ணபிரான் சாபம் கொடுத்தார். ராதையின் தோழி பய உணர்வோடு பரிதவித்தாள். அச்சமுற்ற சுதாமன் கண்ணனின் அருள்கடாட்சத்தை வேண்டி நின்றான். கண்ணபிரான் ராதையின் தோழியை விழித்து, "பெண்ணே...! நீ தர்மத்துவசனின் மகளாகப் பிறந்து சங்கசூடனைத் திருமணம் செய்து கொண்டு சில காலம் நிலவுலகில் இருந்து வருக" என்று கூறினார். சுதாமனை விழித்து, " நீ பூமியில் சங்கசூடன் என்ற அரசனாகி அவதாரம் கொண்டு சிவபெருமானால் சாபவிமோசனம் பெறுவாய். பரமசிவனோடு போர்புரிந்து ஆன்ம விமோசனம் கண்டு மீண்டும் என்னிடம் வருவாய்" என்று கூறியருளினார்.

**அற்புதமான பெண் மகவு**

பூவுலகில் தர்மத்துவசனின் பத்தினி மாதவி நூறு ஆண்டுகள் கர்ப்பந்தரித்து ஒளிமயமான ஒப்பற்ற அழகியல் நிறைந்த பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். அவளுக்கு 'துளசி' என நாமகரணம் சூட்டி சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர். துளசி என்றால் தன்னிகரில்லாதவள் என்பது பொருள். துளசியும் அவள் பெயருக்கேற்பவே பேரழகும் குணமும் நிறைவாக கொண்டு வளர்ந்தாள். மணப்பருவத்தை அடைந்தாள்.

**சங்கசூடன் துளசி திருமணம்**

துளசி சங்கசூடனுக்காகவே பிறப்பெய்தி அழகியல் சிறப்போடு வளர்ந்தாள். இந்த சந்தர்ப்பத்திலே பூவுலகில் அசுர குலத்தில் தோன்றி அரசனாக விளங்கிய சங்கசூடனைச் சந்திக்கும் வாய்ப்பு துளசிக்கு கிடைத்தது. அழகே உருவான ரதி போன்ற துளசியும், மன்மதனைப் போன்ற அழகும் கம்பீரமும் நிறை இயல்பாய் வாய்க்கப்பெற்ற வீர புருஷனான சங்கசூடனும் எதிர்பாராமல் சந்தித்தனர். இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டனர். பிரம்ப தேவன் அவ்விடம் தோன்றினார். இருவரையும் திருமண பந்தத்தில் இணையச் செய்தார். அவர் ஆசியோடு இருவரும் இன்பமயமான வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்தனர்.

**அம்பிகையின் உபாசகனான சங்கசூடன்**

சங்கசூடன் உலக நாயகி தேவி பார்வதியை வழிபாடு இயற்றி வந்தான். ஒப்பற்ற பக்தனாக திருத்தொண்டுகள் ஆற்றி வந்தான். தேவியின் அருள்கடாட்சம் அவனுக்கு நிறைவாகவே கிடைத்தது. ஒப்பற்ற வலிமை பெற்றான். அதன்வழியே அகங்காரம் கொண்டு ஆட்சி அதிகாரம் புரியத் தொடங்கினான்.

தன்னடக்கமின்றி தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். தேவர்கள் பலரை சிறை வைத்தான். அவன் பிடியில் இருந்து தப்பித்த தேவர்கள் சிவபெருமானிடம் சரணாகதி அடைந்தனர். சங்கசூடன் புரிகின்ற துன்பங்கள் குறித்து முறையிட்டனர். எம்பெருமான் அருள்கூர்ந்தார். சித்திர தத்தன் என்னும் கந்தர்வனை அழைத்தார். "சங்கசூடனிடம் விரைந்து சென்று தேவர்களை உடன் விடுவிக்குமாறும், அவரவர்களுடைய பதவியை மீண்டும் திருப்பித்தர ஆவண செய்ய வேண்டுமெனவும் எடுத்துக்கூறு" எனப் பணித்தார். சித்திர தத்தன் ஈசன் கட்டளைப்படியே நடந்தான். சங்கசூடனைச் சந்தித்து பரமேஸ்வரன் கூறிய செய்தியை எடுத்துரைத்தான்.

சங்கசூடன் கோப மேலீடு கொண்டான். சித்திர தத்தனை விழித்து, "தேவர்கள் எங்கள் குலத்துக்கு காலம் காலமாகத் தீமை செய்து வருகின்றனர். எங்கள் பரம்பரையைச் சேர்ந்த குலக்கொழுந்துகளை அழித்து விட்டனர். அதன் காரணம் கொண்டே அவர்களை நான் சிறையில் அடைத்தேன்." என்றுகூறினான். அவர்களை விடுவிக்க மறுத்தான்.



சங்கசூடன் முக்காலமும் உணர்ந்தவன். தான் யார் என்பதையும், தான் பூமியில் தோன்றிய காரணத்தையும் நன்கறிவான். அதன்படியே சிவபெருமானிடம் போரிட்டு ஆன்ம விமேசனம் கண்டு தேவலோகத்தை அடைந்து கண்ணபிரானுடன் இணைந்து மகிழும் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்து கொண்டான். தன் சாபம் நீங்கும் நல்லபொழுது வந்துவிட்டதை போர் முரசின் சந்தங்கள் வழியே புரிந்து கொண்டான். போர் மூண்டது.

**பெண்மையிற் சிறந்த பதிவிரதை**

ஆம். சங்கசூடனின் மனைவி துளசி கற்பிற் சிறந்த பதிவிரதை. அவள் கொண்ட கற்பிலக்கணத்தின் சக்தி மிக வலியது. சங்கசூடனை அரணாக காத்து நின்றது. அவள் கற்போடு வாழும் வரை எவருமே சங்கசூடனை வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை அறிந்திருந்த திருமால், சிவ பெருமானுக்கு உதவி புரிய முன்வந்தார். சங்கசூடனின் திருவுருவம் தரித்து துளசி முன் வந்து நின்றார். திருமாலை தன் கணவன் என்று எண்ணத் தலைப்பட்டாள் துளசி. அக்கணமே அவளுடைய பதிவிரதா தர்மம் களங்கமடைந்தது.

உண்மை உணர்ந்து கொண்ட துளசி கலக்கமடைந்தாள். கோபம் கொண்டாள். திருமால் துளசியைத் தேற்றினார். "வருந்தாதே துளசி. நீ அடுத்த பிறவியில் என்னை அடைய வேண்டியவள். என் செயலின் சூட்சுமம் உனக்குப் புரியவில்லை. தேவர்களுடைய நன்மைக்காக நான் சில நுட்பமான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. வரப் போகின்ற பிறவியில் உன்னை நான் மணந்துகொள்வேன். உன்னைவிட உகந்தது எனக்கு வேறொன்றும் இல்லை" என்றார். அசுர வதம் நடந்தேறியது. சங்கசூடனை சிவப் பரம்பொருள் எளிதில் சம்ஹாரம் செய்து அவனுக்கு ஆன்ம விமோசனம் அளித்தார்.

துளசி மனம் கலங்கி நின்றாள். கணவனின் மறைவுச் செய்தி அவளுக்கு பேரிழப்பாக அமைந்தது. சோகத்தில் அலறியபடியே உடன்கட்டை ஏறினாள். சங்கசூடன் உடலோடு தன்னுடலையும் தீயில் ஆகுதியாக்கிக் கொண்டாள்.

துளசி மேற்கொண்ட இல்லற தர்மத்தின் நிலை கண்டு மகிழ்ந்த திருமால் அவளது உடலைத் துளசிச் செடியாக மாற்றி சிரஞ்சீவியாக்கினார். அதன்படியே துளசி பரிசுத்தமானவளாக, பாவங்களைப் போக்குபவளாக, பரம கல்யாணியாகத் திகழ்கிறாள்.

**ஏகதாசி விரதமும் துளசியும்**

ஏகதாசி உபவாசம் இருப்பவர்கள் மறுநாள் துவாதசியன்று துளசி இலையும் புனித தீர்த்தமும் அருந்தி உபவாசத்தை முடிப்பதைப் புண்ணியமாகக் கருதுகிறார்கள்.

**மகிமை**

வீட்டில் துளசிச் செடியை வளர்த்தால் பாவங்கள் நீங்கும். உடல் நலம் வளம் பெறும். தீயவர்களின் கண்பார்வை அகலும். ஏவல், பில்லி, சூன்யம் என்பன செயலிழந்து போகும். துர் தேவதைகள் தூர விலகிப் போய்விடுவர். துளசிச் செடியை ஒவ்வொரு வீட்டிலும் பதியம் செய்தல் சிறப்பான கைங்கரியமாக அமையும். துளசி வேரை கையில் கட்டிக் கொண்டால் இடி பயம் ஏற்படாது.

துளசியை பூஜைக்காக கொய்யும் போது துளசிச் செடியின் கிளையோடு பறிக்கக் கூடாது. ஒவ்வொரு தலமாகப் பறிக்க வேண்டும். அதிகாலையில் நீராடிச் சுத்தமாக இருக்கும் போது பறிக்க வேண்டும். 'ஞாயிறு செவ்வாய், வெள்ளி, அமாவாசை பௌர்ணமி, மாலை வேளை, இரவு வேளை, மாதப் பிறப்பு, வருடப்பிறப்பு' போன்ற சிரார்த்த தினங்களில் துளசியைப் பறித்தல் கூடாது.


**வழிபாடு**

பெண்கள், குடும்ப நலன் பேணவும் சுமங்கலியாகத் திகழவும் தினமும் துளசி மாடத்துக்கு முன்பாக அல்லது துளசிச் செடி இருக்கும் இடத்தின் முன்பாக கோலமிடுவர். திருவிளக்கு ஏற்றி சுத்தமான நீரை வேரில் ஊற்றி மஞ்சள், குங்குமம், சந்தனம் என்பன இட்டு நறுமணமுடைய மலர்களால் அர்ச்சித்து வழிபாடு இயற்றுவர். மும்முறை துளசியை வலம் வந்து வழிபடுதல் நன்று.

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 08 1955

இறப்பு 09 . 08 2018



### இராஜேந்திரன் இராஜேஸ்வரன்

*(யாழ். ரமணன், பிரபல சட்டத்தரணியும் ராஜன்ஸ் இசைக்குழு இயக்குநரும்)*

யாழ். பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரன் இராஜேஸ்வரன் நேற்று (09.08.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரன் - புஷ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயரஞ்சனியின் அன்புக் கணவரும் அரவிந்தனின் (A/L 2019 மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் அருணா (கனடா), நிருபா (கனடா), கணேஷ் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18364/15/18)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1490 சீட்டிழுப்பு திகதி 09.08.2018
வெற்றி இலக்கங்கள் 05 38 45 61 U
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ 32, 533, 716/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
சங்வர்தன வாசனாவ
சீட்டிழுப்பு வாரம் 167
சீட்டிழுப்பு திகதி 09.08.2018 நீலம்
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 07 37 61
விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10, 194, 516/=
ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| புத்தளம் | 3219923 |
| கண்டி | 7330264 |
| யாழ்ப்பாணம் | 5682514 |
| கம்பஹா | 6883249 |
| திருகோணமலை | 3930865 |

2018.08.11 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

## Centre For Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka

### (திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

**வணிகமாணி பட்டப்படிப்பு 2016 / 2017**
**(வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

**Bachelor of Commerce Degree Programme - 2016/ 2017**
**(External) (New Syllabus)**
**(Semester Based Course Unit System and Grade Point Average Evaluation)**

### புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்குப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:-**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) - 2016 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்.

**அல்லது**

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வணிக முதற்தேர்வில் இருந்து விலக்களிப்புக் கோருதல்**

- ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்புக் கோருவோர். உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு:-** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:-**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப் படிவத்தினை நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக **ரூபா 500**ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட **ரூபா 500** இற்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட **ரூபா 50.00** பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "*வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2016/2017*" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 21.09.2018 (வெள்ளிக்கிழமை)**
**(விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது)**

**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**

பதிவாளர்
08.08.2018

(SN/33745)(11)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 337
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி 2018.08.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,381,875/-
வெற்றி இலக்கங்கள் 05 28 43 59 C

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 05 1943

மறைவு 08 . 08 2018



### திருமதி சந்தானலட்சுமி சீவரட்ணம்

யாழ். கச்சேரி சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், கனடா Vancouver, Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட சந்தானலட்சுமி சீவரட்ணம் கடந்த (08.08.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யாழ். கச்சேரியைச் சேர்ந்த கதிரேசு - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சீவரட்ணம் - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் Freddy சீவரட்ணம் அன்பு மனைவியும் ஷார்மிளாவின் அன்புத் தாயாரும் கோபிதாஸின் அன்பு மாமியாரும் யோகநாதன் (இலங்கை), காலஞ்சென்ற குமாரசாமி (வன்கூவர்), ஆறுமுகம் (வன்கூவர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசல்யா, தேவராணி, பவழராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வனிதா(லண்டன்), கனடாவைச் சேர்ந்த அனுஷா, சுமி, முரளி ஆகியோரின் அன்பு மாமியும் அஜித், ரம்யா, ரிஷி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை மறுநாள் (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
011 234 5603 (கொழும்பு)
யோகநாதன் (சகோதரன்)

(CS 18363/15/18)







## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை நடராசா

(பிரபல வர்த்தகர் வவுனியா)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20.02.1948 | 08.08.2018 |

யாழ். புங்குடுதீவு மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் வவுனியா சூசைப் பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நடராசா (பிரபல வர்த்தகர் - வவுனியா), நேற்று முன்தினம் (08.08.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - தங்கலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கயற்கரசியின் பாசமிகு கணவரும், மனோன்மணி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் புஸ்பராணி, விஜயகுமார், அழகரட்ணம், விஜயலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிர்மலா, சிவ குமார் (அன்பன் - இந்தியா), தவக்குமார் (ரூபன் - கனடா), சர்மிளா (ஜேர்மன்) ஆகியோரின் பசமிகு தந்தையும், காலஞ்சென்ற புத்திரகொண்டான் மற்றும் லட்சுமணன், இராசரத்தினம், கமலாம்பிகை, அருணகுமாரி, தர்மராசா (சுவிஸ்), சிவராசா, தர்மராசா (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), புஸ்பராணி, ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சதீஸ்வரன், செல்லா (இந்தியா), தவசியாழினி, பரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும், சதுர்ஷன், நிதுர்ஷன், சதுர்ஜா, ரமணிஷன், காலஞ்சென்ற திலக் ஷனா மற்றும் தர்மிளா, தினேஷ் (கனடா), மதுஷன் (கனடா), தனுஷன் (இந்தியா) தக் ஷனா, சுபஹரினி, தர்நிஸ், ஆகிஸ், யாகில் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பரிமளம் மற்றும் சுகந்தி (சுவிஸ்), அரியநாதன், புஸ்பலதா (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், தக்ஷா, ஹரனிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறம்பைக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

வீடு இலங்கை (வவுனியா - 024 222 3754, 0766865096)
விஜயலட்சுமி (தங்கை - சுவிஸ் 0041796421833
ரூபன் (மகன் - கனடா - 011 289 9233 704 - 416 605 5204
சர்மிளா (மகள் - ஜேர்மனி 0049 171 827 3717 - 0049 726 194 96588
அன்பன் (மகன் - இந்தியா - 009 1822 0589 045

(o14355)(13.17)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 09 |
| 09 | 08 |
| 1971 | 2018 |



### கனகசபாபதி சுரேந்திரன் (சுரேஸ்)

*(முன்னாள் செட்டிகுளம் ப.நோ.கூ.சங்கம் பொது முகாமையாளர், இந்நாள் மல்ரிவிஷன் ரெக் சொலுசன் நிறுவனத்தின் உரிமையாளர், மல்ரி விஷன் அச்சுக்கலை முகாமையாளர்)*

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் "வண்ண நிலா" பிரதான வீதி, மகாறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சுரேந்திரன் (சுரேஸ் - முன்னாள் செட்டிக்குளம் ப.நோ.கூ. சங்கம் பொது முகாமையாளர் , இந்நாள் மல்ரிவிஷன் ரெக் சொலுசன் - நிறுவனத்தின் உரிமையாளர், மல்ரி விஷன் அச்சுக்கலை முகாமையாளர்) நேற்று (09.08.2018) காலமானார்.

அன்னார் கனகசபாபதி - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சிவசுப்பிரமணியம் - பசுபதி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவலோசினி சுரேந்திரன் (திருநெல்வேலி - விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி)யின் அன்புக் கணவரும், சிட்ஷகன் நதீஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரணேஷ் (அதிபர் - உரிமையாளர் - மல்ரி விஷன்) மற்றும் சுவீதன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் - மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மலர்வண்ணன், மனோகரி, கிருஷ்ணராஜா, மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வண்ண நிலா"
பிரதான வீதி, மகாறம்பைக்குளம், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.

077 343 5877

## மரண அறிவித்தல்

# ஆறுமுகம் நவரட்னம்

*(ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர், சாவகச்சேரி)*



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நவரட்னம் நேற்று (09.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் கணவரும் நடராஜா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) காலஞ்சென்ற நமசிவாயம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2018) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிணமுருங்கை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவற்குழி கிழக்கு,**
**கைதடி.**

தகவல்: ஆ.நடராஜா
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

## 05 ஆம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி ஜெகதீஸ்வரி சற்குணரத்தினம்

(புவியியல் ஆசிரியர் - ஜெகாரிச்சர்)

அன்னை மடியில்
03.05.1965

ஆண்டவன் பிடியில்
05.08.2013



தொப்புள் கொடி அறுகையிலே தொடரும்
அறுந்திருந்தால் கணநேரப் பொழுதினிலே - நாம்
கவலையை மறந்திருப்போம் அம்மா!
நீங்கள் எமை பெற்று வளர்த்து நாம் ஆளாகும்போது
பாதியிலே விட்டகன்று ஐந்து வருடங்கள் போயினவோ?
ஐந்து வருடமல்ல எங்களது ஐம்புலன்கள் அடங்கும் வரை
உங்களை நினைக்கமாட்டோம் மறந்தால்தானே நினைப்பதற்கு

"கேனு வாசம்"
கோயிலாமனை, கொடிகாமம்.
077 636 5732

கணவர்,
பிள்ளைகள், மற்றும்
குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

ஆண், பெண் இருபாலாரும்.

**076 528 3747**

## பெயர் மாற்ற அறிவித்தல்

அம்மன் கோயிலடி, உடுவில் வடக்கு, சுன்னாகத்தில் வசிக்கும் **ரோகினிதேவி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **றெஸ்றினி** என மாற்றம் செய்ய உள்ளதால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **றெஸ்றினி** என கையொப்ப மிடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

றெஸ்றினி

மேலும் மேம்படுத்தப்பட்ட

கொஸ்கந்தவல

## ஜீவக வாத தைலம் ®



- முதுகு வலி
- முழங்கால் வலி
- ஆர்த்தரைட்டிஸ்
- மூட்டு வலி
- தசைப்பிடிப்பு
- நரம்புசார் வலிகள்

**Jeewaka Herbal Products (Pvt) Ltd**
**0777 322 574**

## VACANCY

முன்னணி தனியார் ஆங்கிலக்கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெல்லியடி, **சாவகச்சேரி** பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்

(பெண் ஆசிரியையாயின் விரும்பத்தக்கது)

G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம். ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்

Note

- விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வு மற்றும் போட்டி பரீட்சையின் பின் தெரிவுசெய்யப்படுவார்கள்
- Salary Scale:. 15,000 - 35,000
- வயது எல்லை: 20 - 30 வயது

விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையினை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**
No.113, Kannathiddy Road, Jaffna

## No. 1 FASTEST BROADBAND NETWORK

Sri Lanka Telecom

SLT யின் வழமையான அதிவேகத்துடன் ஒன்றிணைந்து
வரலாற்றில் மாபெரும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
சைக்கிளோட்டப் போட்டி




ஆண்கள் பிரிவின் வெற்றியாளருக்கு

### ஒரு மில்லியன் ரூபா பணப்பரிசு

மற்றும் வியக்கதக்க தினசரி பரிசுகள்

| 4 செப்டம்பர் | 5 | 6 | 7 | 8 | End |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | மாத்தறை | பலாங்கொடை | மஹியங்கனை | அனுராதபுரம் (கண்டி வழியாக) | குளியாபிட்டி |

பெண்கள் பிரிவின் வெற்றியாளருக்கு ரூபா 250,000 பணப்பரிசு
செப்டம்பர் 07 கொழும்பில் ஆரம்பமாகி அம்பேபுஸ்ஸ வரை
செப்டம்பர் 08 அம்பேபுஸ்ஸவிலிருந்து ஆரம்பமாகி குளியாபிட்டியவில் நிறைவுபெறும்


மாற்று திறனாளிகளுக்கான பிரிவின் வெற்றியாளருக்கு
ரூபா 150,000 பணப்பரிசு செப்டம்பர் 08 - குருநாகலில்
ஆரம்பமாகி குளியாபிட்டியவில் நிறைவுபெறும்



ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளுக்கு பதிவுசெய்யப்பட்ட கழகங்கள்
மாற்று திறனாளிகளுக்கான பிரிவிற்கு தனிநபர்
முடிவுத்திகதி ஆகஸ்ட் 28

**070 384 3344**
உபுல் சந்தன - ஒருங்கிணைப்பு அதிகாரி
இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனம்

## MAJESTIC CINEPLEX













மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
021 2227712

## திடீர்...

அரசு முயன்று வருகின்றது.

தங்களது பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்தி இணங்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தே தொடருந்துப் பணியாளர்கள் இந் தப் போராட்டத்தை நடத்துகின்றனர். தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தொடருந்து சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டமையால் மாணவர்களும், மக்களும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். கொதிப்படைந்த மக்கள் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்த பொருள் களை நேற்றுமுன்தினம் அடித்து நொருக்கினர்.

பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு உடனடியாகப் பேச் சுக்கு வருமாறு நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தொடருந்துத் தொழிற்சங்கங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் தமது கோரிக்கைகள் நிறைவேற் றப்படும் வரை போராட்டம்தான் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

பயணிகளின் நலன் கருதி மேலதிக பேருந்துக்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை கூறியுள்ளது.

தற்போது 6 ஆயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன என்றும், எங்காவது பேருந்துச் சேவை தேவையேற்படின் 0117 50 55 55 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. தொடருந்து பருவச் சீட்டுகளைக் கொண்டுள்ள வர்கள் பேருந்துகளில் பயணிக்க முடியும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச பேருந்து பணியாளர் களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற தொடருந்து சாரதிகளை இணைத்துக்கொள் வதன் மூலம் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கப் போக் குவரத்து அமைச்சு முயற்சித்து வருகின்றது. (உ-ற)

பத்திரகாளி சமேத ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திர சுவாமி தேவஸ்தான பரிபாலன சபை

### அந்தணக் குருக்கள் தேவை

பருத்தித்துறை வியாபாரிமூலை ஸ்ரீ பத்திர-காளி சமேத ஆதி சிவ வீரபத்திரர் ஆலயத்-துக்கு ஆச்சார்யா அபிஷேகம் மேற் கொண்ட சகல கிரியைகளும் செய்யக்கூடிய குருக்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. குடும்ப மாகத் தங்கி இருக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 162 0693,
077 538 9219 (CS/18883)(11) ஆலய பரிபாலன சபை

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபரான
திருமதி சசிகலா ரனேஸ்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி புஸ்பராணி யோகராசா
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரது
ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம். (CS/18882)(11)

### 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 . 09 . 1947

மறைவு 10 . 08 . 2007

**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**


(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - ஆற்காலுற்றுறை, பருத்தித்துறை)

*அன்புடனே எமையணைத்து அவனியிலே வளர்த்தவரே!*
*தரணியிலே எமைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்கள்*
*எம் உணர்வலைகள் எப்போதும்*
*" அப்பா " என உங்களையே அழைக்குதப்பா*
*உங்கள் ஆத்மா சாந்திக்காய் அவனியதில்*
*ஆண்டவனை அனுதினமும் வேண்டுகின்றோம்*

"தனி கை" அல்வாய் வடங்கு, அல்வாய்.

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

### 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஜோசப் பற்றிக் (ராசா)**

மறைவு : 10.08.2006

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பன்னிரெண்டு வருடமாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் — நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

149/2, கதித்தல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## ஞானசாரருக்கு...

குரல் அமைப்பு. அந்த அமைப்பு நேற்று நடத்திய செய் தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார் முத்தெட்டுவே ஆனந்த தேரர். வெள்ளையரால் முடியாது போனதைச் அரசு செய்ய முயற்சிக்கக் கூடாது என்றும் அவர் வலியு றுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிக்குகளின் குரலை அடக்க நாட்டை ஆண்ட வெள்ளை யராலேயே முடியாது போனது. அதை அரசு புரிந்து கொள்ளவேண்டும். நாட்டை முன்னகர்த்துவது தொடர்பில் அரசுக்குத் தெளிவில்லை. அதனால்தான் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் போராட்டங்கள் வெடித்துள் ளன. வழக்கும் வாக்குறுதிகளையும் அரசு நிறைவேற்றுவதில்லை. நாடாளுமன்றம் கேலிக் கூத்தா கிவிட்டது. நாடாளுமன்றில் சபாநாயகரிடம் கேள்வி கேட் டால் அதற்கான விடையை அவர் வேறொருவரிடம் கேட்டே சொல்கிறார்.

பிக்குகளை அடக்கும் முயற்சியிலும் அரசு ஈடுபட்டுள்ளது. அது நாட்டின் அழிவுக்கான பாதையாகும். ஞானசார தேரர் எதற்கும் அஞ்சாது பேசுபவர். அவரை அடக்குவ தன் ஊடாக அனைத்துப் பிக்குக்களின் குரலையும் அடக்க அரசு முயன்றுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாநாயக்கர்கள் விழித்துக் கொள்ளாவிட்டால் தேரர்க ளுக்கு எதிரான வன்முறைகள் எதிர்காலத்தில் அதிகரிக் கும் என்பது உறுதி.

நாட்டு மக்களுக்குத் தற்போது எதிரணி மீது சற்று நம் பிக்கை ஏற்பட்டுள்ளது. அவர்கள் பழிவாங்கும் நடவடிக் கைகளை விட்டு நாட்டின் முன்னேற்றத்துக்குப் பணியாற் றினால் அவர்களுடன் இணைந்து செயற்பட நாங்களும் தயார். இதுவரை பிக்குக்கள் சரியாக வீதியில் இறங்கவில்லை. எமது தரப்பு நியாயத்துக்காகப் போராட நாம் வீதிக்கு வந்தால் நாடு தாங்காது என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சதாதிஸ்ஸ தேரர் தெரிவித்ததாவது: கொலைக் குற்றம், பாலியல் குற்றம் போன்றவற்றுக்காக ஞான சாரருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. தேசத்துக் காகப் பேசியதாலேயே அவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்க அரச தலைவர் முன்வரவேண்டும்.

இல்லாவிட்டால் இளம் பிக்குக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராடத் தயாராகவுள்ளோம். அரசின் செயற்பாடுகளால் நாட் டில் உள்ள பிக்குக்களில் 50 சதவீதமானவர்கள் அரசுக்கு எதி ராக உள்ளனர்.

சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரா கவும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு வழக்குத் தொடரப்பட் டுள்ளது. அந்த வழக்கில் எத்தகைய தீர்ப்பு வழங்கப்படும் என் பதை நாம் அவதானித்துக் கொண்டேயிருக்கிறோம். முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நிகழ்த்திய உரை சட்டவிரோதமானது. அது குறித்து நாடாளுமன்றத்தில் சபாநாய கரிடம் வினவினால் அவர் பொலிஸ்மா அதிபர் இன்னமும் அறிக்கை தரவில்லை என்று பதில் சொல்கிறார்.

சபாநாயகரிடம் எதைக் கேட்டாலும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைக் கேட்டுத்தான் பதில் சொல்கிறார். விஜயகலா போன்று பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த எவராவது பேசியிருந்தால் தற்போது கடுமையான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எந்த விதமான உருப்படியான காரியத்தையும் செய்யாமல் பிக் குமாரைச் சிறைக்கு அனுப்புவதில் கண்ணும் கருத்துமாக இருக் கின்ற அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும். எதிரணியினருடன் சேர்ந்து அதற்கானப் போராட்டத்தில் இறங்கத் தயாராக இருக்கி றோம் என்றார். (ற)

### மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 09 . 1945

மறைவு 09 . 08 . 2018

**கதிரவேலு சந்தானலட்சுமி**

முத்துமாரி அம்மன் கோவில் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர வேலு சந்தானலட்சுமி நேற்று (09.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சாரதாம்பாள், தங்கராசா, கணேஸ்வரன், கிருஸ்ணசாமி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2017) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துமாரி அம்மன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 609 0314, 077 579 3647

## தேர்தல்...

இல்லை. தேர்தலை நடத்துவதில் எந்த அச்சமும் இல்லை. தேர் தல் முறைமை தொடர்பாகவே சிக்கல் உள்ளது. ஆனால் தேர் தலை விரைவில் நடத்துவோம்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. அவர் மேலும் தெரிவித்த தாவது:

6 மாகாண சபைகளின் தேர்தல்களையும் ஒரே தடவையில் நடத்தவே முயற்சிக்கின்றோம். அல்லது 5 மாகாண சபைகளுக் கான தேர்தலை முதலில் நடத்தி ஒரு மாகாண சபைக்கான தேர்தலைப் பின்னர் நடத்துவோம். எதிரணியினர் மாகாண சபைச் சட்டத்தை நிறைவேற்றித் தந்தால் எமக்குச் சிக்கல் இல்லை.

2001ஆம் ஆண்டு தற்போதுள்ளதைப் போன்று சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவினோம். அவை பின்னர் இல்லாமல் செய்யப்பட்டன. தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளோம். தற் போது நீதிச் சேவை ஆணைக்குழுவை நிறுவியுள்ளோம். முன் னைய காலங்களில் பிரதம நீதியரசர் கூடச் சுதந்திரமாகச் செயற்பட முடியாது போனது. ஆனால் நாம் சுயதீன நீதித்துறையை உருவாக்கியுள்ளோம். சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் ஊடாக நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்திக் காட்டினோம். பாராளுமன்ற தேர்தலும் உள் ளூராட்சி தேர்தலையும் எந்தவொரு பிரச்சினையுமின்றி நடத்திக் காட்டினோம்.

வெள்ளை வேன் இல்லாத காரணத்தால் வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் எந்தவொரு தடையும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ளை வேன் கலாசாரங்கள் இருக்கும்போது வேலை நிறுத்தப் போராட்டங்கள் இருக்கவில்லை. அந்த சுதந்திரத்தை நாம் வழங்கியுள்ளோம். என்றார். (ற-61)

## மாகாணத்...

டுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற் றது.

அதில் தேர்தல் முறைமை தொடர்பில் கலந்துரை யாடப்பட்டது. பழைய முறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று சிறுபான்மைக் கட்சிகள் வலியு றுத்தின. புதிய முறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் வலியுறுத்தின. ஐக்கிய தேசியக் கட்சியும், கூட்டு எதிரணியும் எந்த முறைமை என்றாலும் பரவாயில்லை, உடன் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கருத்தில் இருந்தன.

இந்த விடயத்தில் இணக்கப்பாடு எட்டப்பட வில்லை. அதையடுத்து தற்போதைய எல்லை நிர்ணய அறிக்கையை விவாதத்துக்கு எடுத்து அது நிறைவேற்றப்பட்டால் புதிய முறைமையில் [illegible] தலை நடத்துவது என்று தீர்மானிக்க[illegible] நிறைவேற்றப்படாவிட்டால் பழைய [illegible] தேர்தலை நடத்துவது என்றும் முடிவெடுக்கப் [illegible] து. அறிக்கை மீதான விவாதத்துக்கான திக தியை அறிவிக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரிடம் கோரியுள் ளார். (ற-61)

## மரக்கறிகளின் நேற்றைய விலை


| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 110 | 80 | 80 | 90 |
| முள்ளங்கி | 80 | 40 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 80 | 100 |
| பாகல் | 280 | 160 | 180 | 240 |
| க.கிழங்கு | 100 | 90 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 110 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 90 | 140 | 140 |
| பூசணி | 40 | 80 | 80 | 60 |
| தக்காளி | 180 | 180 | 80 | 160 |
| வாழைக்காய் | 70 | 100 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| ப.மிளகாய் | 350 | 240 | 250 | 400 |
| புடோல் | 110 | 60 | 80 | 100 |
| கோவா | 150 | 140 | 160 | 160 |
| வெண்டி | 100 | 40 | 80 | 80 |
| போஞ்சி | 300 | 260 | 240 | 280 |
| லீக்ஸ் | 240 | 120 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 240 | 260 | 300 |
| கரட் | 280 | 320 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 150 | 80 | 70 | 180 |

# குருதிச் சுத்திகரிப்பை தூண்டும் உணவுகள்



சீரான குருதி ஓட்டம் உடலியக்கத்துக்கு மிக அவசியம். சுவாசத்துக்கு அவசியமான ஒக்சிசனைக் கடத்துவதற்கும், ஹார்மோன்கள், சர்க்கரை, கொழுப்புகள், செல்கள் மற்றும் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் செயல்பாட்டிற்கும் குருதி ஓட்டம் சீராக இருக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசுபாடு, மன அழுத்தம், தவறான உணவு பழக்கங்கள் போன்றவற்றால் உடலில் நச்சுக்கள் சேர்வது தவிர்க்கமுடியாதது.
அவைகளை அப்புறப்படுத்தி நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவது அத்தியாவசியமானது. அதற்கு குருதி ஓட்டம் சீராக இருப்பதுடன் அதனை சுத்திகரிப்பதும் முக்கியமானது. நுரையீரல், சிறுநீரகங்கள், கல்லீரல் போன்றவை இயற்கையாகவே குருதியைச் சுத்தப்படுத்தும் பணியைச் செய்கின்றன. எனினும் குருதி சுத்திகரிப்பு செயல்முறையை தூண்ட உதவும் உணவுகளை தேர்ந்தெடுத்து சாப்பிடுவது நல்லது. அத்தகைய உணவுவகைகள்!

- அப்பிள், உலர் திராட்சை, பேரிக்காய், கொய்யாப் பழம் போன்றவை குருதியைச் சுத்திகரிக்கும் பழ வகைகள். இவை குருதியில் உள்ள அதிக கொழுப்புக்களை கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள், கழிவுகளை நீக்கும் பணியையும் செய்கின்றன.
- தக்காளிப் பழத்தில் இருக்கும் லைகோபின், குளுதாதயோன் போன்றவையும் உடலிலுள்ள கழிவுகள், இரசாயனங்களை நீக்கும் தன்மை கொண்டவை.
- கீரை வகைகள் குருதி ஓட்டம் சீராக நடைபெறுவதற்கு துணை நிற்பவை. கல்லீரலில் உள்ள நொதிகளை அதிகரிக்கவும், குருதிச் சுத்திகரிப்புக்கும் உதவி புரியும்.
- பீட்ரூட் சாறு இயற்கை யாகவே உடலில் நச்சுத் தன்மையற்ற நொதிகளின் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. கல்லீரல் வீக்க பிரச்சினையில் இருந்தும் பாதுகாப்பு அளிக்கும். ஆதலால் பீட்ரூட்டை ஜூஸாகவோ, சலட்டாகவோ, பொரியலாகவோ தயார் செய்து சாப்பிடுவது நல்லது.
- நீரிழிவுக்குப் பதிலாக வெல்லம் பயன்படுத்துவது சிறந்தது. இதில் இரும்பு சத்து அதிகமிருக்கிறது. ஹீமோகுளோபின் அளவை அதிகரித்து, குருதி ஓட்டத்தையும் சீராக பராமரிக்கவும், குருதியைத் தூய்மைப் படுத்தவும் வெல்லம் உதவுகிறது.
- குடி தண்ணீர், இயற்கையாகவே குருதியைச் சுத்திகரிக்கும் பணியை மேற்கொள்கிறது. சிறுநீரகம் மூலம் உடலில் உள்ள கழிவுகளை சிறுநீராக வெளி யேற்றுகிறது. இரவு முழுவதும் செப்புப் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி வைத்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வரலாம். இவ்வாறு செய்து வருவது கல்லீரல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். குருதியில் உள்ள நச்சுக்களையும் நீக்கும்.
- முகப்பரு மற்றும் சரும பிரச்சினைகள் ஏற்படுவதற்கு, குருதியில் உள்ள அசுத்தங்கள் காரணமாக இருக்கின்றன. குருதியை சுத்திகரித்து தூய்மைப்படுத்துவதன் மூலம் தலைவலி, ஒவ்வாமை, குமட்டல் உள்பட பல்வேறு உடல்நல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம்.



# உளுந்து, கீரை வடை

**தேவையான பொருள்கள்**
உளுந்தம்பருப்பு - 200 கிராம்
முளைக்கீரை - கைப்பிடி அளவு
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் -2
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை**
உளுத்தம்பருப்பை நன்றாகக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைத்து, தண்ணீர் விடாமல் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.
வெங்காயம், ப.மிளகாயை சிறுதுண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
முளைக்கீரையை நன்றாக சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.
அரைத்த மாவில் நறுக்கிய கீரை, உப்பு, வெங்காயம், ப.மிளகாய் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.
சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் பிசைந்து வைத்திருக்கும் மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.
சூப்பரான உளுந்துக் கீரை வடை தயார்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1100 | 1000 | 1400 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 800 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 400 | 300 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 400 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## ஆதாரங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நர் ரெஜினோல்ட் குரேவிடம் சுட்டிக்காட்டினர் பிரதேச செயலர்கள்.
யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள வாள்வெட்டுச் சம்பவங்கள், போதைப் பொருள் கடத்தல்கள் போன்ற சட்டமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புக் கூட்டம் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோது அதிகாரிகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.
யாழ்ப்பாணத்தில் குறிப்பாகத் தென்மராட்சி, கெற்பேலி, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக களவாக மணல் அகழ்வு நடக்கின்றது. குடியிருப்பாளர்கள் அற்ற வீடுகளில் கலாசார பிறழ்வான சம்பவங்களும், சட்டமீறல்களும் இடம்பெறுகின்றன. நாவற்குழியை அண்டிய கரையோரங்களில் கஞ்சா பாவனை அதிகரித்துள்ளது.
காரைநகர், புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் இறைச்சிக்காக மாடுகள் கடத்தப்படுகின்றன. அவற்றுக்கு உடந்தையாக இருப்பவர்கள் தொடர்பாக முறைப்பாடுள் செய்யப்பட்டும் எந்த நடவடிக்கையும் இல்லை என்று அதிகாரிகள் ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர்.
வன்முறை மற்றும் சமூக சீரழிவுகளைத் தடுப்பதற்குச் சமூகப் பிரதிநிதிகளையும், மதத் தலைவர்களையும், அதிகாரிகளையும், சட்டத் துறையைச் சேர்ந்தவர்களையும், பாதுகாப்புத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது என்று ஆளுநர் குரே தெரிவித்தார்.
இந்து அறநெறிப் பாடசாலைகளை அதிகளவில் தோற்றுவித்து அறநெறிகளைக் குழந்தைகளுக்குப் போதிக்கவேண்டும். அதன்மூலம் தவறான பழக்க வழக்கங்களைக் குறைக்கலாம். பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்கள் தத்தமது சமய நெறிகளை அறநெறிப் பாடசாலைகள் ஊடாகப் போதிக்கும் நிலையில் இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் அவற்றைப் போதிப்பதில் வீழ்ச்சி கண்டுள்ளன என்றும் வடக்கு ஆளுநர் குறிப்பிட்டார்.
கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (ரு-8,105)

# காலையில் தண்ணீர்...



தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது நல்லது எனப் பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். ஆம், தண்ணீர் குடிப்பதால் எண்ணற்ற நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கலாம்.
தினமும் தண்ணீர் குடிப்பதால் வயிறு சுத்தமாவதுடன், உடலில்உள்ளநச்சுக்கள்சிறுநீர், மலம்மூலம்வெளியேறிவிடும்.
பெரும்பாலான நபர்களுக்கு உடலில் நீர்ச்சத்து குறையும் போது தான் தலைவலி ஏற்படுகிறது, அத்தகைய நபர்கள் தினமும் தண்ணீர் குடித்து வருவது நல்லது.
குறிப்பாக காலையில் அவசர அவசரமாக வேலைக்கு கிளம்பும் நபர்கள், சாப்பிடாமல் செல்வது வழக்கமாகி விட்டது. இவர்கள் தினமும் தண்ணீர் குடிக்கும் போது பசி எடுப்பதுடன் அல்சர் தொல்லையிலிருந்தும் தப்பிக்கலாம்.
வெதுவெதுப்பான தண்ணீரை குடித்தால் உடலின் மெட்டாபாலிசம் அதிகரிப்பதுடன், உண்ணும் உணவு விரைவில் செரிமானமாகிவிடும்.
மேலும் குருதி சிவப்பணுக்களின் வளர்ச்சியானது அதிகரித்து, குருதியானது அதிகப்படியான ஒட்சிசனைக் கொண்டிருப்பதால் உடலானது எனர்ஜியுடன் இருக்கும்.
எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். முகமும் பொலிவுடன் இருப்பதுடன், பருக்கள் வருவது குறைந்துவிடும்.

# பொருளாதார வளர்ச்சி மேம்படும்


## *நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையில் மத்தியவங்கி சுட்டிக்காட்டு*

பொருளாதாரத்தின் முதன்மைக் குறிகாட்டிகளில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் தற்போதைய எதிர்வுகூறல்களுக்கு அமைய. இலங்கையின் உண்மைப் பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் படிப்படியான அதிகரிப்பை வெளிக்காட்டும் என நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையில் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து மேலும் குறித்துரைத்துள்ள அறிக்கை.

" மேம்பட்ட வானிலை நிலைமைகள் நடப்பாண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான கைத்தொழில்களில் சாதகமான விளைவை ஏற்படுத்தும். ஒட்டுமொத்த வளர்ச்சியின் உத்வேகத்துக்கு ஆதரவளிக்கும். இவை பணிகள் மற்றும் கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் கண்டு கொள்ளப்படும் விரிவாக்கத்தால் வழிநடத்தப்படும். தொடர்ச்சியான இறைத்திரட்சிகளுக்கு மத்தியிலும் போட்டித் தன்மை மிக்க. நெகிழ்ச்சி தன்மை வாய்ந்த செலாவணி வீதம். தாழ்ந்த பணவீக்கச் சூழல் ஏற்றுமதி மற்றும் முதலீடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலான வலுவான கொள்கைக் கட்டமைப்பு என்பவற்றிலிருந்து நன்மை கிட்டும். இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் பொருளாதாரம் உள்ளார்ந்த மட்டத்தை அடையும். வருடத்தின் இறுதி காலாண்டு பகுதியில். பொருளாதார வளர்ச்சி 4.6 சதவீதத்தால் அதிகரிக்கும்." - என தகவல் வெளியிட்டுள்ளது. (ஓ)

### வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் மாதிரி




*தகவல் மூலம்: இலங்கை மத்திய வங்கி. இலங்கை முதலீட்டுச் சபை. கொழும்பு பங்குப்பரிவர்த்தனை*

# இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி இம்மாத இறுதியில்

28 ஆவது பன்னாட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அரச தகவல் திணைக்களம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சிக்கு இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை. ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பன அனுசரணை வழங்கவுள்ளன.

நாட்டில் பல்வேறு தர நிலைகளில் உள்ள உள்நாட்டுக் கைத்தொழிலை ஒரே மேடைக்குக் கொண்டு வரும் முயற்சியாக இந்த கண்காட்சி அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



# செலான் 'ஹோம் லோன்' வீட்டுக்கடன் திட்டம் மீள ஆரம்பம்

## மேம்படுத்தப்பட்ட ஆலோசனை சேவையை வழங்க நடவடிக்கை

மூன்று தசாப்த காலமாக சேவ்வ அடிப்படையிலான வங்கியில் நடவடிக்கையை மேற்கொண்டு வரும் செலான் வங்கி. தனது பிரத்தியேக வங்கியியல் கட்டமைப்பை பலப்படுத்தியுள்ளது. இதன் ஆரம்பமாக வீட்டுக் கடன் வசதியை விசேட ஆலோசனை சேவையோடும். மேலும் பல அனுகூலங்களுடனும் மீள அறிமுகம் செய்துள்ளது.

இதனூடாக இலங்கையர்கள் இடர்பாடுகள் இன்றி. வேகமாக வீடொன்றின். தொடர்மனையொன்றின் அல்லது காணியொன்றின் உரிமையாளராகும் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வங்கி முன்வந்துள்ளது.

செலான் வங்கியின் வீட்டுக்கடன் மீள வடிவமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செலான் வங்கியின் வாடிக்கையாளர் வங்கியியல் பிரிவின் பதில் பொது முகாமையாளர் திலான் விஜேசேகர கருத்துத் தெரிவிக்கையில்.

"இன்று நாட்டில் உள்ள பெரும்பாலான நகர் பகுதிகளில் பொது உட்கட்டமைப்பு. போக்குவரத்து வசதிகள் போன்றன மேம்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. நகரமயமாக்கலோடு மேலும் பல இலங்கையர்கள் இந்தப் பகுதிகளுக்கு இடமாறுவதுடன். சகாயமான வீடமைப்பு தீர்வுகளுக்கான தேவையை நாம் இனங்கண்டு வருகிறோம். அதேவேளை. நகரங்களில் குடியேறி வசிப்போர் சொகுசான இல்லங்கள் மற்றும் தொடர்மனைகளில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்புகின்றனர். எந்தவொரு நபரைப் பொறுத்தமட்டிலும் வீட்டின் உரிமையாளராவது என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

இந்தச் செயன்முறையை வேகமானதாகவும். சகாயமானதாகவும். வாடிக்கையாளர்களின் தேவையை அடிப்படையாக கொண்டதாகவும் பேண எதிர்பார்க்கிறோம். மேம்படுத்தப்பட்ட வீட்டு கடன் ஆலோசனை சேவை என்பது பிரதான மெருகேற்றமாக அமைந்துள்ளதுடன். சொந்த இல்லமொன்றை கொண்டிருக்க எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு உதவும் வகையில் அமைந்திருக்கும். நாட்டின் எந்தவொரு பகுதியையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு விசேட வீட்டு கடன் ஆலோசனை சேவையை பெற்றுக் கொள்ள வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது இலக்காகும்.

இதனூடாக அவர்கள் வாழ்க்கையில் மேற்கொள்ளும் முக்கியமான தீர்மானத்தில் தீர்க்கமான பங்களிப்பை பெற்றுக் கொடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கட்டமைப்பு மேம்படுத்தல்களில் முன்பக்க மற்றும் பின்புற கட்டமைப்பு மேம்படுத்தல்கள். கடன் கையாளல் செயன்முறைகள் மேம்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் செயன்முறை போன்றன சிறந்த மையப்படுத்தல்களுடன் அமைந்துள்ளன. குறைந்த காலப்பகுதியில் விண்ணப்பங்களை கையாளக்கூடிய வசதியை பெற்றுக் கொடுக்கும். இவற்றுடன் தீர்வுப் புத்தாக்கங்கள் மற்றும் புதிய டிஜிட்டல் வழங்கல்கள் போன்றன வாடிக்கையாளர்களின் வங்கியியல் அனுபவத்தை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும்."என்றார்.

மேலும் வாடிக்கையாளர் தேவைகள் தொடர்பில் செலான் வங்கியின் அர்ப்பணிப்பு குறித்து விஜேசேகர விளக்கமளிக்கையில்.

"வங்கியின் மீளமைக்கப்பட்ட வீட்டு கடன் சேவை என்பதில் மற்றுமொரு முக்கிய அங்கமாக செலான் வீட்டு கடன் திறந்த நாள் நிகழ்வு அமைந்துள்ளது. நாடு முழுமையுமாக இதனை நாம் அறிமுகம் செய்திருந்ததுடன். இலங்கையர்கள் கொண்டுள்ள வீடொன்றின் உரிமையாளராகும் எதிர்பார்ப்பை புரிந்து கொண்டு இதை மேற்கொண்டுள்ளோம். முதலாவது திறந்த நாள் நிகழ்வு பத்தரமுல்ல கிளையில் இடம்பெற்றதுடன். வாடிக்கையாளர்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்தது. இங்கு நாம் விசேட பயிற்சிகளை பெற்ற வீட்டுக் கடன் ஆலோசகர்களை கொண்டுள்ளதுடன். கடன் கையாளல் மற்றும் அங்கீகார அணியையும் கொண்டுள்ளோம். இவர்களின் உதவி கொண்டு வாடிக்கையாளர்கள் தமது வீட்டு முதலீடு தொடர்பில் சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையேற்படும் போது அவசியமான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு ஆலோசகர்கள் உதவி புரிவார்கள். வீட்டுக் கடன் ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது வாடிக்கையாளர் மனங்களில் பெருமளவில் தோன்றும் ஒரு விடயமாக நீண்ட கால அடிப்படையில் அவர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ள நிதிசார் அர்ப்பணிப்பு அமைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு இந்த நிதிசார் அர்ப்பணிப்பு சுமையாக அமைந்துள்ளது. பல வங்கிகள் மீளச் செலுத்துகைகளுக்கு சிறந்த வட்டி வீதங்களை வழங்கிய போதிலும். அவற்றுள் பல மாறும் வட்டி வீதங்களாக அமைந்துள்ளன. செலான் வங்கியை பொறுத்தவரையில். வாடிக்கையாளர்களுக்கு நிலைபேறான நிதியியல் உறுதித்தன்மை மற்றும் போட்டித்தன்மையுடைய நிலையான வட்டி வீதங்களை 10 வருட காலம் வரை வழங்குகிறோம்." என்றார். (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம் - 0212221455

9/8/2018

www.cse.lk

பங்குச் சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | [illegible] | 6,155.41 | 6,120.69 |
| S&P SL20 | [illegible] | 3,332.30 | 3,312.53 |
| [illegible] | | 472,414,208 | 967,746,100 |
| [illegible] | | 231,932,932 | 250,142,720 |
| [illegible] | | 297,957,000 | 875,119,300 |
| [illegible] | | 246,482,170 | 808,637,380 |
| [illegible] | | 100,476,496 | 92,660,760 |



| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 144.5 | 667,364 | 96,043,657 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 124 | 493,779 | 61,229,333 |
| சிலோன் கோல்ட் ஸ்ரோஸ் | CCS.N | 930.00 | 65,398 | 60,820,140 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 1,231.10 | 40,486 | 49,798,825 |
| மெல்ஸ்ரா க்ரூப் | MELS.N | 50.00 | 940,259 | 47,110,800 |
| லயன் ப்ரூவெரி சிலோன் | LION.N | 620.00 | 44,463 | 27,567,060 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 223.00 | 109,834 | 24,703,186 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 1849.9 | 10,010 | 18,418,354 |
| சம்பத் வங்கி | SAMP.N | 285.5 | 47,639 | 13,579,775 |
| சேவ்ரோன் லுப்ரிகன்ட்ஸ் | LLUB.N | 94.3 | 71,491 | 6,660,533 |

Fundamental Analysis - Jaffna
12 August 2018
9.00am-11.30 am at CSE Jaffna Branch
Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | [illegible] |
| பரிமாற்றத்தில் | 234 |
| விலை உழைப்பு | 9.7 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.2 |

## அமைச்சரவையை...

தொடர்பில் தீர்வு காணும்படி இரண்டு மாதங்களில் நிறைவேற்றப்படும் இரண்டாவது தீர்மானம் இது.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் அவசர கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. அதில் அவர் தெரிவித்ததாவது:

முதலமைச்சரால் தான் பதவி நீக்கப்பட்டது தொடர்பாக, டெனீஸ்வரனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், நீதிமன்ற இடைக்காலத் தடை உத்தரவு கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. இடைக்காலத் தடை உத்தரவின் அடிப்படையில் டெனீஸ்வரன் தொடர்ந்து அமைச்சராக இருக்கின்றார் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அரசமைப்பின் பிரகாரம் மாகாண சபைக்கு முதலமைச்சர் உள்பட ஐந்து அமைச்சர்களுக்கு மேல் இருக்கமுடியாது. ஆனால் இன்று வடக்கு மாகாண சபையில் ஆறு அமைச்சர்கள் செயற்படுகின்றார்கள். இந்த விடயம் சீர் செய்யப்படாத நிலையில் ஆளுநர் அமைச்சரவையைக் கூட்ட வேண்டாமென்று தலைமைச் செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

முதலில் இந்த மாகாண சபையில் யார் அமைச்சர்கள் என்று எமக்கு முதலமைச்சரால் ஒழுங்கு செய்யப்படும் வரை சபையில் அமைச்சர்களிற்குரிய ஆசனங்கள் ஒழுங்கு செய்யப்படக் கூடாதென அவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசமைப்பின் பிரகாரம் சபையின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று அமைச்சர்கள் மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்களாதலும் வகை கூறலும் ஆகும். இன்று அமைச்சர்களே யாரென்று தெரியாத சபையில் நாம் கூட்டுப் பொறுப்பினையும், கூட்டு வகை கூறலையும் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதற்கு நிரந்தரமான தீர்வொன்று உடனடியாகக் காணப்படல்வேண்டும். இன்றேல் இந்தச் சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தல் அர்த்தமில்லாத ஓர் செயற்பாடு ஆகும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த அவசர கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது. ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம், வடக்கு மாகாண ஆளுநர் பின் திகதியிடப்பட்ட அரசிதழை வெளியிடுவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் அமைச்சர்கள் யார் என்பது தொடர்பில் அக்கறைப்படமாட்டார். அவருக்கு அமைச்சர்களை நியமிக்குமாறு ஆலோசனை வழங்கவேண்டியவர் முதலமைச்சரே. பின் திகதியிடப்பட்ட அரசிதழை வெளியிடவேண்டுமானால் அதனையும் முதலமைச்சர்தான் ஆளுநரிடம் கோரவேண்டும். சட்டவியாக்கியானம் தொடர்பில் முதலமைச்சர் உயர்நீதிமன்றத்தை நாடியிருக்கலாம். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை, வழக்கின் கட்டளைக்கு எதிராகவே உயர்நீதிமன்றத்தை நாடியிருக்கின்றார் என்று ஆளும் தரப்பிலிருந்தே அதற்குப் பதிலளிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் இரு தரப்பிலுமே தவறு இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்ட அவைத் தலைவர், அவர்கள் இருவரும் இணைந்தே இந்தப் பிரச்சினையை சீர்செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து, அரசமைப்புக்கு முரணாக உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை, நியமன அதிகாரிகளான முதலமைச்சரும், ஆளுநரும் இணைந்து சீர்செய்யவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, வடக்கு அமைச்சரவை தொடர்பில் நடைபெற்ற சிறப்பு அமர்விலும் இவ்வாறானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும், முதலமைச்சர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## நல்லூர்...

ஆலயத் திருவிழா முடிந்ததும் நினைவுத் தூபி அமைக்கும் பணி தொடங்கும். இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்ட நாம் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்போம் எனக் கூறியிருந்தோம். நாம் சபை நடவடிக்கையை ஆரம்பித்ததும் எமது முதல் பணியாக திலீபனின் நினைவு தூபியைச் சீரமைப்பது என்று தீர்மானித்தோம். அதற்கான நடவடிக்கைகளை தற்போது தொடங்கியுள்ளோம்.

நல்லூர் ஆலயத் திருவிழா தொடங்கவுள்ளது. அந்தப் பகுதியில் பெருமளவான மக்கள் கூடுவர். நினைவிடத்தின் புனிதத் தன்மையைப் பேணச் சுற்றுவேலி அமைத்துள்ளோம். தூபியைச் சீரமைப்பதற்கு மாநகர சபையின் நிதி பயன்படுத்தப்படாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நினைவுத் தூபி அமைப்பதற்காக 2 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார். அந்த நிதியில் சீரமைப்புப் பணிகள் நடைபெறும்- என்றார். (ற-8)

## ஏ-9...

எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அவைத் தலைவரால் அவசர பிரேரணையாக இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள்.

மிகப் பெரும்பான்மையான விபத்துக்கள் ஏ9 வீதியோரங்களில் இரவு நேரங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களுடன் மோதியே ஏற்பட்டுள்ளன. இயக்கச்சியில் 6ஆம் திகதி இடம்பெற்ற விபத்து இதற்கான அண்மைய உதாரணம்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதியின் இருமருங்கிலும் வாகனங்கள் தரித்து நிற்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று பொலிஸ்மா அதிபரையும், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஏ9 வீதியில் பொருத்தமான இடங்களில் வீதிக்கு அப்பால் வரகனத் தரிப்பிடங்களை ஏற்பாடு செய்வதற்கு வட மாகாண வீதி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுப்பதற்கான பணிப்புரைகளை முதலமைச்சர் வழங்க வேண்டும் எனவும்.

தற்செயலாக இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட வாகனத்துக்கு 30 மீற்றருக்கு அப்பால் பின்புறமாக சிவப்பு ஒளிவீசும் முக்கோண ஒளிரிகளைவைப்பதற்கான ஏற்பாடுகள் சகல வாகனங்களிலும் இருப்பதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்வதற்கான விதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை வட மாகாண போக்குவரத்து அதிகாரசபை மேற்கொள்ள வேண்டும் எனவும் முன்வைக்கப்பட்ட பிரேரணையை, ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் வழிமொழிந்தார். சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (உ-5)

## மீனவர்...

முல்லைத்தீவு, ஓக.10

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். மீனவர்களுக் கும் அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் வலுத்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சட்டத்தை மீறும் வகையிலான மீன்பிடியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவு மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 2ஆம் திகதியும் அவர்கள் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தினர். நீரியல்வளத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்ட அவர்கள் பொலிஸ் காவலையும் மீறி கற்களை வீசி அலுவலகத்தைத் தாக்கியிருந்தனர். அதன்பின்னர் திணைக்களத்தின் அலுவலகச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இதையடுத்து நேற்று புதிய அதிகாரிகள் 3 பேர் அலுவலகத்திற்கு வருகை தந்தனர். அவர்களில் ஒருவர் தமிழர். உதவி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள அவர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் அவருக்கு மீனவர்கள் தெளிவுபடுத்தினர்.

எதிர்வரும் 12ஆம் திகதி மீன்பிடி அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று அதிகாரி மீனவர்களிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையே அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ற-ரி3)

## வித்தியா...

விசாரணையைத் தொடர்வது என்று தீர்மானித்த நீதியரசர்கள் குழாம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

புங்குடுதீவு மாணவி 2015ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி கூட்டுவன்புணர்வின் பின்னர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார். மாணவி தனது வீட்டில் இருந்து பாடசாலைக்குச் சென்றபோது கடத்தப்பட்டு இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டது.

வாய்க்குள் துணி அடைக்கப்பட்டமையினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. தலையில் அடிபட்டதால் மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டு இறப்பு சம்பவித்திருந்தது. இந்தக் கொலைச் சம்பவம் முழு நாட்டையுமே உலுக்கியிருந்தது.

வன்புணர்வு மற்றும் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களில் இருவருக்கு எதிராகச் சாட்சியங்கள் இருக்காத காரணத்தால் அந்த இரண்டு பேரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். வழக்கு ட்ரையல் எட் பார் முறையில் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 7 பேருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்தது. மாணவியின் குடும்பத்துக்கு தலா 10 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்மப்பளித்தது. அத்துடன் நான்காவது குற்றவாளி மகாலிங்கம் சசீந்திரன் மற்றும் 9 ஆவது குற்றவாளி மகாலிங்கம் சசிக்குமார் (சுவிஸ் குமார்) ஆகியோர் 70 ஆயிரம் ரூபாவும், ஏனைய குற்றவாளிகள் 40 ஆயிரம் ரூபாவும் இழப்பீடு செலுத்தவேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. செலுத்த தவறினால் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கடூழிய சிறைத்தண்டனை மேலும் அதிகரிக்கப்படும் என்றும், அரச தலைவர் தீர்மானிக்கும் தினத்தில் குற்றவாளிகளின் உயிர் பிரியும் வரை தூக்கிலிடப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக குற்றவாளிகள் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீடு செய்திருந்தனர். அது நேற்று விசாரணைக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (ற-114)

## தன்...

னைப்பு (ஈகோ) இடமளிக்காவிட்டாலும், ஏனைய இரண்டு நிபந்தனையும் அவர் செயற்படுத்துவேன் என்று உறுதி வழங்கினால் பதவியிலிருந்து விலகுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"இது ஈகோ பிரச்சினை என்கின்றீர்கள். ஏன் முதலமைச்சர் விட்டுக்கொடுக்கவேண்டும். டெனீஸ்வரன் பதவி விலகலாம்தானே? சத்தியலிங்கம் அமைச்சுப் பதவியைத் துறந்ததைப் போன்று டெனீஸ்வரனும் செய்யலாமே?"" என்று ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார். அத்துடன், மறைந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் உடலைப் புதைப்பது தொடர்பான சர்ச்சையில் உயர் நீதிமன்றம் இரவோடு இரவாக ஆராய்ந்து காலையில் தீர்ப்பளித்தது. எங்கள் மாகாண சபையின் ஆயுள்காலம் ஒக்ரோபர் 25ஆம் திகதி முடிவதைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவை விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் விரைவாக வழக்கை விசாரித்து முடிக்கவேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் கோரிக்கை முன்வைத்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய டெனீஸ்வரன், வழக்குத் தொடர்பில் நடந்த விடயங்களை சபைக்குத் தெளிவுபடுத்தினார். மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரசமைப்புத் தொடர்பில் பொருள்கோடல் பிரச்சினையா? நடைமுறைப்படுத்தல் பிரச்சினையா? என்று முதலமைச்சரின் சட்டத்தரணியிடம் கேட்கப்பட்டது. நடைமுறைப்படுத்தல் பிரச்சினைதான் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரவை இருக்கும்போதே நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைச் செலவு செய்து முடிக்காமல் திருப்பி அனுப்பியதாகச் சொல்லப்பட்டது. அமைச்சரவை இல்லாத நிலையில், இந்த நிதியாண்டுக்குரிய வேலைகள் எப்படி நடைபெறும்?

அமைச்சரவை விவகாரத்தை சுமுகமாக முடிக்க மூன்று நிபந்தனைகளை முன்வைக்கின்றேன். அதனை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டால் நான் பதவி விலகுகின்றேன்.

முதலமைச்சர், என்னையும், சத்தியலிங்கத்தையும் பதவி நீக்கியது உள்ளிட்ட அவர் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கோரவேண்டும். அவர் இதனைச் செய்வதற்கு தன்முனைப்பு இடமளிக்காவிட்டால், இந்த நிபந்தனையை ஏற்கத் தேவையில்லை, ஆனால் மற்றைய இரண்டு நிபந்தனைகளையும் முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் நான் அமைச்சராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்டிருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

மிக நீண்டகாலம் ஆராயப்பட்டு உருவாக்கப்பட்ட தனியார் மற்றும் அரச பேருந்து இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் முதலமைச்சர் செய்தாலே, பதவியை நான் துறப்பேன் - என்றார். (உ-5)

## கடிதத்...

புக்களிலிருந்து அந்த அமைச்சுப் பொறுப்புக்களை நீக்கியுள்ள னர்.

வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி, வர்த்தக வாணிபம், கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களை பா.டெனீஸ்வரன் வைத்திருந்தார். அமைச்சுப் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்ட பின்னர் அமைச்சுப் பொறுப்புக்களை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான அனந்தி சசிதரன், ஜி.குணசீலன் ஆகியோர் வைத்திருந்தனர்.

கடந்த ஜூன் 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையில், டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்வதாக அறிவித்திருந்தது. அவரது அமைச்சுப் பொறுப்புக்கள் மீளவும் வழங்கப்படவில்லை. தற்போதுள்ள அமைச்சர்களே நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருந்தனர்.

தற்போது அந்த அமைச்சுப் பொறுப்புக்களை தமது கடிதத் தலைப்பிலிருந்து அமைச்சர்கள் நீக்கியுள்ளனர். இதேவேளை, நீதிமன்றத்தின் இடைக்காலக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படாமைக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அடுத்த மாதம் 7ஆம் திகதி முதலமைச்சர் உள்ளிட்ட மூன்று அமைச்சர்களையும் நேரில் முன்னிலையாக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## கலைஞர்...

டது.

வடக்கு மாகாண சபையின் 129ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றபோது கலைஞருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. சபை அமர்வின் தொடக்கத்திலேயே இந்த அஞ்சலி செலுத்தப்பட்டது. சபை உறுப்பினர்கள் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தினர். தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் இரங்கலுரை வாசித்தார். அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா இரங்கலுரை நிகழ்த்தினார்.

இரண்டு தசாப்தங்களாக ஐந்து முறை முதலமைச்சராகவும், ஏறத்தாழ அறுபது வருடங்கள் தமிழ்நாட்டுச் சட்ட சபை உறுப்பினராகவும், எழுபத்தைந்து வருடங்களிற்கு மேலாக தமிழ்நாட்டு அரசியலில் தடம் பதித்தவர் கலைஞர் கருணாநிதி. அவர் முதலமைச்சராக இருந்த காலங்களில் அவரது செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க விளைவுகளில் ஒன்று இந்திய மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியில் முன்னிலையில் இன்று தமிழ்நாடு இருப்பதாகும்.

அரசியலிற்கு அப்பால் தமிழிற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. ஆயிரம் ஆயிரம் தமிழ்நாட்டு மக்களின் கண்ணீரில் சங்கமமாகி பேரறிஞர் அண்ணாவின் சமாதி அருகே மீளாத்துயிலடைந்திருக்கும் கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தினார், கழகத் தொண்டர்கள் மற்றும் தோழர்களிற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார். (உ-5.26)

# தோல்வி என்றதும் குறை மதிப்பீடுகள் செய்ய வேண்டாம்

## கோக்லி எச்சரிக்கை

"இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்ததை வைத்து ஒட்டுமொத்த அணியையும் குறைத்து மதிப்பீடு செய்ய வேண்டாம்" என்று எச்சரித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.


இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் லோட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டத்துக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் கோக்லி.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய அணியைப் பற்றி விரைவில் தீர்ப்புக்குத் தாவிவிட வேண்டாம். ஒரு அணியாக நாம் பொறுமை காப்போம். தோல்விகளில், எந்த ஒரு வகைமாதிரியையும் தொடர்ச்சியையும் நாங்கள் பார்க்கவில்லை. இலக்குகள் கொத்தாக விழுவதுதான் பிரச்சனை. இது உத்தி ரீதியான தவறுகளல்ல. இது மனரீதியான பிரச்சனையே.

முதல் 20-30 பந்துகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதில் தெளிவான திட்டமிடுதல் வேண்டும். இந்தத் திட்டம் ஆக்ரோஷமாக ஆடுவதாக எப்போதும் இருக்க வேண்டிய தேவையில்லை. இங்கு எமக்கு நிதானமும் பொறுமையுமே அவசியமே தவிர ஆக்ரோசம் அல்ல.

வெளியிலிருந்து பார்க்கும்போது தோல்வி மோசமானதாகத் தெரியும் குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட். இங்கிலாந்தில் ஆடுகிறோம், இங்கு எப்படிப்பார்த்தாலும் கடினம்தான். ஆனால் பிழைகளை குறைக்க வேண்டும். இதைத்தாண்டி நாங்கள் பெரிதாக கவலையடைய வேண்டியதில்லை.

ஒரு தலைவராக நான் என்னால் முடிந்தவற்றைச் செய்கிறேன். நிர்வாகத்திடமிருந்தும் நிறைய பின்னூட்டங்கள், ஆலோசனைகள் வந்தவண்ணம்தான் உள்ளன. சிலர் ஆட்டத்தை பார்க்கும் விதம் வேறு மாதிரி இருக்கும் அவர்களுக்குச் சொந்தமான கருத்துக்கள் இருக்கும் குறிப்பாக தலைமைத்துவம் பற்றி. ஆனால் நான் வீரர்களுடன் நல்ல தொடர்புறுத்தலில்தான் இருக்கிறேன் என்று உணர்கிறேன் - என்றார். (ம)



# பாரதி கழகம் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஓக்10

சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்திய வடமராட்சி கிழக்கு அணிகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாகர்கோயில் வெண்மதி விளையாட்டுக் கழக மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நாகர்கோயில் வெண்மதி விளையாட்டுக் கழக அணி 8.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக கோகிலன், கவிவாணன், சுகி ஆகியோர் தலா 6 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் உடுத்துறை பாரதி அணியின் சார்பில் கிரிசாந் 3 இலக்குகளையும், வினோத், லக்சன், ஜெகதீஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், துசாந்தன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

47 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணிக்கு முதல் மூன்று இலக்குகளும் 15 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன. பின்னர் ஜானுயனுடன் சுபேஷ் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

பந்துவீச்சில் நாகர்கோயில் கௌசிகன், சுகி, சங்கர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினார்கள். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10

**கூடைப்பந்தாட்டம்**

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாகம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடர் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# மகாஜனா போராடித் தோல்வி

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 12 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் காலிறுதியுடன் தொடரில் இருந்து வெளியேறியது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி. பதுளையில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து பதுளை மத்திய கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்க ப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்திருந்தனர். இதனால் சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பதுளை மத்திய கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# துர்க்கா அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 10

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் துர்க்கா அணி வெற்றி பெற்றது.

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தூர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துர்க்கா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## நாளைமறுதினம் இறுதி ஆட்டம்


இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

முடிவடைந்த நான்கு ஆட்டங்களின் அடிப்படையில் தென்னாபிரிக்க அணி 3:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் நாளைமறுதினம் நடைபெறவுள்ள ஆட்டம் தொடரைத் தீர்மானிக்கும் விதத்தில் அமையப்போவதில்லை. எனினும் 1:4 என்ற அடிப்படையில் தொடரை இழக்காது 2:3 என்ற அடிப்படையிலாவது தொடரை இழக்க வேண்டிய கௌரவச் சிக்கல் இலங்கைக்கு உள்ளதால், இலங்கை அணி இந்த ஆட்டத்தில் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தும் என்றே கருதப்படுகிறது. (ம)

## நடாலுக்கு முதலிடம்

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில் ரபேல் நடால் முதலிடம் பிடித்தார்.

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடரான சின்சினாட்டி ரென்னிஸ் தொடர் கருதப்படுகிறது. இந்தத் தொடரில் பட்டியல் தயாரிப்பதற்கான தரவரிசை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடம் பிடித்தார் நடால். (ம)



## முர்ரேக்குப் பின்னடைவு

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரேக்கு தரப்படுத்தல் வழங்கப்படவில்லை.

அமெரிக்கத் தொடருக்கு முன்னாயத்தத்தொடராக சின்சினாட்டி ரென்னிஸ் தொடர் கருதப்படுகிறது. இந்தத் தொடருக்கான தரநிலைகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரேக்கு தரநிலை வழங்கப்படவேயில்லை. (ம)





### டக்வேர்த் லூயிஸ் முறைப்படி

# இலங்கை வென்றது!

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி மூன்று ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தை வெல்வதை உறுதிப்படுத்திவிட்டது தென்னாபிரிக்கா. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆரம்பம் முதல் மழையின் குறுக்கீடு இருக்கவே செய்தது. ஆட்டம் 39 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 7 இலக்குகளை இழந்து 306 ஓட்டங்களை விளாசியது. அதிகபட்சமாக சானக 65 ஓட்டங்களையும், குசல் பெரேரா 51 ஓட்டங்களையும், திசர பெரேரா 51 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் நெக்டி, டுமினி இருவரும் தலா 2 இலக்குகளையும், பிளுக்வையோ, மல்டர், மகாராஜ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். தென்னாபிரிக்க அணி களமிறங்கும் போது மீண்டும் மழை குறுக்கிட்டது. அந்த அணிக்கு 21 பந்துப்பரிமாற்றங்களில் 191 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தென்னாபிரிக்க அணியால் 187 ஓட்டங்களை எடுக்க முடிந்தது. முடிவில் 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இலங்கை அணி. அதிகபட்சமாக அம்லா 40 ஓட்டங்களையும், டுமினி 38 ஓட்டங்களையும், குயின்டன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லக்மல் 3 இலக்குகளையும், திசர பெரேரா 2 இலக்குகளையும், தனஞ்சய, சானக, டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# திருப்தி அடைய கூடாது கோக்லி


*சச்சின் அறிவுரை*

"இந்திய அணியின் தலைவர் கோக்லி தனது தனிப்பட்ட பெறுபேறு குறித்து ஒருபோதும் திருப்தி அடையக்கூடாது" என்று தெரிவித்தார் முன்னாள் ஜாம்பவான் சச்சின்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி தனது பணியை மிகச்சிறப்பாக செய்து வருகிறார். அதை அப்படியே தொடர வேண்டும். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது, எந்த மாதிரியான விமர்சனங்கள் எழுகிறது என்பதை பற்றி எல்லாம் கவலைப்படாமல், என்னசாதிக்கவேண்டும்என்றுவிரும்புகிறாரோ அதன் மீது மட்டுமே தொடர்ந்து கவனம் இருக்க வேண்டும். இதயம் அதை நோக்கி உங்களை வழி நடத்தட்டும்.

எனது சொந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். கிரிக்கெட்டைப் பொறுத்தவரை எவ்வளவு ஓட்டங்கள் குவித்தாலும் போதாது. நிறைய ஓட்டங்களைச் சேர்க்கும் வேட்கையுடன் கோக்லி ஆடுகிறார். இருப்பினும் அவர் எவ்வளவு ஓட்டங்கள் குவித்தாலும், அது அவருக்கு போதுமானதாக இருக்காது. மனநிறைவு ஏற்படும் போது, அதன் பிறகு சரிவு தொடங்கி விடும். எனவே ஒரு வீரராக ஒருபோதும் கோக்லி திருப்திப்பட்டு விடக்கூடாது. பந்து வீச்சாளர்களால் 10 விக்கெட்டுகளை மட்டுமே வீழ்த்த முடியும். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் அப்படி இல்லை. களம் இறங்கி எத்தனை ஓட்டங்கள் வேண்டும் என்றாலும் எடுத்துக் கொண்டே இருக்க முடியும். எனவே திருப்தி அடைந்து விடாதீர்கள். மகிழ்ச்சியுடன் இருங்கள்" என்று சச்சின் மேலும் குறிப்பிட்டார். (ம)



# கோக்லியின் மனைவி என்றால் அணிக்குள் அலுவல்கள் ஏன்?

## வலைத்தளங்களில் கிண்டல்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்ட ஓர் ஒளிப்படம் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. இந்திய வீரர்களுடன் அணித் தலைவர் கோக்லியின் மனைவி அனுஷ்கா உள்ள ஒளிப்படத்தாலேயே இத்தனை சர்ச்சைகளும் வந்துள்ளன.

இந்திய அணி இங்கிலாந்துக்கு தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த அணியை லண்டனில் அமைந்துள்ள இங்கிலாந்துக்கான இந்தியத் தூதரகம் நேற்றுமுன்தினம் அழைத்து விருந்து வழங்கியது. அதன்போது, ஓர் ஒளிப்படமும் எடுக்கப்பட்டது. இந்திய வீரர்களுடன், அனுஷ்கா சர்மாவும் அந்த ஒளிப்படத்தில் இடம்பெற்றுள்ளார். இதையே இந்தச் சர்ச்சைகளை ஏற்படுத்தி விட்டுள்ளார்கள் சமூக வலைத்தள வாசிகள்.

"இந்திய அணிக்குள் அனுஸ்காவுக்கு என்ன வேலை?", "அனுஸ்கா இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வீரரா?", "கோக்லியின் மனைவி என்றால் சிறப்பு அந்தஸ்து ஏதேனும் உண்டா?", "ஏனைய வீரர்களின் மனைவிமார் எங்கே?", "நடிகை என்றால் அனுஸ்காவுக்கு விதிவிலக்கா?", "அணித் தலைவர் என்றால் விதிவிலக்கா?" என்றவாறாக அமைகிறது வலைத்தள வாசிகளின் கேள்விக்கணைகள். (ம)



**கணினி, சிங்களம்**
* அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
✓ உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்து கற்க முடியும்.
✓ சான்றிதழ்கள் வழங்கப்படும். TP:021-221-5992
New Sky Computer Training Centre

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலைக்கு
தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை.
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பழகவிரும்புபவர்கள்
(உதவித்தொகை 8000/- வழங்கப்படும்.
077 640 1495 / 077 559 0495

EASY WAY English
ரூபா 800 விலைக்கழிவுடன்
முழுமையாக தமிழ்மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஒரேயொரு புத்தகப்பொதி
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்க திரு. ஷாம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட 16 புத்தகங்கள் கொண்ட பாடப்புத்தகப்பொதி!
ஒவ்வொருவர் வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய ஆங்கில பொக்கிஷம்
ஆங்கில ஆசிரியரின் உதவியேதுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் தொழில் புரிவோர்வரை எவருமே சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு Study pack.
இன்றும் நாளையும் (வெள்ளி , சனி ) விலைக்கழிவுடன் பெறமுடியும்.
SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி யாழ்நகர்
021 320 3313
077 1570 486

**சாரதி தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல
தனியார் நிறுவனத்திற்கு சாரதி தேவை.
நேர்முகத் தேர்வு: (13.08.2018)
திங்கட்கிழமை காலை 9.00 - பி.ப. 1.00 மணி
வரை நேரில் சமுகம் தரவும்.
ES PRINTERS
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
0768226240
V2 TRAVELS

# றோமாவை வென்றது ரியல் மட்ரிட்



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான இன்டர்நெசனல் சம்பியன்சிப் கிண்ணத்துக்கான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது.

ஸ்பெய்னின் ரியல் மட்ரிட்டை எதிர்த்து இத்தாலியின் றோமா அணி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்த இரண்டாவது நிமிடத்திலேயே மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் பேல். 15ஆவது நிமிடத்தில் அசென்சியோ வில்லியம்சன் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரியல் மட்ரிட்.

இரண்டாவது பாதியிலும் ரியல் மட்ரிட் கழகத்தின் ஆதிக்கம் நீண்டு சென்றது. 88ஆவது நிமிடத்தில் ஸ்ரோன்மன் கோலொன்றைப் பதிவு செய்ததை அடுத்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி.

ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடிவந்த போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ அந்த அணியில் இருந்து பிரிந்து சென்று இத்தாலியின் யுவென்டாஸ் கழகத்துடன் அண்மையில் ஒப்பந்தமானார். இதனால் ரொனால்டோ இல்லாமல் இந்த ஆட்டத்தை ரியல்மட்ரிட் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பது தொடர்பில் பெரியதொரு எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் பேலின் சிறப்பான ஆட்டத்தில் மூலம் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. (ம)

# பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் ஹசில்வூட், கம்மின்ஸ் இல்லை

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் ஹசில்வூட், கம்மின்ஸ் இருவரும் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் பிறிதொரு டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணி இன்னும் விளையாடவில்லை. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானுக்கு எதிராக இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து எதிர்கொள்கிறது ஆஸ்திரேலிய அணி. சிமித், வோர்ணர் இருவரும் தடை பெற்ற பின்னர் ஆஸ்திரேலிய அணி எதிர்கொள்ளும் முதலாவது தொடராகவும் இந்தத் தொடர் அமைந்துள்ள காரணத்தால் தொடரில் பெரியதொரு எதிர்பார்ப்பு நிலவுகிறது. இவ்வாறிருக்கையில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இருந்து கம்மின்ஸ், ஹசில்வூட் இருவரும் விடுவிக்கப்பட்டனர். முதுகுப் பகுதியில் ஏற்பட்ட வலி இன்னும் முழுமையாகக் குணமடையாத காரணத்தாலேயே இவர்கள் இருவரும் தொடரில் இருந்து நீக்கப்பட்டனர் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ம)

**நூல் வெளியீட்டு விழா**
நா.யோகேந்திரநாதனின்
**இடிபடும் கோட்டைகள்**
காலம் : 11.08.2018 சனிக்கிழமை, பி.ப. 3 மணி
இடம் : நல்லூர் நாவலர் கலாசார மண்டபம்
தலைமை : இராதேயன்
முதன்மை விருந்தினர்கள் :
கௌரவ ஈ.சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
உயர்திரு. நா.வேதநாயகன் (யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்)
சிறப்பு விருந்தினர் :
சி.சத்தியசீலன்
(செயலாளர், கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு)
வெளியீட்டுரை :
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
ஆய்வுரை :
திரு.ஜீவசுதன்
திரு.ஜே.ஆர்.டேவிட்
அனைவரையும் வருகை தந்து உள்ளூர் இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்கின்றோம்.
பக்கங்கள் : 400 விலை : ரூ. 600.00



# ஆசியக் கிண்ணத் தொடரில் சகிப் அல் ஹசன் சந்தேகம்

கைவிரலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்யவுள்ள காரணத்தால் ஆசியக் கிண்ணத் தொடரில் சகிப் அல் ஹசன் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்தமாதம் ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு சகிப் அல் ஹசன் முக்கிய வீரராகக் கருதப்படுகிறார். ஆனால் கைவிரலில் ஏற்பட்ட காயத்துக்கு அவர் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியிருப்பதால் இந்தத் தொடரில் அவர் களமிறங்குவது சந்தேகம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.